# புதுக்கோட்டை ஸமஸ்தான

# யுத்த அறிக்கை நிலயம்.

பிரசுரம்] 1941-ம் ௵ ஆகஸ்டு ௴ 30௳ [ந. 59.

## முக்கியமான நடவடிக்கை.

சென்ற திங்கட்கிழமை டெல்ஹியிலிருந்து இரானில் எடுத்துக்கொண்ட ஆங்கில-ருஷ்ய நடவடிக்கையைப்பற்றி வந்த ஒலிபரப்பில், இந்தியாவுக்கு முக்கியமாயும், யுத்தப்போக்கின் பொதுவான அம்சங்களை விஸ்தாரப்படுத்தியும் இருந்தது. ஆகையால் தான் நமது அறிக்கையில் சாதாரணமாகப் பிரசங்கம் அச்சிடப்படும் முதல் ஸ்தானத்தில் இதைப் பிரசுரிக்கிறோம்.

இதைப்பற்றி விஸ்தாரமாக அடுத்த இதழில் வெளியிடுகிறோம்; ஆனாலும் பிரகிருதத்தில் நேசதேசங்கள் இரானில் எடுத்துக்கொண்ட நடவடிக்கையும், அந்த தேசத்தின் சில முக்கிய அம்சங்களையும்பற்றிச் சொல்லுகிறோம்.

1. கருங்கடல் வழியாக ஜெர்மானியர் முன்னேறிவருவது, முக்கியமாக இரானின் அரசாக்ஷிக்குக் கொஞ்சம் பயத்தை விளைவித்தது. ஏனென்றால் அங்கே ஏற்கனவேயே பலமான ஜெர்மன் ஐந்தாம்படை தாராளமாக உலாவி வந்தது. இப்படிச் செய்வது பின் முகமாக ருஷ்யர்களின் காகேஸஸ் பிரதேசங்களுக்கும், மத்தியக்கிழக்கு, இந்தியா முதலிய பிரிடிஷ் ராஜ்ஜியங்களுக்கும் ஆபத்துத்தான்.

2. பிரிடிஷ்-ருஷ்ய கவர்ன்மெண்டார்கள் இதைத் தடுக்கவேண்டுமென்று இரான் கவர்ன்மெண்டாருக்கு அனுப்பிய எச்சரிக்கைகளுக்கு சரியானபடி இல்லாமலும் தாமதமாயும் அனுப்பிய பதிலிலிருந்து இரான் கவர்ன்மெண்டாருக்கு ஜெர்மானியரை விரட்ட இஷ்டமில்லாமலோ, முடியாமலோ இருந்திருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. நார்வே, ஹாலந்து, பெல்ஜியம், யூகோஸ்லாவியா முதலிய நாடுகள் சீக்கிரமாக நாசமானதிலிருந்தும், இராக்,

ஸிரியாவைக் கைப்பற்ற உத்தேசித்த ஜெர்மானியர் அபஹரணம் செய்வதை நல்ல வேளையாகத் தீங்கு விளையும் முன்பே, தடுத்ததிலிருந்தும் ஷாவும் அவன் அரசாங்கமும் ஒருவித பாடமும் அறிந்துகொள்ளவில்லை. திருஷ்டாந்தங்களும் அநேகமாகப் பயன் படாததினால் பிரிடனும் ருஷ்யாவும் தங்களைக் காபந்து செய்துகொள்ளவே இவ்விதம் செய்ய நேர்ந்தது. அதில் பிரிடன், தான் காப் பாற்றும், பல ஜனங்களுக்காகவும் செய்தது.

3. யூக்ரேனில் மாரிகாலம் ஆரம்பித்துவிட்டதால் ருஷ்யர் முன்னேறுவது தடைபட்டால், துருக்கி வழியாகக் காகேஸஸ்ஸிலுள்ள எண்ணெயைக் கைப்பற்ற ஜெர்மனி பிரயத்தனம் செய்யும். இரானை வசப்படுத்திவிட்டால் துருக்கியைத் தனியாகப் பிரித்துவிடலாம். ஆகையால் இப்போது எடுத்துக்கொண்ட ஆங்கில-ருஷ்ய நடவடிக்கையினால் ஜெர்மானியருக்கு ஒருதடையாக ஆகி, ருஷ்யாவுக்கு சாமான் அனுப்ப மற்றொரு வழி திறக்கப்பட்டது.

4. மிஸ்டர் ரூஸ்வெல்டும், மிஸ்டர் சர்ச்சிலும் ருஷ்யாவுக்கு யுத்த தள வாடங்களை முடிந்த விதமாகவெல்லாம் அனுப்புவதென்று சபதம் செய்து கொண்டிருக்கிறார்கள். அதற்கு மாரி காலத்தில் ஆர்க்டிக் கடல்பாதை சரியான தல்ல, வ்ளாடிவாஸ்டாக் மூலம் அனுப்புவதும் வெகுதூரம் பிடிக்கும். பர்ஸியன் கல்பும், இரானிய தரைமார்க்கமும் வசப்பட்டால் சுலபமாகவே ருஷ்யாவுக்குப் போய்ச்சேரும்.

5. 'அனுக்கிரமணம்' என்று பிரிடிஷ்-அமெரிக்க அறிக்கையில் கண்டிருப் பது சமீபத்திலும், உண்மையிலும் சொன்ன வார்த்தையாகும். ருஷ்ய கவர்ன் மெண்டார் இரானிலிருந்து தங்கள் தேசங்களுக்குப் போவதாகச் சொன்னதும் அதன் பயன்தான். ஆகையால் இரானின் ஸ்வதந்திரத்திற்கு ஜெர்மனியிடமிருந்து தான் ஆபத்து வரக்கூடும். இராக், ஸிரியாவிலுள்ள ஜனங்கள் ஜெர்மானியரால் தாக்கப்பட்ட பிறகு தான், தங்கள் அரசாங்கங்கள் நடுநிலையை வகித்தது. தங்களுக் கும், பொதுமக்கள் க்ஷேமத்திற்கும் குறைவு ஏற்பட்டதை அறிந்தமாதிரி இல்லாமல் முன்னாடியே இரானின் ஜனங்கள் தெரிந்துகொள்ளுவார்கள் என்று நம்புகிறோம்.

6. இதனால் இந்தியாவிற்கும், மற்றுமுள்ள ஹிந்து, கிறிஸ்துவர், முகமதியர் களுக்கும் ஆபத்தில்லை என்று தைரியப்படலாம். இந்த நியாயமான முக்கிய காரியம் இந்தியர்களுக்கு ஒப்படைத்ததிலிருந்து இந்தியர்கள் சந்தோஷப் படலாம். ஜெர்மானியரும் அவர்களால் ஏமாற்றமடைந்த பாரஸீகர்களும் தான் எதிர்க்கப்படவேண்டும். ஆனால் தன் மதத்தினர்களாகிய முஸ்லீம்களும் இதர வியாபாரிகளும் ஸ்வதந்திரத்தைக் காப்பாற்றிக்கொள்ள ஒதுங்கி நிற்பார்கள். இந்தியத் துருப்புகள் ஜெர்மானியரையும் அவர்களால் ஏமாற்றப்பட்டவர்களையும் ஈவு இறக்கமில்லாமல் எதிர்த்தும் இதர முகமதியர்களை ஸ்வதந்திர லக்ஷியமுடைய தன் மதத்தினர்களுக்கு நேயமாய் இருப்பார்கள்.

# இரானைப்பற்றிய விவரங்கள்.

## 1. அமைப்பும் சீதோஷ்ணமும்.

இரானை மூன்று தனிப்பட்ட பிரதேசங்களாகப் பிரிக்கலாம். அவையாவன :— வடக்கில் காஸ்பியன் மாகாணங்கள், உயரமுள்ள மத்திய பீடபூமி, பர்ஸியன் வளைகுடா பிரதேசம்.

(a) **காஸ்பியன் மாகாணங்கள்.**—இந்தப் பிரதேசம் பூராவும் பள்ளத்தாக்காகவும், எளிதில் அதனுள் பிரவேசிக்க முடியாதபடி அவ்வளவு தன்மையில் மரஞ்செடிகள் அடர்ந்த பெரிய காடுபோல் இருக்கிறது. கரையோரங்களில் காற்றினால் அலைகள் அடித்து அநேக மணல் குன்றுகள் வரிசை வரிசையாக இருக்கின்றன. அநேக சிற்றருவிகள் அங்கு பரவிச் செல்வதால் கடல் புகும் குட்டைகளும், சேற்று நிலங்களும் ஏற்பட்டிருக்கின்றன. அதன் சீதோஷ்ணமும், மழையும் எப்பொழுதும் மிதமாகவே இருக்கிறது. ஜுன் மாதம் முதல் ஸெப்டம்பர் மாதம் முடிய ஈரக் காற்றும் பனியும் பெய்வதால், அங்கு வசிப்பதற்கு முடியாதபடி கொசு சதுப்பு நிலங்களில் ஏராளமாக மொய்க்கின்றன. நவம்பர் மாதத்திலிருந்து ஏப்ரல் பாதிவரை சீதோஷ்ண ஸ்திதி மிதமாயும் சுகத்தைத் தருவதாயும் இருக்கிறது.

(b) **மத்திய பீடபூமி.**—இது இரானின் மூன்றில் இரண்டு பங்கு விஸ்தீர்ணமுள்ளது. அது 3,000 அடியிலிருந்து 4,000 அடிவரை அதிக உயரமுள்ளவை. அநேக சம வரிசைகளாக மலைகள் வடமேற்கிலிருந்து தென்கிழக்குவரை இருக்கின்றன. அதனால் இரானின் பெரும்பாகம் மலைப்பிரதேசமே. சில மலைகள் 100 மைல் வரையிலும் வியாபிக்கின்றன. அவைகளின் உயரம் சராசரி 8,000 அடி. ஆனால் சிற்சில இடங்களில் 15,000 அடி உயரமிருக்கிறது உண்டு. இந்த பீடபூமியின் மத்தியில் வடமேற்கிலிருந்து தென்கிழக்குப் பார்சமாக 800 மைல் நீளமும், 100 மைல் முதல் 300 மைல் வரை அகலமுமுள்ள ஒரு பெரிய பாலைவனப் பிரதேசம் இருக்கிறது. கிராமாந்திரங்கள் வெரும் பொட்டல்; ஒன்றும் விளையக்கூடாத இடம். மாரிகாலத்தில் ஜாஸ்தியாகப் பனி பெய்வதால், மலைப் பிரதேசங்களில் புல் பூண்டு உண்டாகி ஆடுமாடுகள் மேய்வதற்குச் சாதகமாய் இருக்கும். இதனால் பள்ளத்தாக்குகளின் வழியாய் அநேக வேகமாய்ச் செல்லும் சிற்ருறுகள் ஓடுகின்றன.

மாரிகாலத்திலும், கோடைகாலத்திலும் சீதோஷ்ணம் அதிகமாயிருக்கும். அங்கு உஷ்ணமும், குளிரும் ஜாஸ்தி. மொத்தமாக மழையில்லாமலும், சுத்தமாகவும், உலர்ந்தும், சாந்த ஆகாச வெளி ஸ்பஷ்டமாயும், மேகங்கள் இல்லாமலும் சரீர புஷ்டியைக் கொடுக்கக்கூடியதாயும் இருக்கும். டிஸம்பர் மாதம் முதல் பிப்ரவரி வரை பனி ஏராளமாகப் பெய்கிறது. அது ஜுன், ஜுலை மாதங்கள் வரை மலையின் உச்சியில் உரைந்துபோய் நின்றுவிடுகிறது. அங்கு பருவகாலங்கள் திடீரென்று மாறுதல் அடைகின்றன; ஜுலையும், ஆகஸ்டும் தான் கடுமையான கோடைகாலம். அப்பொழுது சீதோஷ்ணம் சராசரி 105 டிகிரிவரையிருக்கும்.

அக்காலத்தில் ஏராளமான தூசியும், வெப்பமும், ஏராளமான மணலில் மொய்க்கும் ஈக்களும் கோடைகாலத்தில் மிகவும் தொந்தரவாகயிருக்கும். மழைப் பருவம் மாறி மாறிவரும். மொத்தத்தில் மழைமிக சொற்பம்தான், அதுவும் பொதுவாக நவம்பர் மாதத்தில்தான் பெய்கிறது.

(c) **பர்ஸியன் வளைகுடா.**—அதன் பிரதேசம் பூராவும் வண்டல் மண் நிறைந்த சமவெளியாக வெகுதூரம் வரை விஸ்தீர்ணத்தில் பரவியிருக்கிறது. ஒரே ஒரு இடத்தில் மட்டில் 30 மைல் நீளம் வரை வியாபித்திருக்கும் சராசரி 200 அடி உயரமுள்ள மணல் குவியல்கள் குறுக்கிடுகின்றன. இது அநேகமாய் பாலைவனமாகவே தோன்றும். சிற்சில இடங்களில்மட்டும் சாகுபடிக்கு லாயக்காய் இருக்கின்றன. கடற்கரை சமவெளிக்கும், மத்திய பீடபூமிக்கும் இடையில் மலைப்பாங்குப் பிரதேசம். அதற்கு பக்தியரி மலை என்று சொல்வதுண்டு. அந்தப் பிரதேசத்தில் மோட்டார்கள்கூட போவது துற்லபம்.

ஜூன்மாதம் முதல் ஸெப்டம்பர் வரையிலும் உஷ்ணம் சகிக்கமுடியாது. அங்கு அடிக்கும் ஈரக் காற்றும் சேர்ந்து சீதோஷ்ண ஸ்திதியை சகிக்க முடியாமல் செய்துவிடுகிறது. டிஸம்பர், ஜனவரி, பிப்ரவரி மாதங்கள் அசாத்தியமான குளிர்காலம். நவம்பர் முதல் பிப்ரவரி வரை மழைகாலம். சராசரி 5 அங்குலம் மழைபெய்யும்.

## 2. ஜனத்தொகை.

இரானின் ஜனத்தொகை மொத்தத்தில் ஒரு கோடி. அவற்றில் குர்ட்ஸ், லூர்ஸ், பக்தியாரிஸ், குயாஷ்கெய்ஸ், குர்கிலஸ் ஆகிய பல தனிப்பட்ட இரானிய ஜாதியர்கள் அடங்கியிருக்கிறார்கள். அச்சாதியர்களுக்கு தனித்தனி பாஷைகளும் உண்டு. ஜனத்தொகையில் முக்கால்பங்கு விவசாயிகள். பாக்கியுள்ளோர் நகரவாசிகள்; அவர்கள் சிலர் வியாபாரிகள், சிலர் தொழிலாளிகள்.

இரானியர்களின் பெரும்பாகம் ஷியா வகுப்பைச் சேர்ந்த முகமதியர்கள். ஆனால் குர்ட்ஸ் ஜாதியார் பெரும்பாலும் சன்னி வகுப்பைச் சேர்ந்தவர்கள். 1499-ம் ஆண்டுமுதல், இரான் தேசத்தில் ஷியா வகுப்பையே அரசாங்க மதமாக கருதப்பட்டு வருகிறது. அராபியர்கள் இரானைப் பிடிக்கும் முன் ஸ்வராஸ்டர் மதம்தான் ஆதி மதம். இரானியர்களை முகமதியர்கள் அநேக நிர்பந்தத்திற்குள்ளாக்கவும், அவர்களில் பலர் இந்தியாவுக்கு வந்து குடியேறினார்கள். இவர்கள்தான் இப்பொழுதும் சொல்லப்படும் பார்ஸி ஜாதியார்.

## 3. பட்டணங்கள்.

இரானில் முக்கியமாக நான்கு பெரிய பட்டணங்கள் இருக்கின்றன. அவைகளில் ஒவ்வொன்றிலும் லக்ஷம் ஜனங்களுக்கு மேற்பட்டே வசிக்கிறார்கள். (5,00,000) மேற்பட்டே ஜனங்களடங்கிய இரானின் தலைநகராகிய "டாஹரன்", உலகத்திலேயே விரிப்புகளுக்குப் பேர்பெற்ற "டாபிரஸ்", (2,00,000) நல்ல வியாபார ஸ்தலமான "இஸ்பஹான்" (1,03,000) ஷியா முகமதியர்களுக்கு க்ஷேத்திரமாய் விளங்கும் மெஷட் (1,25,000) ஆகிய இவைகள்தான். முகமதிய உலகத்திற்கே பேர்வாய்ந்த புண்ணிய ஸ்தலம், இரானிலுள்ள இந்தப் பட்டணம்தான்.

இதர முக்கியமான இடங்களில், ஆவாஸ் என்னும் நகரம் தெற்கு ரெஷ்டு பிரதேசத்திற்குத் தலைநகர். அதன் துவாராகத்தான் காஸ்பியன் கடல் வியாபாரம் பூராவும் நடக்கிறது. மற்றுமுள்ளவை அடியில் குறிப்பிட்டிருக்கும் துறைமுகங்கள்.

## 4. துறைமுகங்கள்.

பர்ஸியன் வளைகுடாவில் இரானின் முக்கிய துறைமுகங்கள் பண்டர் ஷாபூர், சோராம்ஷார், அபடான், புஷைர், கடலுக்கு 30-மைல் தூரத்திற்கப்பால் பண்டர்-ஷாபூர் இருக்கிறது. அது ட்ரான்ஸ்-இரேனியன் இருப்புப் பாதையின் தெற்குக் கோடி. கொரம்ஷார் துறைமுகம்தான் இரானியக் கப்பற்படையின் முக்கிய ஸ்தலம். அபடான் என்பது ஒரு எண்ணெய் ஏற்றுமதி செய்யும் துறைமுகம். அங்குதான் ஆங்கில-இரானிய எண்ணெய்க் கம்பெனியார் எண்ணெய் சுத்தம் செய்கிறார்கள். அது தற்காலத்து நாகரீக இங்கிலீஷ் கைத்தொழில் பட்டணம் போல் இருக்கிறது. காஸ்பியன் கடல் பக்கத்தில் பால்வி என்பது முக்கிய துறைமுகம். இன்னும் ட்ரான்ஸ்-இரேனியன் இருப்புப்பாதைக்கு வடக்கெல்லையாயுள்ள நாஷார், பந்தர்ஷா என்ற துறைமுகங்கள் இருக்கின்றன.

## 5. இருப்புப்பாதைகள்.

ட்ரான்ஸ்-இரானியன் இருப்புப்பாதை வடக்கில் பண்டர் ஷா-விலிருந்து தெற்கே பண்டர் ஷா பூர் வரை இந்த தேசத்தில் 868 மைல் நீளத்தில் குறுக்கே செல்லுகிறது. மலைப்பாங்கான பிரதேசம் வழியாக வெகுதூரம் இந்த இருப்புப் பாதை தேற்சியடைந்த இஞ்சினியர்களால் மிகவும் சிரமப்பட்டு போடப்பட்டிருக்கிறது. இது போகும் வழியில் கிளைப்பாதைகள் கிடையாது. டாஹ்ரனிலிருந்து வடமேற்கில் ஸின்ஜான்வரை ஒரு கிளைப்பாதை செல்லுகிறது. அது ருஷ்யன் எல்லையிலிருந்து டாபிரஸுக்கு செல்லும் இருப்புப்பாதையுடன் சேர்க்கப்படும். இதிலிருந்து மெஷட் என்ற பட்டணத்துக்குச் செல்ல ஒரு கிளைப்பாதை போடப்பட்டுவருகிறது. அந்தப் பாதை இப்போது ஷாக்ரட்வரை இருப்புப்பாதை வந்திருக்கிறது.

## 6. ரோடுகள்.

இரானிய கவர்ன்மெண்டார் பட்டணத்தில் நல்ல வசதியான ரோடுகள்போட முக்கிய ஏற்பாடுகள் எடுத்துவருகிறார்கள். எங்கு பார்த்தாலும் மலைப்பிரதேசங்களால் சூழப்பட்டாலும், அதிக சிரமத்தின்பேரில் பெரிய, முக்கிய இடங்களுக்கு ரோடுகள் போடப்பட்டிருக்கின்றன. காஷ்வின்-டாஹ்ரன்-கம்-ஹாமடான் என்ற நாலு பட்டணங்களிலும் சம்மதித்துக்கொண்டு தேசம் பூராவிலுமுள்ள இதர இடங்களுக்குப் பாதைகள் போடப்பட்டிருக்கின்றன. இரானுக்குச் செல்லக் கூடிய வழிகளாவன :—

**(a) ட்ரான்-காஸ்பியன் இருப்புப்பாதையிலிருந்து.**—மெர்வ் முதல் ஸாராக்ஸ் வரையிலும் ஒரு இருப்புப்பாதை செல்லுகிறது. அதன்பிறகு மெஷட்டின் வழியாய் டாஹ்ரனுக்கு ஒரு பாதை செல்லுகிறது. இத்தேசத்தின் முக்கியமான பாகத்திற்குச்செல்ல இது ஒரு சுற்றுவழி.

(b) **காஸ்பியன் துறைமுகங்களிலிருந்து.**—பண்டர் ஷா, நாஷர், பக்லவி என்ற துறைமுகங்கள் மேற்சொல்லிய நாலு பட்டணங்களுடன் ரோடுமூலம் சேர்க்கப் பட்டிருக்கின்றன.

(c) **காகேஸஸின் வழியாக.**—ஜுல்பாவிலிருந்து டாபிரஸ் வரையில் இருப்புப் பாதையும் ரோடும் இருக்கின்றன. அதிலிருந்த நல்ல பாதை ராஸ்வினுக்குப் போகும் கெர்மன்ஷாவுக்கும் ஹாமாடானுக்கும் அவ்வளவு நல்ல பாதை கிடையாது. உருமியா என்ற ஏரியின் மேற்குக் கரை வழியாக ரோடு வழியாகவே ஜுர்பாவுக்குச் செல்லலாம். இது ஹெயிடராபாட், கெர்மன்ஷா மூலமாகச் செல்லும்.

(d) **அனடோலியாவிலிருந்து.**—எர்ஸரோமிலிருந்து மாகூவுக்கும், டப்ரிஸுக்கும் சரியான பாதை இல்லை.

(e) **இராக்கிலிருந்து.**—மூன்று பெரிய பாதைகள் இராக்கிலிருந்து வருகின்றன. வடக்கே ரோவன்டூஸிலிருந்து ஹெயிடராபாடுக்கும் நடுவில் கானிக்கினிலிருந்து கெர்மன்ஷா, ஹாமடனுக்கும், மூன்றுவதாக பாஸ்ராவிலிருந்து கொரம்ஷா, ஆஹ்வஸுக்குச் சென்று ஹாமடான், டாஹ்ரனுக்கும் செல்லுகிறது.

## 7. எண்ணெய்.

இரானிலுள்ள எண்ணெய் பிரதேசங்களை 1993 முடிய ஆங்கில-இரானிய கம்பெனிக்கு குத்தகைக்கு விடப்பட்டிருக்கிறது. இவை பர்ஸியன் வளைகுடா ஆரம்பத்தில் தெற்கு அரபிஸ்டான் பொட்டல்களில் இருக்கின்றன. நப்டி-இ-ஷாவிலும் இராக்-இரானிய எல்லையிலும், பாக்தாத்திற்கு வடமேற்கிலும் இன்னும் ஒரு சிறிய எண்ணெய்ப் பிரதேசம் இருக்கிறது. இந்த இரண்டு எண்ணெய் கிணறுகளிலிருந்து, அபடன், கெர்மன்ஷாவாவிலுள்ள எண்ணெய் சுத்திசெய்யும் இடத்திற்குக் குழாய்கள் இருக்கின்றன. நப்டி-இ-ஷா சுரங்கமும் 'கானிக்கின் இடத்துடன் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இவ்விதமான எண்ணெய் தொழிலால் இரானுக்கு 40,00,000 பவுன்கள் வருஷத்திற்கு வரும்படி. மொத்த வரும்படியில் இது 100-க்கு 10. இதில் இரானியர்கள் உயர்ந்த சம்பளம் பெருகிறுர்கள், ரயில்வண்டிகளும் சல்லிசாக எண்ணெய் பெற்றுக்கொள்ளுகின்றன. அபடன் எண்ணெய் சுத்திசெய்யும் இடத்தில் மட்டில் 1937-ல் 1,00,00,000, டன் எண்ணெய் என்று சொல்லப்பட்டது. இது தான் கிழக்கு நாடுகளிலுள்ள பெரிய எண்ணெய் சுத்திசெய்யுமிடம்.

## 8. பொருளாதார நிலைமை.

சில வருஷங்களாக இரானின் பொருளாதார நிலைமை திருப்தியாகயில்லை. விளைபொருள்களையும், தொழிற்சாலைகளையும் போக்குவரத்துகளையும் அபிவிருத்தி செய்ய ஷா முயற்சித்தால் வெளிநாடுகளிலிருந்து சில சர்மான்கள் வரவேண்டியதாயும் வரிவிகிதம் அதிகப்படுத்தவேண்டியதாயும் இருந்தது. தினசரிச் செலவும் அதிகப்படுத்த வேண்டிவந்தது. சில சமயங்களில் உணவுப்பொருள்களும்

குறைந்தன. 1941-ம் வருஷம் வந்த பஞ்சம் இந்தியாவிலிருந்து வந்த ஏராளமான கோதுமை வந்ததால் பஞ்சம் நிவர்த்திக்கப்பட்டது. நாணய மாற்றம் ரூபாய்க்கு ஐந்து ரியல் வீதம் வரையறுக்கப்பட்டிருந்தது. ரூபாய்க்கு 14 ரியல் வீதம் மாற்றவும் முடியும்.

### 9. சைனியம்.

இரானியச் சைனியம் 1,26,000 தலைவர்கள் கொண்டது. 18 பிரிவுகளும் யந்திரப்படையும் இருக்கிறது. நவீன ராணுவ முஸ்தீப்பும் இருக்கிறது. யுத்தங்களில் இதுவரை உபயோகப்படுத்தப்படவில்லை. ருஷ்யச் சைனியம் போலவே இதன் திறமை ஒருவருக்கும் தெரியாது.

125 விமானங்கொண்ட ஒரு சிறு விமானப்படை இருக்கிறது. பர்ஸியன் வளைகுடாவில் நிறுத்தப்பட்டு சில சிறு கப்பல்களும் இருக்கின்றன. இக்கப்பல் உத்தியோகஸ்தர்களுக்கு இதாலியர் பயிற்சி அளித்தார்கள்.

---

பிரஸங்கம் 59.

# விமான யுத்தம்.

## பிரிடன்மீது நடந்த யுத்தம்முதல் ஜெர்மனி தற்போது தாக்கப்படும்வரை.

சென்ற வருஷம் பிரிடன்மீது நடந்த யுத்தம்போல ஜெர்மனியின்மேல் நடைபெறுமா? விமானச் சண்டையில் அனுபவம் வாய்ந்த சில அனுகூலவாதிகள்—எல்லாம் நமது நன்மைக்குத்தான் என்ற நம்பிக்கையுள்ள நிபுணர்கள்—இதை ஆமோதிக்கின்றனர். முன் ஜாக்கிரதையான வேறு சிலர், சென்ற வருஷத்தைவிட அதிகமாக வரும் சரத் காலத்தில், நாஸிப் படையெடுப்பை பிரிடன் எதிர்பார்க்கவேண்டுமென்று சொல்லுகின்றனர். மற்றும் சிலர் இதுவரை நடந்த சண்டைகள் எப்படியானாலும், இனிமேல்தான் பிரிடிஷ் விமானங்களின் நிஜ பலத்தைக் காட்டவேண்டிய சமயம் வருமென்கிறார்கள். ஆனால் முன் நடந்த சண்டைகள் பிரிடிஷ் விமானங்களுக்கு அநேகமாக சாதகமாகத்தானிருந்தன. கடைசியில் சொன்ன கக்ஷியார்கள், ஏதோ லுப்ட்வாபிப் படை இதுவரை அதன் முழு பலத்தையும் காட்டவில்லையென்றும், இருவரும் வெற்றி கிடைக்கும்வரை கைகலந்து விமான யுத்தம் செய்யவேண்டுமென்றும் சொன்னார்கள். இதற்கு முன், விமானங்கள் கீழிருக்கும் லக்ஷியங்களையே தாக்கிவந்தன. இனிமேல் எதிரி விமானங்களுடன் சண்டைசெய்யவேண்டுமாம்.

உண்மையில் எந்த அபிப்பிராயம் சரியானதென்று தீர்மானிப்பதற்குள், பிரிடிஷ் விமானப்படைக்கும் ஜெர்மன் லுப்ட்வாபிக்கும் உள்ள முக்கிய வித்தியாசங்கள் கவனிக்கத் தக்கதாகும். பிரிடிஷ் விமானங்கள், கடல், தரைப்படை-

களுடைய சம்பந்தமில்லாமலே யுத்தம் செய்யக்கூடிய அம்சம் உள்ளது. லுப்ட்வாபியோ ஜெர்மன் சைனியத்திற்கு ஒரு அங்கமாக உபயோகப்படுகிறது.

விமானங்களால், எதிரியைக் கண்டுபிடித்து, எங்குசென்றாலும் துரத்தி நாசம்செய்யும் முறை பிரிடிஷ்காரர்கள் செய்த புது தந்திரம். இந்த ஏற்பாட்டின்படி கடற்படையும், தரைப்படையும் சம்பந்தப்படாமல் விமானங்கள் தனியே எதிரியை நோக்கித் தாக்குவதால், நாஸிகளின் யுத்த முயற்சிகளெல்லாம் நாசமாக்கப்படுகின்றன.

ஆனால் பிரிடிஷ் விமானங்கள் மற்ற சைனியப் பகுதிகளுடன் சேர்ந்து கொள்ளவில்லை என்பது அல்ல—டங்கர்க், லிபியன் கடற்கரை மடபன், பிஸ்மார்க் என்ற கப்பலைத் துரத்துவது முதலிய சண்டைகளில் எல்லாப் பகுதிகளும் சேர்ந்துதான் ஒத்துழைத்தன. தனியாக விமானப்படை தன் இஷ்டப்படி தனக்கு முடிந்தவரை சண்டை செய்யும்படி சமீபத்தில்தான் ஏற்படுத்தப்பட்டது. கப்பல்களுக்கு உதவிக்காக கடல் விமானங்களும், நிலப்படையுடன் ஒத்துழைக்க பிரத்தியேக விமானங்களையும் வெவ்வேறுவிதமாக அமைத்தவுடன் ஆர். ஏ. எப். என்ற விமானப்படை சுயேச்சையாக, தகுதியுள்ள தந்திரங்களைக் கையாளும்படி பிரிக்கப்பட்டது.

ஜெர்மனி அடைந்த வெற்றிகளுக்கெல்லாம் லுப்ட்வாப்தான் முதல் காரணமாகச் சொல்லப்பட்டது. ஆனால் நிஜமான வெற்றி தரைப்படைதான் சம்பாதித்துத் தருகிறது. விமானங்கள் உபபலமாக இருந்து எதிரிமேல் பறந்து சைனியத்தைச் சின்னபின்னப் படுத்தி, பொதுமக்களையும் கலங்கச் செய்கிறது. எதிரி விமானங்களுடன் சண்டை செய்ய விரும்புவதில்லை, எதிரி விமான பலத்தைக் குறைக்கவும் தந்திரம் போதாது. கடுமையாக மட்டும் தாக்கும்.

ஆனதால் பொதுவாகப் பேசுகையில் பிரிடிஷ் விமானங்கள் தனியே எதிரி விமானங்களுடன் சண்டை புரியவும், ஜெர்மன் லுப்ட்வாப் சைனியங்களின் உதவிக்காகவும் ஏற்பட்டது என்றும் சொல்லலாம்.

## நாளதுவரை ஜெர்மன் வெற்றிகள்.

லுப்ட்வாப் படையினால் அதிக வெற்றிகள் அடைந்திருக்கிறார்கள் என்பது உண்மைதான். யுத்த ஆரம்ப காலங்களில் போலந்தில், எதிரி மீளமுடியாதபடி ஜெர்மானியர் தாக்கினார்கள். ஹாலந்து, டென்மார்க் இடங்களிலும், பிரான்ஸிலும் ஈட்டிபோல் இப்படை பாய்ந்தது. பெல்ஜியன், டச்சு, பிரெஞ்சு சேனைகளெல்லாம் ஏராளமான ஜெர்மன் விமானங்களுக்கு அடியில் தவிடுபொடியாயின. பிரான்ஸிலிருந்த பிரிடிஷ்படை இதை ஒதுக்கிக்கொண்டு பிரிடன் வந்துசேர்ந்தது. நார்வே, கிரீஸ், கிரீட் முதலிய இடங்களில் நேசதேசச் சைனியம், லுப்ட்வாப் ஆகாயத்தைக் கவர்ந்து இருந்ததால் நாலா பக்கங்களிலும் தாக்குண்டது.

இப்படியாக அநேக யுத்தங்களில் வெற்றிமேல் வெற்றியை அடைந்து ஜெர்மன் விமானப்படை தன் காரியத்தை ஸ்தாபித்து வந்தது. ஆனால் நிஜமாக

இவை வெற்றியாகா. அபஜயமில்லாத தொடர்வெற்றியை அடையவில்லை; வேறு விமானப்படை தன்னை எதிர்க்காதபோது தான் இது வெற்றியடைந்தது.

## நம்பிக்கை துரோகமும் பயங்கரச் செய்கையும்.

உதாரணமாக போலந்தை எடுத்துக்கொள்வோம். அங்குள்ள விமானப் படை எண்ணிக்கைக் குறைவானபோதிலும் ஜெர்மன் விமானங்களுக்கு எதிராக சண்டை செய்யும் திறமை வாய்ந்தது தான். இருந்தாலும் தோற்கடிக்கப்பட்டது. இதற்குக் காரணம், 1939-ம் வருஷம் செப்டம்பர்-மீ 1-ம் வ, ஒரு விதமான அறிக்கையும் அனுப்பாமல் போலந்துக்குச் சொந்தமான விமான நிலயங்களைக் கடுமையாகத் தாக்கி, தரையிலேயே இருக்கும்பொழுது போலிஷ் விமானங்கள் தாக்கப்பட்டது தான். அதனால் எதிரிகளை எதிர்க்கமுடியவில்லை. பட்டணங்களும், கிராமங்களும் களவீடுகளும் குண்டுகளால் தாக்கப்பட்டு பொதுமக்களும் பீரங்கிகளால் நாசமடைந்தனர்.

இப்படியாகத்தான் ஜெர்மனிக்கு புகழ் ஏற்பட்டது. இந்தக் கபடச் செய்கைகளுக்குச் சரியானபடி பிரிடிஷ் விமானங்களை ஓட்டிச்சென்று அதே போலிஷ் விமானிகள் இப்பொழுது பழிக்குப்பழி வாங்கிவருகிறார்கள்.

## ஜெர்மன் விமான உதவியும் அதனால் ஏற்பட்ட முடிவும்.

ஹாலந்திலுள்ள ராட்டர்டாமிலும் ஜெர்மன் விமானப்படையான லுப்ட்வாப் பெயர் வாங்கியது. அங்கே 1940-ம் வருஷம் மே-மீ 14-ம் வ பாதுகாப்பு முஸ்தீப் பில்லாத சமயத்தில் ஸ்திரீ, புருஷர்கள், குழந்தைகள் அடங்கிய 30,000-பேர்கள் 30 நிமிஷங்களுக்குள் நாசமாக்கப்பட்டனர். இதே மாதிரி மற்ற டச்சு நகரங்களிலும் செய்வார்களென்று டச்சு சேனைத்தலைவர் பயந்து சண்டையை நிறுத்தி விட்டார். இதே மாதிரி லுப்ட்வாப், வெற்றிகளுக்கு ஒரு முக்கிய காரணமாக இருந்து பெல்கிரேட்டில் இரண்டாவது வெற்றிபெற்றது.

இதற்கெல்லாம் ஜெர்மன் விமானிகளைக் குறைசொல்லுவது சரியல்ல. வெற்றியடைவதற்கு என்று தயார்செய்யப்பட்ட ராணுவத்தின் ஒரு பாகமாகத்தான் அவர்கள் இருக்கிறார்கள். அந்த ராணுவ முறையோ சிப்பாய்களல்லாத பொது மக்களையும் கொல்லலாமென்ற கொள்கையுடன் கூடியது. இத்தகைய தீர்மானம் கொண்டு ஜெர்மானியர் படையெடுத்ததால்தான் ஜனங்கள் நாசமடைந்து சைனியங்கள் கைப்பற்றப்பட்டு விஸ்தாரமான தேசங்களும் ஜெர்மன் ஆளுகைக்கு வந்துகொண்டிருக்கின்றன. ஆகையால் தான் ஐரோப்பிய நாடுகளைப் பிடித்து பலமடைந்ததாக ஹிட்லரும் கோயரிங்கும் சந்தோஷம் கொண்டார்கள்.

பொதுமக்களை எதிர்ப்பதாலும் விமானங்களின் கபடத் தந்திரத்தினாலும் மாத்திரம் இவ்வெற்றிகளை அடையவில்லை. சரியான முறையில் தரைப்படையுடன் கலந்துகொண்டும் சில முக்கிய வெற்றிகள் அடைந்திருக்கின்றன. நார்வேயையும் பிரான்ஸையும் நாஸித் தரைப்படை எதிர்க்கும்பொழுது லுப்ட்வாப்

விசேஷமாக உதவிற்று. விசேஷமாக பிரான்ஸில் இதன் உதவி அதிகம். பொது மக்களைத் தாக்கியது மிகவும் இழிவான போதிலும் ஜயத்தை அடைய இதன் உதவி நாடப்பட்டது.

## பிரான்ஸில் நேர்ந்ததென்ன?

இதுவரை அடைந்த வெற்றிகளுக்குள் பிரான்ஸில் தான் ஜெர்மனிக்குப் பெரியவெற்றி கிடைத்தது. அதில் ஜெர்மன் விமானங்கள் மிகவும் கடுமையான பிரெஞ்சு எதிர்ப்பை நோக்கிப் போராட வேண்டியிருந்ததா?

சில பிரிடிஷ் பாம்பர் விமானங்கள் ஜெர்மன் விமானங்களை எதிர்க்காமல், ஜெர்மனியிலுள்ள ராணுவங்களைச் சுலபமாகத் தாக்குவதற்கு பிரான்ஸில் இருந்தன. பிரான்ஸ், ஜெர்மனிக்கு பிரிடனைவிட சமீபத்தில் இருப்பதால் பிரெஞ்சு தளங்களிலிருந்து சுலபமாய்த் தாக்கமுடியும்.

இன்னும் சில பிரிடிஷ் விமானங்கள், பிரிடிஷ் நிலப்படைக்கு உதவி செய்தன. ஆனால் போதுமானபடியில்லாததால் பிரயோஜனப்படவில்லை. பிரெஞ்சுக்காரர்களுக்கும் போதுமான விமானங்கள் இல்லாததாலும், பிரிடிஷ்படை பெரியதாயும், தயாராகவும் இல்லாததாலும் நாஸிகளின் விமான, தரைப்படைகள் கலந்து பிரிடிஷ்படையைத் தாக்கின. பிரான்ஸிலும் இன்னும் மற்ற அரங்கங்களிலும் சில வெற்றிகள் ஜெர்மனிக்கு, புது தந்திரமான மின்னல் படையெடுப்பினால் கிடைத்தது உண்மைதான். ஆனால் இன்னும் யுத்தத்தை ஜயித்தாகவில்லை.

நாஸிகள் பிரான்ஸ் மூலம் செல்லும்பொழுது பிரிடிஷ் கனவெடிவிமானங்கள் பிரெஞ்சு தளங்களை விட்டு பிரிடன் வந்து அங்கிருந்துகொண்டு ஜெர்மன் தளங்களைத் தாக்கின. பிரிடிஷ், பிரெஞ்சு சிறிய விமானங்கள் எண்ணிக்கைக் குறைவினால் எதிரிகளிடமிருந்து மீள முடியவில்லை. இருந்தாலும் தைரியமாக எதிர்த்து நின்றன.

## லுப்ட்வாபியின் முதல் தோல்வி.

டங்கர்க்கில்தான் லுப்ட்வாப் முதல் முதலில் தோல்வியடைந்தது. ஹிட்லரின் விமானிகள், பிரிடிஷ் சிப்பாய்களைத் தோற்கடித்து சைனியங்களால் சூழ்ந்திருக்க வேண்டியதுதான். ஆனால் அப்படி ஒன்றும் செய்ய முடியவில்லை. ஏனென்றால் பிரிடிஷ் நிலப்படை முறிபடவில்லை. மேலும் பிரிடிஷ் விமானங்கள்—முட்டுக்கட்டை, ஹரிகேன், எரி விமானங்கள் ஜெர்மன் தொந்தரவைக் குறைத்து விட்டன.

அச்சமயத்தில் பிரிடிஷ் பைடர் விமானங்களும் இங்கிலாந்தின் நிலயங்களுக்கு வந்துவிட்டன. அவை சமுத்திரத்தைத் தாண்டி, அஞ்சல் புரிந்து, நிலப்படையை எதிரி விமானங்களிலிருந்து காப்பாற்றியது. இதுதான் சரித்திரத்திலேயே முதல் முதலாக நடந்த விமானப் போர்.

முடிவில் பிரிஷ்டி விமானப் படைக்குத்தான் வெற்றி. இதற்கு அறிகுறியாகத் தான் நிலப்படையை பத்திரமாகக் காப்பாற்றி பிரிடன் கொண்டுவந்து சேர்த்தது. இதைவிட மற்றொன்று கவனிக்கத்தக்கது. சரியான சந்தர்ப்பங்களில் வேலை செய்யும் ஏராள பைடர் விமானங்கள் தங்கள் தளங்களிலிருந்து வெகுதூரம் சென்று ஜெர்மன் பாம்பர்களையும் பைடர் விமான்ங்களையும் பாழாக்கின. ஒரே நாளில் 78 நாஸி விமானங்கள் கைப்பற்றப்பட்டதாக பிரிடிஷ் அதிகாரிகளால் கணக்கிடப்பட்டிருக்கிறது. 200 என்றும் சொல்லுகிறார்கள். இக்காரணங்கள் பற்றி டங்கர்க் விமான யுத்தத்தில் பிரிடிஷ் விமானங்களின் உயர்வு மேலானது, அவ்வுயர்வு நாளது வரையில் குறையாமல் இருக்கிறது.

## டங்கர்க்குக்குப் பிறகு.

இதற்குப் பிறகு இரு விமானப்படைக்கும் மறுபடி சந்திக்க சந்தர்ப்பம் ஏற்படவில்லை. ஆனாலும் பிரெஞ்சு விமான தளங்களை இழந்தாலும் தீவிரமான திட்டத்துடன் பிரிடிஷ்படை இருந்தது. நாஸி விமானங்கள் இங்குமங்கும் பிரிடனைத் தாக்கியதால் ஒரு நிச்சிதா புத்தி அவர்களுக்கு ஏற்படவில்லையென்று தெரிந்தது.

இதன் பிறகு பிரிடன்மேல் ஜெர்மானியர்கள் கண்மூடித்தனமாக மின்னல் படையை அனுப்பியபோது இருபடைகளின் வித்தியாசம் அதிகம் புலப்பட்டது. லுப்ட்வாப் லக்ஷியத்தை நிச்சயம் செய்துகொள்ளாமல் துர்ப்பல ஹிம்ஸையை விளைவித்தது; பிரிடிஷ் விமானங்கள் போட்ட திட்டப்படி சண்டை செய்ய ஆரம்பித்தன. ஜுன் மாதத்திற்குப் பிறகு ஒவ்வொரு இரவிலும் பத்திரிகை பறக்க விடுவதாலும், வேவு பார்ப்பதாலும், பிரிடிஷ் விமானங்கள், மாரி காலம் பூரா, ரூர், ரைன்லாந்து, ஜெர்மனியின் வடமேற்கிலுள்ள தொழிற்சாலைகள், யுத்த சாமான்கள் செய்யுமிடங்கள், எண்ணெய் சுத்தி செய்யுமிடங்கள், முக்கியமாகப் போக்குவரவு சாதனங்கள் இவைகளை குண்டுகளால் அழித்தன.

ஆகாய விமானப்படை இம்மாதிரி தாக்குவதினால் ஜெர்மனியை பிரிடன் படையெடுப்பதற்கு ஆரம்ப முயற்சி செய்ததென்று வைத்துக்கொள்ளக்கூடாது. ஜெர்மன் சைனியம், கப்பற்படை, விமானப்படை இவற்றைக் குறித்து பிரிடிஷ் விமானப்படை பொருட்படுத்தவில்லை. ஜெர்மானியர்களுக்கும், ஜெர்மன் சாமான்களுக்கும் போக்குவரத்தில்லாமல் தடை செய்து, மொத்தத்தில் ஜெர்மனிக்கு திண்டாட்டம் உண்டாக்க வேண்டுமென்பதே அதன் முக்கிய நோக்கம். 'பாம்பர்' விமானப்படை தன் நோக்கம் போல் தனி முறையைக் கையாண்டு சண்டையிட்டு வருகிறது.

## பிரிடனைப் படையெடுக்க ஜெர்மானியர்கள் ஏற்படுத்திக் கொண்ட தளங்கள்.

பிரிடிஷ் விமானப்படையிலுள்ள உள்சபைகளில், ஜெர்மன் சைனியம், கப்பற்படை, விமானப்படை இவற்றைத் தாக்க மந்திராலோசனை செய்து வந்தார்கள். ஏனென்றால் ஜெர்மன் விமானப்படை, நிலப்படை, கப்பற்படைகளெல்லாம்

ஒரு பெரிய காரியத்தைச் செய்துகொண்டிருந்தது. உதாரணமாக புதிதாக ஜயித்த பிரான்ஸ், பெல்ஜியம், ஹாலந்து, நார்வே, இந்த இடங்களிலுள்ள ஆகாய விமான நிலயங்களில் ஸ்தாபித்துக்கொள்ள லுப்ட்வாப் பரபரப்பாக இருந்தது. வடகடலுக்கப்பாலும், பிரிடிஷ் கால்வாய்க்கப்பாலும் அவைகளைத் தாண்டி பிரிடன் கரையிலுள்ள துறைமுகங்களுக்குப் போய்ச்சேர லக்ஷக்கணக்கான ஜெர்மன் நிலப்படைகள் குழுமிக்கொண்டிருந்தன. ஜெர்மன் கப்பற்படை, அந்தத் துறைமுகங்களுக்கு வியாபாரக் கப்பல்களும், சிறுபடகுகளும், போய் வர பாதுகாப்பு அளித்துவந்தது. மேலும் ஜெர்மனி, பிரிடனைத் தாக்கக்கூடிய சைனியத்தை, வியாபாரக் கப்பல்கள் மூலமாகவும், சிறு கப்பல்கள் மூலமாகவும் கால்வாய்க்கு அக்கரை சேர்க்க எதிர்பார்த்து வந்தது. இங்கிலாந்தைப் படையெடுக்க இவ்வித முயற்சிகள் 1066-ம் வருஷத்திற்குப் பின்னால் இதுவரை ஏற்பட்டதேயில்லை.

தெற்கு நார்வேயிலிருந்து 'பாஸ்-டி-கலே' வரைக்கும் இன்னும் தெற்கேயுமுள்ள படையெடுப்பு தளங்களைப் பிரிடிஷ் விமானப்படை, இராக்காலங்களில் போய் தாக்கிவந்தது. அவைகள் போய் தாக்கும் இடங்களடங்கிய ஜாபிதாவில் தெரிந்த இடங்களும் இருக்கின்றன. யுத்த சமாசாரப் பத்திரிகைகளிலேகூட கண்டறியாத இடங்களும் இருக்கின்றன. அங்கே 'ஹாம்' என்ற படை சேகரிக்கும் துறைமுகம் இருக்கிறது. அதில் நேர்த்தியாக ஒரு வெடிகுண்டு போட்டால் ருமேனியாவுக்கும் ஜெர்மனிக்கும் போய்க்கொண்டிருக்கும் இருப்புப்பாதைக் கால அட்டவணை தடுமாறிப்போகும்; ஜெர்மன் ரீச்சில் எல்லா இடங்களைக் காட்டிலும் வெகு பத்திரமாகப் பாதுகாக்கப்பட்ட 'டார்ட்மெண்டு-எம்ஸ்' கால்வாயின் மேலுள்ள பெரிய பாலம், ஹாம்பர்க்கில் குறுக்கிலும் நீளத்திலும் அநேக சதுர மைல்கள் அடங்கிய கப்பல் துறைகள், சரக்குகள் வைக்கும் பண்டசாலைகள்; ஸெகோஸ்லாவோகியா, எஸ்ஸென் இவைகளிலுள்ள வெடிமருந்து செய்யும் தொழிற்சாலைகள்; இன்னும் கிரிஸ்டியான்ஸான்டிலிருந்து கலே வரையிலும், அதற்கப்பாலுமுள்ள படையெடுப்பு தளங்கள்; இவைகள் பிரிடிஷ் விமானப்படை தாக்கும் லக்ஷியங்கள். இவ்வளவு இடங்கள் இதுவரையில் ஒரு விமான லக்ஷிய ஜாபிதாவில் அடங்கியதில்லை.

## பிரிடனின்மேல் படையெடுப்பு.

ஆனால் ஜெர்மன் விமானப்படையெடுப்பு ஆரம்பத்தில் பிரமாதமாய் ஒன்றுமில்லை. சிற்சிறு சண்டைகள் கண்ட இடங்களில் நடந்தன. ஜூலை மாதமுதல் சிறிய கூட்டங்களாக நாஸி விமானங்கள் பிரிடிஷ் தீவுக்கோட்டையின் பேரில் இரவும் பகலும் பறந்தது. "ஆச்சரியகரமாகத் தோன்றிய பிரகாரம் கண்ட இடங்களில்" வெடிகுண்டுகளைப்போட்டன.*

---

* 'வெற்றிக்கான விமானப்படையெடுப்பு' என்ற பெங்குவின் புஸ்தகத்தில் ரோனால்டு வாக்கர் எழுதியது.

இம்மாதிரி பிரிடனுக்குள் நடந்த விமானத் தாக்குதல்களில் பிரிடிஷ் ஜனங்களின் மனோதிடத்தை மாற்ற வேண்டுமென்ற அபிப்பிராயத்தைத் தவிர வேறு எண்ணம் இருக்க சம்பாவிதமில்லை. துறைமுகங்களை நோக்கியும், சமுத்திர கரையோரமாகவும் செல்லும் பாதுகாப்புக் கப்பல்கள் விஸ்தாரமாகவும், பலமாகவும் தாக்கப்பட்டன. பிற்பட்டு நடந்த தாக்குதல்களைக் காட்டிலும், முதல் வாரங்களில் நடந்தது அவ்வளவு தீவிரமாயில்லை. பிரிடிஷ் ஆகாயப்படை நிலயங்களில், முக்கியமாக இங்கிலாந்தின் தென்கிழக்கு மூலையிலுள்ளவைகளில் உக்கிரமான தாக்குதல்கள் ஏற்பட்டன. அங்கேகூட 'ஹெல்ஸ் கார்னரில்' கவனிக்கத் தகுந்த அளவாய் ஒரு விமானப்படை நிலயம் கூட பழுதாக்கப்படவில்லை.

ஆகஸ்டு மாத நடுவில் பிரிடனின் மேல் செய்த யுத்தம் கடுமையாயிற்று. ஸெப்டம்பர் மாத நடுவில் பிரிடனை நிலப்படையைக்கொண்டு தாக்கப் போவதாகவும், அதற்கு ஆரம்பமாக ஒரு மாதம் இடைவிடாது விமானங்களால் தாக்கப்பட்டது. இராக்காலங்களிலுள்ள எதிர்ப்பு கவனிக்கத் தக்கவாறு வலுக்கப்பட்டது. 100 'பாம்பர்' விமானங்கள்வரை ஒவ்வொரு இரவிலும் வந்து ஏராளமான வெடி குண்டுகளைத் தோன்றியபடி போட்டன. ஆனால் சேதம் வெகு சொற்பம்.

## பகல் காலத்தில் தாக்குதல்.

இவ்விதமிருக்கையில் ஆகஸ்டு மாதம் 8-ம் தேதியில் பகலில் எதிர்ப்புகள் வெகு மும்மரமாகத் துடங்கின. வெகு சிக்கிரத்தில் ஜெர்மானியருக்குப் பலத்த சேதம் ஏற்பட்டுவிட்டது. அன்றைய தினத்தில் 60-விமானங்களும், ஆகஸ்டு மாதம் 11-ம் தேதி மறு 60-விமானங்களும், அதற்கு மறு நாள் உபரியாக 62 விமானங்களும் சுட்டு வீழ்த்தப்பட்டன. 'பைடர்', விமானங்களால் துடரப்பட்ட ஏராளமான பாம்பர் விமானங்கள், இங்கிலீஷ் கால்வாய் வழியாய் சரமாரியாக வந்தன. ஆனால் அங்கு பிரிடிஷ் 'ஹரிகேன்' களும், ஸ்பிட்பையர்களும் காலிகோ துணியைக் கத்தியால் கிழித்தபொழுது ஏற்படும் சத்தம்போல் பூமியில் இருப்பவர்களுக்கு கேட்கும்படி எதிரி விமானப்படையை அவ்வளவு பலமாகத் தாக்கிப் பிளந்துவிட்டன. ஆகஸ்டு மாதம் 13-ம் தேதி நடந்த எதிர்ப்பில், 78 ஜெர்மன் விமானங்கள் நாசமாக்கப்பட்டன. ஆனால் பிரிடிஷ் விமானப் படைக்கு 13 பைடர் விமானங்கள்தான் சேதம்.

ஆகஸ்டு மாதம் 15-ம் தேதியன்றுதான் ஜெர்மானியர்களின் பகல் எதிர்ப்பு உச்சஸ்தானத்தை அடைந்தது. இங்கிலாந்து தென் கிழக்கிலும், வடக்கிலும் 'டைன்' நதி தீரத்திலும், 'தேம்ஸ்' நதிமுகத்துவாரத்திலும் லண்டன் பிரதேசத்திலுமுள்ள விமான நிலயங்களை, 1,000 ஜெர்மன் விமானங்களுக்கு மேல் அன்று வந்து தாக்கின. யுத்தத்தின் இறுதியில் ஜெர்மன் விமானப்படைக்கு 180 விமானங்கள் நஷ்டமாயின. ஆனால் பிரிடிஷ் விமானப்படைக்கு 34 விமானங்கள் தான் நஷ்டம். அதிலும் 17 விமானிகள் தப்பி வந்துவிட்டார்கள். இரண்டு நாட்களுக்குப் பிறகும் 1,000 ஜெர்மன் விமானங்கள் 'ஹெல்ஸ்' முனையிலிருக்கும்

விமான நிலயங்களைத் தாக்கின. அதில் ஜெர்மனிக்கு 153 விமானங்கள் சேதமாயிற்று; ஆனால் பிரிடனுக்கு 22 பைடர் விமானங்களும், 10 விமானிகளும் தான் நஷ்டம்.

**மறுபடியும் 'லுப்ட்வாப்' தோற்கடிக்கப்பட்டது.** எண்ணிக்கைகளினால் எதிரியைத் தோற்கடிப்பதென்பது சாத்தியமில்லாமல்போய்விட்டது. ஜயமுள்ள படையெடுப்புக்கு அறிகுறியான தாக்குதலை அதனால் செய்யமுடியவில்லை. ஜனங்கள் பீதி அடையுமாறு செய்வதற்குப் பாதுகாப்பில்லாத நகரங்கள்பேரில் வெடிகுண்டுகளைப் போட்டும், ஸ்திரீகளையும் குழந்தைகளையும் யந்திர பீரங்கிகளால் சுட்டும், தாக்கியதில், 'லுப்ட்வாப்'க்குப் பெருஞ்சேதம் ஏற்பட்டது. 'யூங்கர்'கள் 88, 'ஹீன்கல்'கள் 111, 'டார்னியர்'கள் 215, இம்மாதிரி அதிகம் வேகம்கொண்ட 'கோயரிங்' பாம்பர் விமானங்கள், பிரிடிஷ் 'ஹரிகேன்'களாலும் 'ஸ்பிட்பையர்'களாலும் நிகரில்லாமல் தாக்கப்பட்டன. 'யூங்கர்'கள் 87 என்று, பெருமைப் படுத்திவந்த பாய்ச்சல் பாம்பரும், இவைகளுக்குச் சுலபமான இரையாகிற்று.

## லண்டனைப் பிடிக்க சண்டை.

ஆகஸ்டு மாதம் பாக்கியிலும் சண்டை நின்ற பாடில்லை. ஜெர்மானியர்கள் புதிய தந்திரங்களைக்கண்டு பிடிக்க முயன்று வந்தார்கள். இராக்காலத்தில் வெடிகுண்டு போடுவது அதிகரித்தது. நாஸிகளும், எதிர்ப்பில்லாத இடத்தையும் தங்களைத் தாக்காமல் பத்திரமாயுள்ள இடத்தையும் தேடி வெடிகுண்டு போட்டு வந்ததால், இராக்காலத் தாக்குதல்களில் நாஸிகளுக்கு அதிகச் சேதமில்லை. அவர்களுடைய விமானப்படை இராக்காலத்தில் விக்ஞான சாஸ்திரப்படி தாக்குவதற்கு தேற்சியடைந்தவர்களல்ல. இம்மாதிரி புதிய உபாயங்கள் கையாண்டது அவர்களுடைய பகற்காலத் தாக்குதல்கள் பயனற்றவை என்று ஒப்புக்கொள்ளப் பட்டதைக் காண்பிக்கிறது.

ஸெப்டம்பர் மாதம் 7-ம் தேதி பிரிடனின் பேரில் நடந்த யுத்தம் லண்டன் சண்டையாக மாறிவிட்டது. கோயரிங் வடபிரான்ஸுக்கு ஓடிப்போய் தன் முயற்சிகளுக்குப் பயப்படாமலிருக்கும் தீவுகளின் பேரில் உள்ள தாக்குதல்களைத் துரிதப்படுத்த அன்று பிற்பகலும் சாயங்காலமும் 1,000 விமானங்களுக்கு மேல் அனுப்பினான். அதில் 103 விமானங்கள் நஷ்டம், அதிகக்கெடுதியுண்டாயிற்று, பெரிய தீக்கள் மூட்டப்பட்டன, அநேக ஜனங்கள் கொல்லப்பட்டார்கள்.

அதற்கடுத்த மூன்று நாட்களிலும் தாக்குதல் துடர்ந்து நடந்தது; ஆனால் ஸெப்டம்பர் மாதம் 11-ம் தேதி இரவில், தேச சரித்திரத்திலேயே கேட்டிராத பெரிய விமானம் சுடும் பீரங்கிகள் அப்பாம்பர் விமானங்களை அடித்துத் துரத்திவிட்டன. ஆனால் அப்பொழுது நாஸிகள் லண்டன் பலஹீனமாயுள்ள இடமென்று தப்பு அபிப்பிராயம் கொண்டார்களென்பதற்குச் சந்தேகமில்லை. அவர்கள் செய்தது தவறு என்று உலகம் பூராவுக்கும் இன்று தெரியும். லண்டனில் வசிக்கும் சிறுவர்களுக்குக்கூட அவர்கள் செய்தது பிசகென்று அப்பொழுதே தெரியும்.

## வார இறுதியில் நடந்த பெரிய படையெடுப்பு.

ஸெப்டம்பர், 15-ம் தேதி சனிக்கிழமையில் பிரிடனை, ஜெர்மன் 'லுப்ட்வாப்' முழு பலத்துடன் தாக்கிற்று. அவ்வார முடிவில் கோயரிங் பாம்பர் விமானங்களும், பைடர் விமானங்களும், ஜெர்மன் நிலப்படை வருவதற்கு ஒரு வழி ஏற்படுத்தியிருக்கவேண்டும். அன்று காலை முதல் அநேக மணி நேரம் தொடர்ச்சியாகவும், சாரிசாரியாகவும் இங்கிலாந்தின் தெற்கேயுள்ள மலை உச்சிகளுக்குமேல் டார்னியர் பாம்பர்கள், ஹீன்கல் பாம்பர்கள், பைடரும்—பாம்பரும் கூடின மெஸர்ஷிமிட் விமானங்கள், யூங்கர் பாய்ச்சல் விமானங்கள் பறந்து வந்தன. அவைகளுக்குப் பின்னால் அடிக்கடி திரும்பவும், கர்ணம்போடவும் ஹேதுவாயுள்ள மெஸர்ஷிமிட் பைடர்கள் பாதுகாப்பிற்காகச் சென்றன. சீக்கிரத்தில் அவைகள் திரும்பி வந்து விட்டன; வரிசையாயில்லாமல் சிதறுண்டிருந்தது. இது சமயம் பைடர்கள் மாத்திரம் கர்ணம் போடவில்லை, எல்லாம் உருண்டு, பிறண்டு வந்தன. (வேகமாகப் பறக்க முடியாமல் போன சிலவைகளைத் தவிர) ஜெர்மன் விமானப் படை எல்லாம் எவ்வளவு வேகமாகச் செல்லக்கூடுமோ, அவ்வளவு வேகமாக வடக்கு பிரான்ஸிலுள்ள அவைகளின் நிலயங்களுக்குத் திரும்பி வந்திறங்கின. பிரிடிஷ் ஹரிகேன்களும், ஸ்பிட்பையர்களும் அவைகளைப்பின்பற்றித் துரத்தின.

அன்றைய தினம் 1,000 நாஸி விமானங்கள் பிரிடன் கடற்கரையைத் தாண்டிச் சென்றன. அவைகளில் குறைந்த பக்ஷம் 230 விமானங்கள் சேதமாயின. போரில் இவ்விதமாக பிரிடிஷ் விமானப்படை மகத்தான வெற்றியை அடைந்தது.

### ஈட்டி முனை மழுங்கிவிட்டது.

அந்த வார முடிவில் லுப்ட்வாபுக்குப் பெருத்த சேதம் ஏற்பட்டதோடு நிற்கவில்லை. கால்வாய்க்கு அப்புறத்தில் உண்மையாக நடந்த சங்கதிகளைப்பற்றி, பிரிடிஷ் கவர்ன்மெண்டும் ஜெர்மன் கவர்ன்மெண்டும், இதுவரை ஒரு வார்த்தை கூட சொல்லவில்லை. ஆனால் அமெரிக்கர்கள், நாஸிப் படைகள் பிரிடனைத் தாக்க உண்மையாகவோ அல்லது ஒத்திகை செய்யவோ படகிலேறிச் சென்றனர், என்பதை நம்புகிறார்கள். (இது சமயம் பெரும்பான்மையான பிரிடிஷாரும் பிரெஞ்சுகாரர்களும் அவ்விதமே அபிப்பிராயப்படுகிறார்கள்). அவ்வாறு படகுகள் வந்ததை பிரிடிஷ் விமானப்படையின் இராக்கால பாம்பர்கள் கண்டுபிடித்தன. சைனியம் ஏற்றிவந்த ஜெர்மன் படகுகளை பிரிடிஷ் கப்பற்படை அழித்துவிட்டது.

உண்மையில் என்னதான் நடந்தது? நமக்குத் தெரியாது; ஸெப்டம்பர் மாதம் 15-ம் தேதி சனிக்கிழமை பிரிடிஷ் கடற்கரைகளைத் தாண்டி நிலப் படைக்கு ஈட்டி முனையாகப் படையெடுத்த ஜெர்மன் விமானங்கள் மறுமுறை இதுவரை தலைகாட்டவேயில்லை. மறுபடி எப்பொழுதும் நாஸிகள் இவ்வளவு தொகுதிகளுடன் வரவுமில்லை, எண்ணிக்கைகளினால் தாக்கக்கூடிய மின்னல் சண்டை உபாயத்தை மறுமுறை கையாளவுமில்லை. அதற்குப் பதிலாக இராக்காலத்தில் பிரிடனை சொற்பமாகத் தாக்கி நச்சுச்சண்டை செய்ய ஆரம்பித்தது. இம்மாதிரி நச்சுச்சண்டை ஜெர்மனியின்பேரில் பிரிடிஷ் விமானப்படை செய்து

வரும் முதன்மையான உபாயத்தைப்போல் கிட்டதட்ட இருக்கிறது. ஆனால் அது விக்ஞான சாஸ்திரத்தை ஒத்ததாகவுமில்லை, பலிதமாகவுமில்லை என்று நம்ப இப்பொழுது போதுமான முகாந்திரம் இருக்கிறது.

சென்ற சரத் காலத்திலும், மாரிகாலத்திலும் சீதோஷ்ண நிலைமை இடங் கொடுத்தபொழுது, பிரிடிஷ் பட்டணங்களையும், நகரங்களையும் முக்கியமாக துறைமுகங்களையும் வெகு உச்சியிலிருந்து தாக்கின. அவற்றின் முடிவும் பல வகைப்பட்டவை, அதிக நஷ்டம் நேர்ந்தது என்றுவது, ஆயிரக்கணக்கான ஜனங்கள் மடிந்தார்கள் என்றுவது, பிரிடனில் நேர்த்தியாகயிருந்த பல இடங் களும் (குருபியாயிருந்த பல இடங்களும்) அழிந்தன. இதை மறுக்க இடமில்லை. நாஸிகள் கோபமடைந்த சமயத்தில் கவென்டிரியிலும் லண்டன் நகரத்திலும் உண்டாக்கின பெரிய தீ விபத்துகளும், சாஸ்வதமாக அநேக இடங்களை பாழாக்கி விட்டன. பிரிடனில் நடந்த சண்டையில் லுப்ட்வாப் தன் வேலையைச்செய்து இதோடு மட்டும் நிறுத்திக்கொள்ளவில்லை. வெகுதூரம் பறக்கும் பாம்பர் விமானங்கள் ஜெர்மன் "யு" படகுகளோடு சேர்ந்துகொண்டு இங்கிலாந்தை கடற்முற்றுகையும் போட்டன. ஆனால் எதிர்பார்த்தபடி 1940-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதத்தில் அவர்கள் போட்ட திட்டப்படி பிரிடன் சரணமடைய வில்லை.

ஆனால் இதன் பிறகு பிரிடிஷ் விமானப்படை சும்மாயில்லை. அடிக்கடி ஜெர்மன் லுப்ட்வாப் திடீரென்று நச்சுச்சண்டை ஆரம்பித்தது. பிரிடிஷ் விமானப்படை திடீரென்று புதிதான ஒரு நீண்ட திட்டத்தை அனுசரிக்க வேண்டியதாயில்லை. எப்பொழுதும் அதன் நோக்கம் ஒன்றேதான். ஜெர்மன் தொழிற்சாலைகள், ஜெர்மன் கப்பல் துறைகள், கப்பல் கட்டுமிடங்கள், ஜெர்மன் வெடிமருந்து செய்யுமிடங்கள், எண்ணெய் சுத்திசெய்யும் இடங்கள், இவற்றை எல்லாம் காட்டிலும் எந்த விதமான ஜெர்மன் போக்குவரத்து சாதனங்களும், பிரிடிஷ் பாம்பர் விமானங்களின் பிரியமான லக்ஷியங்களாக இன்னும் இருந்து வருகின்றன.

## பகலிலும், இரவிலும்.

ஆபிரிக்கா, சமீப கீழ்திசை இந்த இடங்களில் பிரிடிஷ் விமானப்படை, வெற்றிகளும், தோல்விகளும், சரித்திரத்தில் சொல்லக்கூடிய புகழ்ச்சிகளும் பிசகுகளும், மாறி மாறிச் செய்துகொண்டு எதிரியைத் தேடிச்செல்லுகின்றன. இங்கு பிரிடனில் ஜெர்மனியிலுள்ள ஜெர்மானியர்களைத் தாக்குவதுதான் அதன் முதல் வேலை. அதை பாம்பர்கள் செய்து வருகின்றன. சென்ற வருஷத்தைக் காட் டிலும் இப்பொழுதுள்ள பாம்பர்கள் மிகப் பெரியவையாயும், நல்லவையாகவும் இருக்கின்றன. அவைகளிலுள்ள வெடிகுண்டுகள், கனமாகவும், அதிகப்பேர் களுக்கு மரணம் உண்டாக்கக் கூடியவையாகவும் இருக்கின்றன ; ஒரு பிரிடிஷ் படை விமானம் இந்த சமயங்களில் ஜெர்மனியின் பேரில் இராக்காலங்களில் பறந்து, சென்ற மாரிகாலத்தில் ஒரு முழுவிமானப்படை உண்டாக்கின மரணத்தை யும் சேதத்தையும் விளைவிக்கிறது.

இந்தக் கோடை காலத்தில் நாஸிகளின் இராக்கால எதிர்ப்பு ரொம்பவும் குறைவு. அதற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. முதலாவது, அவர்கள் வருவதைத் தெரிவிக்க பிரிடனில் வைக்கப்பட்டிருக்கும் ரேடியோ நிலயங்கள். இரண்டாவது ஹிட்லர் ருஷ்யாவின் பேரில் படையெடுத்திருப்பது. ருஷ்யப் போர்முனைக்கு மேற்கு ஐரோப்பாவிலிருந்து ஒரு ஜெர்மன் விமானங்கூட கொண்டுபோகாமலிருந்தாலும் பிரிடிஷ் விமானங்கள் முதன்மையான திட்டப்படி படையெடுத்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

பிரிடிஷ் விமானப்படைகளுக்கு இராக்காலத்தில் தாக்குவதற்காகப் பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறது. வெகு வருஷங்களாக இருட்டின பிறகு பறப்பதும் வெடிகுண்டு போடுவதும் பழக்கிக்கொண்டு, அதில் சரியான குறியும், சாமர்த்தியமும் அடைந்திருக்கின்றன. இவ்வளவு சிரமப்பட்டு அடைந்த பயிற்சி, சென்ற வருஷத்தில் அதற்குதவியாக இருந்து இராக்காலத் தாக்குதல்களில் ஜாஸ்தி எண்ணிக்கைகொண்ட 'லுப்ட்வாபின்' வரையரும்பில்லாத தாக்குதல்களில் நேர்ந்த சேதத்தைக் காட்டிலும் அதிக சேதம் உண்டாக்கின.

இப்பொழுது பிரிடிஷ் விமானப்படை பகல் காலத்திலும்கூட தாக்குகிறது. ஹெல்ஸ் கார்னர் தாக்குண்டதுபோக, இப்பொழுது பிரிடிஷ் கால்வாய்க்கு இப்பால் இருக்கும் பாஸ்-டி-கலேயில் உள்ள நாஸி தளங்கள், வேகமாய் பறக்கும் பிளன்கீம்களாலும், அவற்றிற்குப் பாதுகாப்புக்காகவரும், மரணத்தை உண்டு பண்ணும் கொடிய பைடர்களாலும், காலையிலும் மாலையிலும் தாக்கப்படுகின்றன. வாரங்கள் ஆக, ஆக, நார்வேயிலிருந்து, பிஸ்கே வரையிலும் மறைந்து செல்லும் எதிரியின் படகுகளும் தாக்கப்படுகின்றன. இதிலிருந்து ரயில்வே பாதைகள் பழுதுபட்டதென்றும் வெளியாகிறது.

## போர்முனை மாறிக்கொண்டு இருக்கிறது.

பகற் காலங்களில் ரீச் இப்போதும் தப்புவதில்லை. பிரிஸியன் தீவுகளில் உள்ள விமானப்படை, கடற்படைத் தளங்கள் பகல் காலத்தில் பிரிடிஷ் பாம்பர் விமானங்களால் தாக்கப்பட்டுவருகின்றன. பாஸ்-டி-கலேயில் நடந்த மாதிரி அதற்குப் போட்டியாக வடமேற்கு ஜெர்மனியின் மூலையில் பிரிடிஷ் பாம்பர்களின் தாக்குதல் உள்ளே பரவுகிறது. ஹெல்ஸ் கார்னர் அடிக்கடி எதிர்க்கப்பட்டதுபோல், ஜெர்மனியிலும் வடபாகம் பலியாகிக்கொண்டுவருகிறது.

கடைசியாக இதிலிருந்த போர் மாறிவிட்டதா? என்பது கேள்வி. அதற்கு பதில் இப்பொழுது சொல்லமுடியாது. ஜூன் ஜூலை மாதங்களில் பூராவும் நடந்த சம்பவங்கள் நமக்கு நம்பிக்கை அளிக்கின்றன. ஹிட்லர் ருஷ்யாவில் சண்டை செய்துகொண்டு இருப்பதால் பிரிடிஷ் விமானப்படைக்கு எதிர்பாராத சாதனங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இதனால் இராக்காலத்தில் தாக்குகிறபடி, பகல் காலத்திலும் மலையத்தனை பலங்கொண்டு பயங்கரமாகத் தாக்கக்கூடியதாக இருக்கிறது. ஏற்கனவேயே அமெரிக்காவிலும், பிரிடனிலும் யுத்த விமானங்

கள் செய்யப்பட்டுவருகின்றன. ஏற்கனவே பிரிடிஷ் விமானப்படை மேலானவை. இப்பொழுது அவை அறிவுக்கெட்டாதபடி மேம்பாடு அடைந்து இருக்கின்றன. அவைகளின் எண்ணிக்கையும் ஜாஸ்தி ; உயர்வானவையும்கூட.

மேலே சொல்லியவை பெரிதாயும், உயர்வாயும் இருக்கிற பாம்பர்களுக்கு மட்டுமல்ல. ஏனென்றால் சென்ற சரத்காலத்தில் இங்கிலாந்திலேயே பறந்து, எதிரி விமானங்களை விரட்டிவந்த ஸ்பிட்பையர்கள், ஹரிகேன்கள், இவைகளைக் காட்டிலும், இப்பொழுது பிரான்ஸ் தேசத்திற்குப்போய் அங்கு தோன்றும் ஆட்கொல்லிகளை விரட்டிச் செல்லும் ஸ்பிட்பையர்களும், ஹரிகேன்களும் ரொம்ப மாறுதல்கள் அடைந்திருக்கின்றன. அவை துரிதமானவை, கொடுமையானவை, எளிதில் செலுத்தக்கூடியவை. இவற்றுடன் மேமீ 10-ம் தேதியன்று இரவில் வந்து தாக்கின விமானங்களை முன்னம் எப்போதையும்விட அதிகக் கணக்காக சுட்டு வீழ்த்தின 'டிபயன்டுகளும்,' சமீப மாதங்களில் ஹிட்லருடைய பருந்துபோன்ற விமானங்களை பிரெஞ்சு தளங்களுக்குத் துரத்திச் சின்னாபின்னமாக்கின ஹாவக்குகளும், மற்றபடி நமக்கு அறிமுகமாயில்லாத பெயர்களுடன் வேலைசெய்யும் மற்ற விமானங்களும் அவைகளுடன் சேர்ந்து வேலை செய்கின்றன.

பிரிடனில் நடந்த சண்டை அட்லாண்டிக் மஹா சமுத்திரத்தில் கோரமாகப் பரவியது. அதன் மத்தியிலும் பிரிடிஷ் விமானப்படை கலந்துகொண்டது. சண்டை முடிந்த பிறகுதான் சமுத்திரக்கரையின் பாதுகாப்பு விஷயமாக ஏற்பட்ட சம்பவங்களின் பூராச் சரித்திரமும் வெளியாகும். ஆனால் இப்பொழுது நடக்கும் பெரிய யுத்தத்தைக் சூழ்ந்திருக்கும் மூடுபனியிலிருந்து தனிப்படையாக ஸன்டர்லாந்து என்ன கடேலினா என்ன, இவைகளின் சம்பவங்களிலிருந்து இப்பொழுதும்கூட பிரிடிஷ் விமானப்படை பகைவரைத் தேடித்திரிந்து, கண்ட விடமெல்லாம் நசுக்குகின்ற விபரம் தெரிகிறது.

## அரக்கனைக் கொல்லும் வீரர்கள்.

நாகரீக உலகத்தின் வருங்கால வாழ்வு பிரிடிஷ் விமானப்படை வீரர்கள் கையில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. வருங்காலத்தைப் பயப்படுத்த, ஹிட்லரைக் காட்டிலும் வெறொரு இரத்த வெறிகொண்ட கொடியனும் இதுவரை தோன்றவில்லை. பிரிடிஷ் விமானப்படையைப்போல் அவ்வளவு குதூகலமாகவும், துணிவுடனும் எவரும் வெளிக்கிளம்பி கொடுமைக்காரர்களை எதிர்த்ததில்லை. பிரிட்னிலும், பிரிடிஷ் சாம்ராஜ்ஜியத்திலும் பிறந்த மனிதர்கள் சுபாவத்தில் பகை நெஞ்சம்கொண்டு பிறந்தவர்களல்ல. இப்போது பிரிடனுடன் சேர்ந்து சண்டையிடும் ஐரோப்பிய நாடுகளில் பிறந்தவர்களுக்குத் துவேஷ புத்தி கிடையாது. ஏதாவதிருந்தால் அதற்குக் காரணம் ஹிட்லரும், அவருடைய இருளடங்கிய தேசத்தில் தோன்றிய கிங்கிரர்களும் செய்த வேலைதான். இந்த தேசத்தைத் தான் பிரிடிஷ் விமானப்படை ஒருவாறு தாமதமாயிருந்தாலும், அதன் ஒரே திட்டப்படி வேண்டிய அவகாசம் எடுத்துக்கொண்டு, ஹிட்லரையும், அவனைப் போலொத்தவர்களையும் சலிக்காமல் அழித்து, ஒரே நிர்த்தூளியாக்கி, காடாகச் செய்யப்போகிறது,

"விமானப்படை, பிளீட்ஸ் கிரீக்மட்டில் வெற்றியடைய முடியாது. ஆதலால் நமது சைனியத்தைப் பலப்படுத்தவேண்டும்," என்று 'கோல்னிஷ் ஜீடங்' என்னும் பத்திரிகையில் ஜெனரல் 'கபீஷ்' மற்ற நாஸிகளை சென்ற வருஷம் நவம்பர் மாதத்தில் எச்சரித்திருக்கிறார்.

பிரிடிஷ் விமானப் படையினால் சண்டையை ஜயிக்க முடியாதென்று நமக்கு எச்சரிக்கை செய்ய அவசியமிருக்கிறதாக, பிரிடிஷ் உத்தியோகஸ்தர் எவருக்கும் தோன்றவில்லை.

---

# யுத்தக் குறிப்புகள்.

---

# 'வி'

## ஆபத்தான நிலை.

### சந்தர்ப்ப விமர்சனம்.

சென்ற சில வாரங்களாக இருந்துவரும் முக்கியமான நிலை எப்பொழுதும் இருந்ததில்லை. இதுவரை நடந்த யுத்தங்களைவிட இப்பொழுது நிகழும் யுத்தம் தான் பெரியது. அதின் "மத்தியபாகத்தில்" நாம் இருக்கிறோம். இது இரு தனி தேசங்களுக்குள் போடும் யுத்தமல்ல. ஆகையால் தோன்றினவாரெல்லாம் ஜனங்கள் ஒரு முடிவுக்கு வருகின்றனர். இது மனித வர்க்கமே இரு பிரிவாகப் பிரிந்து முடிவுவரை புரியக்கூடிய யுத்தம். அப்பிரிவில் ஒரு திரப்பாளர்கள், தங்கள் ஸ்வதந்திரத்தை முன்னிட்டு யாவரும் ஒத்துழைத்தால் மேன்மை பெறலாம் என்று நம்பி சண்டை செய்கிறார்கள். மற்றொரு பிரிவிற்கு, இதற்கு நேர் விரோதமாக, தங்கள் ஸ்வய அதிகாரத்தை அமூல்படுத்தி தங்களுடைய ராக்ஷஸ முறைகளுக்கு தாங்களும், மற்றவர்களும் அடிமைகளாகிப் பெயர் வாங்குவதுதான் நோக்கம். ஒரு கக்ஷிக்காரர்கள் நாஸிக் கக்ஷியைச் சேர்ந்தவர்கள். மற்றொன்றுக்கு பிரிடிஷ் மக்களைச் சொல்லலாம். முன்சொல்லப்பட்டவர்கள் பிற்போக்குக்கும் ஜாதி உயர்வைக் காப்பாற்றவும், யந்திரம் போன்ற ராஜீய அதிகாரத்தை ஸ்தாபிக்கவும் முயலுகின்றனர். பின்னால் சொல்லப்பட்டவர்கள் முன்னேற்றத்திற்கும், ஜாதி சமத்துவத்திற்கும், சுயேச்சைக்கும் போராடுகிறார்கள்.

இதுவரையிலும் முன் கக்ஷியைச் சார்ந்த நம் விரோதிகளுக்குத்தான் அவர்கள் முயற்சிகளில் வெற்றி கிடைத்திருப்பதாகத் தெரியவரும். ஏனென்றால் தங்கள் விருப்பத்திற்குத் தகுந்தாற்போல் எல்லா பயங்கரமான சக்தியையும் நவீன விக்ஞானத்தைக்கொண்டு முன்னேற்றத்திற்காக பலப்படுத்தியிருக்கின்றனர். மேலும் சமூக முன்னேற்றத்திற்காக, "ஸ்வதந்திரம் விரும்பும் கூட்டத்தார்கள்,

தனித் தனியாகப் பிரிந்து, சேராமல் செய்யப்பட்டார்கள்". இப்படியெல்லாம் சொல்லிக்கொண்டிருக்கும் நாஸிகளின் கொள்கை இக்காலத்திற்குப் பிற்போக்கான தால் சமயம் தப்பி உண்டாகியிருக்கிறது. தேசிய அபிப்பிராயங்களில் கேவல மானதால் காட்டுமிருண்டித் தனத்திற்குத் திரும்புவதாக ஆகிறது. இதைத் தடுக்க உலகம் பூராவும் ஒன்று சேர்ந்து இதைப் பழிவாங்கத் தீர்மானித்து விட்டது.

ஐரோப்பா, ஆசியா, ஆபிரிக்கா, வட தென் அமெரிக்கா, தக்ஷிண உத்தர துருவங்கள்--யாவும் சம்பந்தப்பட்டிருப்பதால்தான் உலகம் பூரா என்கிறோம். தனக்கு எதிரில் இவ்வுலகப் பிரதேசங்கள், ஆயுதஸன்னத்தம் செய்து பலமடைவ தற்குள் ஜெர்மனி, தன் டாங்கிகளையும், விமானங்களையும்கொண்டு முழுபலத் துடன் எதிர்த்தாகவேண்டும். தாத்காலிகமான வெற்றி அடைவதற்கு எங்கெங் கெல்லாம் சூழ்ச்சி செய்ய முடியுமோ அங்கே எல்லாம் சென்று எதிரிகளை ஒன்று சேரவிடாமல் செய்யும்.

**ஹிட்லரின் கனவு.** முதலில் ருஷ்யாவை ஜயிக்கவேண்டும், அதை ஜயித்துவிடலாமென்றும் ஜெர்மனி மனப்பால் குடித்துக்கொண்டிருக்கிறது. அப்படி இவ் வருஷத்திற்குள் செய்யா விட்டால், சைனியங்களுக்கு உத்ஸாகம் குறைந்து வருவதுபோல் பொது மக்களுக்கும் உணர்ச்சி குறைந்துவிடும்.

இதற்காக லக்ஷக்கணக்காக, ஜெர்மனி, வாலிபர்களை யுத்த தேவதைக்குப் பலி கொடுக்கிறது. சண்டைக்குத் தயாரில்லாதவர்களை அரட்டி மிரட்டி லெனின் கிராட், மாஸ்கோ, கீவ், ஸெபாஸ்டபூல், காகேஸஸ், இரான், இந்தியா முதலிய இடங்களுக்குச் சென்று வெற்றியடையத் தயார் செய்கிறது. இந்த இடங்களி லிருந்து பணமோ வேறு பொருள்கள் அடையவோ, ருஷ்ய ஜாதியை ஒழிக்கவோ விரும்பவில்லை. ஆனால் ருஷ்யர்கள் சண்டையை நிறுத்திச் சென்றால் சரித் திரத்தில், 5 அல்லது 6 நாடுகள் ஜெர்மனிக்கு வசமாகி அவைகளின் மரியா தையையும், விளைவு பொருள்களையும் கைப்பற்றியது என்று வழங்கப்படும் பெயருக்காகத்தான்.

ருஷ்யாவின் தென்பாகத்தில் நடக்கும் யுத்தம் மிகவும் கவனிக்கத்தக்கது. அங்கே ஜெர்மானியர் நிச்சயமாக ஜயித்தால் ஜப்பானுக்கு கொஞ்சம் சாதகம் ஏற்படும். ருஷ்யர்கள் நிச்சயமாகத் தோற்கடிக்கப்பட்டவுடன் தூரக்கிழக்கில் யுத்தம் நடத்தக் காத்துக்கொண்டிருக்கிறது. அதில் பிரிடனும் அமெரிக்காவும் ஈடுபடும்படியிருக்குமாதலால் விஷயம் தாமதிக்காமல் வடக்கு, மேற்கு ஆபிர்க் காவை ஜெர்மனிக்கு விருந்தாகக் கொடுத்துவிடும். துருக்கியும், தீர்மானித்தபடி ஸ்வதந்திரத்திற்குப் போராடும். இரான் தனது நடுநிலை திட்டத்திற்குப் பயமில்லை என்று நினைத்துக்கொண்டிருக்கிறது. ஆனால் ருஷ்யாவை ஜயித்தபிறகு இவை களையெல்லாம் சுலபமாகக் கவர்ந்துவிடலாமென்று ஜெர்மனி நினைத்துக் கொண்டிருக்கிறது.

இதுதான் ஜெர்மனி கண்ட கனவு. ருஷ்ய யுத்தம் உலகின் யுத்தமாதலால் அதுதான் வருங்காலத்தைத் தீர்மானிக்கவேண்டும். விஷி, டஹ்ரான், அங்காரா, பாங்காக், டோகியோ, அமெரிக்கா நாடுகள்தான் பாக்கி. இப்படி ஒவ்வொன்ருக் நடுநிலை வகிக்கும் நாடுகள் வரவர குறைந்து யுத்தத்தில் ஈடுபடும்படியான சமயம் வந்துவிட்டது.

**சொற்பனத்தை பொய்யாக்குகிறவர்கள்.** ருஷ்யாவே முதல் முதலாக ஜெர்மனியின் திட்டங்களைப் பொய்யாக்கிவிட்டது. இதுவரை பலஇடங்களை ஜெர்மனிக்கு விட்டிருக்கலாம். ஆனால் அவைகளிலிருந்து ஒருவித மான லாபமும் ஜெர்மானியர் அடையமுடியாதபடி எல்லாவற்றையும் ருஷ்யர்களே எரித்துவிட்டார்கள். பல ருஷ்ய சைனியங்களும் மடிந்திருக்கலாம், இன்னும் பெரிய சைனியம் ஏராளமான மனிதர்களுடன் பாக்கியிருந்து சண்டை செய்கிறது. தலைவர்களும், உணர்ச்சியும் குறையாமல் முன்போலவே இருந்துவருகிருர்கள். கிராமங்களிலோ, பட்டிணங்களிலோ, தொழிற்சாலைகளிலோ, உத்தியோகங் களிலோ ருஷ்ய கவர்ன்மெண்டார் அதிகாரம் குறையவில்லை. ஜெர்மானியர்களை விட விளைவுபொருள்கள், அதிகமாயும் போக்குவரவு சாதனங்கள் சமீபித்தும் இருக்கின்றன. சத்துருக்களிடமிருந்து கைப்பற்றிய சாமான்களும் அதிகம். சத்துருக்களை எதிர்த்து நின்று அவர்களைத் தோற்கடிப்பதில் ஆத்திரமும் அதிகம் உண்டு.

## ஜெர்மன் தோல்விக்குப் பலகாரணம்.

மாரிகாலமும் வருகிறதால் மேலும் ஜெர்மன் வெற்றிக்கு பல தடங்கல்கள் இருக்கின்றன.

பிரிடன், அமெரிக்கா, ருஷ்யா இம்மூன்றும் அச்சு நாடுகளுக்கு எதிரில் ஒன்று சேர்ந்து ஒத்துழைக்க ஆரம்பித்துவிட்டன. அச்சு நாடுகள் தனக்கு சாதகம் என்று பல தேசங்களை ஒன்று சேர்த்திருக்கிறது. ஆனால் அவையாவும் பரஸ்பரம் நம்பிக்கைகொள்ளவில்லை. இந்த அச்சுநாட்டுச் சைனியங்களைவிட நேசதேசத்தாரின் சேனை மிகவும் பலமானது. சர்ச்சில்-ரூஸ்வெல்ட் சந்திப்பினால் ருஷ்யாவுக்கு உதவவேண்டியதைப்பற்றி ஸவிஸ்தாரமாகச் சர்ச்சைசெய்து பெரிய அறிக்கையை வெளியிட்டிருக்கின்றது. இது அச்சுநாடுகளுக்கு மனக்கலக்கத்தை யும் நேசதேசங்களுக்கு தைரியத்தையும் ஊக்கத்தையும் கொடுக்கிறது.

இங்கிலீஷ்-ருஷ்ய வாய்மொழிகள் துருக்கியில் ஏற்பட்டிருந்த மனஸ்தாபங் களை அகற்றிவிட்டன. புதிதான ருஷ்ய-பிரிடிஷ் வியாபார ஒப்பந்தத்தின் பயனுக நமக்கு ஒரு உதவி ஏற்பட்டிருக்கிறது.

இரானுக்கு மறுபடியும் இரண்டாம் தடவையாக, நாஸிகளை முக்கிய ஸ்தானங்களில் வேலைக்கு வைத்துக்கொள்ளக்கூடாதென்று ருஷ்ய-பிரிடிஷ் அதிகாரிகள் எச்சரிக்கை அனுப்பியிருக்கிருர்கள். முதல் எச்சரிக்கை அனுப்பித்து ரொம்பநாள் ஆவதற்குள்ளாகவே மறுபடி அனுப்பித்ததை இரானினுள்ளோர் கவனிக்காமல் அலக்ஷியமாக இருக்கமுடியாது. பிரிடனும் ருஷ்யாவும் நன்ருக ஒத்துழைப்பதும் வெளியாகிறது.

விஷியைப்போலவே ஜப்பானும் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது. சில வாரங்களாக சண்டையில் ஈடுபடவேண்டுமென்றிருந்தும் தயங்கி இருக்கிறது. ஜெர்மனி ருஷ்யாவை ஜயித்துவிடுமென்று நினைப்பதற்குள்ளாக பிரிடிஷ் அமெரிக்க திட்டங்கள் தீர்மானமாயும் தயாராயும் இருக்கின்றனவென்று ஜப்பான் தெரிந்துகொண்டிருக்கும். ஏற்கனவே ஜெர்மனி ஆக்கிரமித்த நாடுகளில் பலவந்த அரசாக்ஷியால் அமைதிக்குறைவு ஏற்பட்டிருக்கிறதென்று வரவரத் தெரியவருகிறது. சட்டமறுப்பும், எதிர்ப்புகளும், சமூகத் தடைகளும், 'வி' இயக்கமும், ரகசியக் கலகங்களும் ஐரோப்பா பூராவும் உண்டாகியிருப்பதால், சண்டை செய்வதோடுமட்டுமில்லாமல் பிறகும் மனக்குறை ஏற்பட்டிருப்பதைக் காணலாம். இப்பொழுது அடக்கி வைத்திருந்தாலும் நாஸி என்ற ராக்ஷஸன் சவமாகும்வரை இவைகள் இருக்கும்.

ருஷ்ய யுத்தத்திலிருந்து உண்டான பிரச்னைகள் இவைகள் தான். இப்பொழுது ஒவ்வொருவரும் முயற்சி, அமைதி, தைரியம், ஆபத்து என்னவென்பதையும் 'வி' முதலியவைகளையும் கைக்கொள்ளவேண்டும். அப்படிச் செய்தால் 'வி' அடையாளம் அறிகுறியாக இந்த வியாசத்தின் ஆரம்பத்திலும் முடிவிலும் போடப்பட்டிருப்பது வீண் எண்ணம் அல்ல.

# 'வி'

**எட்டு விஷயங்கள்.** அவ்வப்போது வெளிவரும் அறிக்கைகள் உலக சரித்திரத்தில் முக்கியத்துவம் வாய்ந்தவை. மூவாயிரம் வருஷங்களுக்கு முன் மோஸஸ் என்பவர் 10 முக்கிய கட்டளைகளை பரவச்செய்தார். அவை இன்னும் வழங்கப்படுகின்றன. 725 வருஷங்களுக்கு முன் ஒரு அரசனிடமிருந்து மாக்னா கார்டா என்ற ஸ்வதந்திர யாதாஸ்தை பிரிடிஷ் மக்கள் பலவந்தமாகப் பெற்றனர். அதுதான் இப்பொழுதும் பிரிடிஷ் மக்களுக்கு ஸ்வதந்திரத்தை நிலைநிறுத்துகிறது. சென்ற வாரத்தில், பயங்கரமான அலை பெரும் கடல் நடுவில், மிஸ்டர் ரூஸ்வெல்டும், மிஸ்டர் சர்ச்சிலும் மனித வர்க்கத்திற்கே மனதைக் கவரக்கூடிய ஒரு அறிக்கையைப் பிரசுரித்திருக்கின்றனர். இதை மிஸ்டர் அட்லி பிரசுரம் செய்தார். அன்று முதல் அது தேச சரித்திரமாகி விட்டது.

இம் மூன்றில், உண்மையில் எது தான் கடைசியில் நிலைத்திருக்கிறது என்று சொல்லுவது சிரமம். ஏனென்றால் மோஸஸின் 10 கொள்கைகளைப் பின்பற்றாமல் அலக்ஷியம் செய்துவிட்டார்கள். மாக்னா கார்டா என்பது ஜெர்மானியர், ஜப்பானியர், ருஷ்யர், காங்கோ நாட்டிலிருக்கும் டச்சு மக்களும் அனுசரிப்பதில்லை. இரண்டு வருஷங்களுக்கு முன் அபிப்பிராய பேதம்கொண்ட பிரிடிஷ், அமெரிக்க, ருஷ்யர்கள் இவ்வறிக்கையில் கண்டிருக்கிற அம்சங்களைச் சேர்ந்து அனுபவத்திற்குக் கொண்டுவரப்போவதை நாம் தற்போது அனுமானிக்க முடியாது.

இம்மாதிரியாக இதற்கு முன் வெளிவந்த வில்ஸனின் 14 விஷயங்கள் கொண்ட அறிக்கை பயன்படாததுபோல் இப்பொழுதும் இது பயன்படாதென்று சந்தேகப்படவேண்டியதில்லை. ஏனென்றால் இது தனிப்பட்ட ஒருவருக்காகவும் ஏற்படாமல் மனித வர்க்கத்திற்கே கவனம் செலுத்தத் தக்கதாக இருக்கிறது. ஆகையால் தான் அச்சு நாட்டுத் தலைவர்களான சண்டாளர்கூட இஷ்டமில்லாமல் இருந்தாலும் இதைப்பற்றி ஆலோசிக்கவேண்டியதாக இருக்கிறது.

**அவைகளில் கண்டுள்ள அம்சங்கள்.**

பிரிடனை முற்றுக்கை போட்டதாக ஹிட்லர் சொல்லி ஒரு வருஷத்திற்குள் பயப்படாமல் பிரிடிஷ் பிரதம மந்திரியும் அமெரிக்கத் தலைவரும் உலகப் பிரச்னைகளை வட அட்லாண்டிக்கில் சர்ச்சை செய்தார்கள். ஆகையால் இப்பொழுது அட்லாண்டிக் கடல் யார்வசமிருக்கிறது என்று தெரியும்!

இதற்கு முன் வெளிவந்த 14 விஷயங்களை அமெரிக்கப் பிரஸிடெண்டு வில்ஸன் பிரத்தியேகமாகத் தயார் செய்தது. அந்த நாட்டிலேயே பூராவும் அதை ஒப்புக்கொள்ளவில்லை. அப்பொழுது இருந்த நேசதேசத்தவர் தான் அங்கீகரித்தார்கள். இந்த 8 விஷயங்கள் ஒரு தனிக் கக்ஷியாருக்கு ஏற்பட்டதில்லை. இரண்டு பெரும் ஜனநாயக அரசாங்கங்களால் ஒப்புக்கொள்ளப்பட்டு அவ்விருவர்களையும் நாஸிகளுக்கு எதிரில் ஒன்று சேர்த்துக்கட்டுப்படுத்துகிறது.

பிரஸிடெண்டு வில்ஸனின் அறிக்கையில் உள்ள 14-ல் 6 விஷயங்கள் "தீர்மானமாக எதையும் பற்றிச் சொல்லாததால்" மனக்குழப்பத்தை உண்டு பண்ணின. ஆனால் தற்போதய 8 விஷயங்கள் பொதுவான அம்சங்களை விடாமல் ஜாக்கிரதையாக அடிப்படையாக உட்கொண்டிருக்கிறது.

சமாதானத்தை உண்டுபண்ணக்கூடிய இந்த அறிக்கைக்கும், சமாதானப் பேச்சு வார்த்தைக்கும் வெகு வித்தியாசம் இருக்கிறது! இவைகளைக்கண்டு ஹிட்லர் சமாதானத்திற்கு வருவானென்று எதிர் பார்க்கலாம். இதில் கண்ட இரண்டாவது விஷயப்படி அந்தந்த ஜனங்களின் விருப்பமில்லாமல் தேசங்களில் மாறுதல் செய்யக்கூடாது—அனுக்கிரமம் என்று வியக்தமாகக் கண்டிருந்ததால் 'சமாதானப் பேச்சாக' இது ஆகாது. மூன்றாவது விஷயப்படி ஜயித்த நாடுகளைத் திருப்பிக் கொடுத்துவிடவேண்டும். முக்கியமாக எட்டாவதாக "ஆக்கிரமிக்கும் நாடுகளில் யுத்த சாமான்களை பரிஹரிக்கவேண்டு"மென்று கண்டிருக்கிறது!

ஒரு விதமான ஆக்கிரமும் கூடாதென்று பஹிரங்கமாகச் சொல்லியதால் பிரிடனும் அமெரிக்காவும் சாம்ராஜ்ஜிய ஆசையினால் யுத்தம் செய்கிறார்கள் என்பது இல்லை.

விளைவு பொருள்களை யாவரும் அடையலாம் என்றும், சமுத்திரங்களில் யாவருக்கும் போக்குவரவு ஸ்வதந்திரம் உண்டென்றும் இவ்வறிக்கையில் சொன்னதால் பேருக்குத்தான் சமரஸ உரிமை (ஸோஷலிஸம்) பின்பற்றப்படுகிறது என்பதும், முதலாளிகள் லாபம் கவனிக்கப்படுகிறது என்பதும் இல்லை.

ஆக்கிரமிக்கும் நாடுகளில் யுத்த பரிஹாரணம் செய்யப்பட்ட பிறகு மற்ற நாடுகளும் செய்யுமாதலால் யுத்த மூலம் தேசங்களின் தகராறுகளைத் தீர்க்காமல்

" உண்மையிலும், அபிப்பிராயங்களிலும் " அஹிம்ஸை முறையில் தீர்த்துக் கொள்ளலாம்.

ஜப்பான் இண்டோ-சைனுவைக் கைப்பற்றிய பிறகு, அதையும் ஆக்கிரமணம் செய்யும் நாடென்றே யுனைடெட் ஸ்டேட்ஸ் சொல்லிவிட்டது. ஆகையால் ஜப்பான் " யுத்த பரிஹரண " மொழிகளைப் பின்பற்றவேண்டும்.

**ருஷ்யாவில் யுத்தத்தை முடிக்க முயற்சி.**

இங்கே யாருக்கு லாப நஷ்டங்கள் அதிகம் என்பதை விஸ்தரித்துச் சொல்லுவதினால் ஒரு பயனும் இல்லை. ஜெர்மன் நடுச்சைனியம் ருஷ்ய ஜெனரல் புடன்னிக்கு எதிராக யூக்ரேனின் தென்பாகத்திற்குத் தெற்கு நோக்கிச் சென்றபொழுது சில வெற்றி யடைந்திருக்கிறது. இதைத்தான் பெர்லினில் யுத்த வியாக்கியானம் செய்கிறவர்கள் ஸோவியத் அரசாங்கமே கலைந்து விட்டது என்கிருர்கள்.

**சில பொதுவான அம்சங்கள்.**

1. மாரி காலத்திற்குள் யுத்தம் ஜயிக்கப்படுமென்ற நம்பிக்கையை சைனியத்திற்கும் பொதுமக்களுக்கும் உண்டாக்க பெரும் ஏற்பாடுகளை ஜெர்மானியர் செய்ய வேண்டும். ஆகையால் 45 பான்ஸர் படைகளுடன் கூடின 200 சைனியப் பிரிவுகளை வைத்துக்கொண்டு ருஷ்யாவின் தென்பாகத்தில் முயன்று பார்க்கிருர்கள்.

2. ஏராள நஷ்டங்களின் பேரில் ஜெர்மானியர் சில வெற்றிகள் அடைந்திருக்கின்றனர். கிர்வோகிராட், நிகோலாயிவ், பெர்வோமெயில்ஸ்க், போன்ற பெரிய தொழிற்சாலைகள் உள்ள இடங்களும் கைப்பற்றப்பட்டு, ஒடெஸ்ஸாவையும் மற்ற இடங்களிலிருந்து போக்குவரத்து இல்லாமல் தடுத்துவிட்டார்கள். ஏனென்ருல் நிகோலாயிவ் பிடிபட்டதினால் 70 மைல் தூரம்வரை தடை ஏற்பட்டிருக்கிறது. ஒடெஸ்ஸா ருஷ்யர்களுக்கு ஒரு பெரிய துறைமுகம். இதை ஜெர்மானியர் இன்னும் கைப்பற்றவில்லை.

3. வடக்கே லெனின்கிராட்டில் ஜெர்மானியர் மூன்று, நான்கு முனைகளிலிருந்து பலமாகத் தாக்குகிருர்கள். பழைய ருஷ்யத் தலைநகரத்திலிருந்து 75 மைல் தூரத்திலுள்ள கிங்கிஸப் என்ற இடத்தை ருஷ்யர்கள் காலி செய்துவிட்டனர். அதே தூரத்தில் தென் கிழக்கிலும் கிழக்கிலுமுள்ள லெனின்கிராட் மாஸ்கோ இருப்புப்பாதையை உடைத்திருக்கலாம்.

இனிவரும் 10 நாட்களில் இவ்வாறு ஏற்படலாம்.

(1) லெனின்கிராட்டைச் சுற்றியுள்ள தொழிற்சாலைகளைக் காபந்து செய்து ஜெர்மானியரை மாரிகாலம் வரும்வரை தடைசெய்யலாம். (2) தாங்களாகவே ருஷ்யர்கள் நீபர் நதிக்கரையில் இருக்கும் செழிப்பான யூக்ரேனைப் பிளந்து நாசம் செய்து $1\frac{1}{2}$ மைல் அகலமான நீபர் நதியையே அடுத்த தற்காப்பு ஸ்தலமாகவாவது செய்வார்கள். அல்லது முன்னேறி நதியையும் கடலையும் பின் பந்தோபஸ்துக்கு வைத்துக்கொண்டு மாரிகாலம்வரை சண்டை செய்யலாம். ஏனென்ருல் அப்பொழுது ஜெர்மன் போக்குவரவு கலைந்துவிடும்.

இவ்விதமான நிலையில் சாதகமான அம்சங்கள் சில இருக்கின்றன.

(1) ருஷ்யாவில் விசேஷமாக யூக்ரேனில்கூட எதிரிக்கு ரகசியமாக உதவ ஒருவரும் இல்லை. ருஷ்யச் சைனியம் எப்போதும்போல் சண்டையைச் செய்கிறது. பொதுமக்கள் இதர வேலைகளைச் செய்துகொண்டிருக்கிறார்கள். ஆகையால் எதிரி வசம் சரணமோ, சமாதானமோ செய்ய மாட்டார்கள்.

(2) ஜெர்மானியருக்கு சாமான் சேதம், உயிர்சேதம் ஏராளம்.

(3) ருஷ்யர்கள் கையாடும் 'பூ தகன முறை' யினால் ஜெர்மானியருக்குப் பிடித்த இடங்களில் கொஞ்சமும் விளைபொருள் கிடைக்கவில்லை. வெறும் பொட்டல் வெளிகள்தான் கிடைத்திருக்கின்றன. புடன்னி என்ற ருஷ்யத் தலைவர் நீபர் நதிப்பாலத்தை உடைத்திருந்தால் யூக்ரேனின் மேற்கு பாகம் பூரா வெள்ளமாகவே ஆகியிருக்கும். ஆதலால் விவசாயம் செய்ய முடியாது. அதுவும் ஜெர்மானியருக்குக் கெடுதல்தான்.

(4) புதிதாக பலப்படுத்தப்பட்ட ருஷ்யச் சைனியமும் புதிதான யுத்தரங்கங்களில் தைரியமாகச் சண்டையிடுகிறது. இச்சைனியம் சத்துரு வசம் ஆகாமல் சரியான விதமாக நடத்தப்பட்டும், 'எல்லா ருஷ்யர்களும்' உண்மையிலேயே சேர்ந்தும் எதிர் இல்லாமல் இருக்கிறது. நடுநிலை நாடுகள் எதிர்க்காமலும் கவனிக்கப்படுகிறது. எல்லாவித அமெரிக்க பிரிடிஷ் யுத்தச் சாமான்களும் அதிக வேகமாக அனுப்பப்படுகின்றன.

(5) சரியாக அறிந்து பிரஸிடெண்டு ரூஸ்வெல்டும் ருஷ்யர்கள் மாரிகாலத்தில் மும்மரமாக யுத்தம் நடத்துவார்களென்றும் சொல்லியிருக்கிறார். ஜெர்மானியரால் அவ்விதம் செய்யமுடியாது!

**புகழ் போய்விட்டது.** பிரான்ஸுக்கு 'ஏற்பட்ட புகழ்' சென்றுவிட்டது! பெரிய ஜனநாயக ஆட்சியான பிரான்ஸ் ஜெர்மனிக்குக் கப்பம்கட்டும் ராஜ்ஜியமாக மாறிவிட்டது. முன்பு பெரும் யுத்த வீரனான பிடேன் ஹிண்டன்பர்க் போல் அடக்கப்பட்டான். ஒரு நிலையும் இல்லாத டார்லான் மாலுமி-தேசத் தலைவனாக ஆகி ஹிட்லர் கவர்னர் போலிருந்துகொண்டு மற்றொரு ஹிட்லர் என்று நினைக்கிறான். ஸ்வதந்திரம் தருவதாகச் சொல்லப்படும் பிரெஞ்சு ஜனங்களை ரகசியமாக, பிரான்ஸின், இயற்கை விரோதிகளும், தலைமுறையாக சத்துருக்களுமான நாஸிகளின் ஆதிக்கத்தை விரும்பாததால் எல்லா முயற்சிகளையும் செய்து அடக்கப் பார்க்கிறார்கள். நாஸி 'புது திட்டத்திற்கு' விரோதமானவர்கள் அடக்கப்படுவார்கள், (டார்லான்) போன்றவர்களின் அதிகாரம் தான் செலுத்தப்படும். ஜனங்களின் வார்த்தைக்கு செலாவணி கிடையாது. கக்ஷிகளும் ராஜீயப் பிரிவினர்களும் (வர்த்தகச் சங்கங்கள் உள்பட) கலைக்கப்படும். பார்லிமெண்டே கிடையாது. பிரி மேஸன் கக்ஷியும், யூதர்களும் அடக்கப்படுவார்கள். மந்திரி சபையில் இஷ்டமானவர்கள்தான் இருக்க முடியும். ஜெர்மன் ரகசியப் போலீஸ் போல எல்லா அதிகாரமும் இரட்டிப்பு மடங்காக பிரெஞ்சு போலீஸுக்கு உண்டு.

இதுதான் பிரெஞ்சு உள்நாட்டு சீர்திருத்த திட்டம். வெளிநாட்டில் பிரான்ஸுடன் முன்பு சேர்ந்தவர்களுக்கு எவ்வளவு இடைஞ்சல் உண்டோ அவ்வளவும் செய்வார்களாம், இதுதான் பிரான்ஸின் ஸ்வதந்திர எண்ணத்திற்கு அனுகுணமென்று மார்ஷல் பிடேன் அபிப்பிராயப்படுகிருர். ஆபிரிக்காவிலுள்ள பிரெஞ்சு கடல், ராணுவ நிலயங்கள் ஜெர்மானியர் வசம் ஒப்புவிக்கப்படும். கடற்படை உள்பட நிச்சயமாக கொடுக்கப்படும். இப்படி ஆபிரிக்காவில் பிரெஞ்சு-ஜெர்மன் சைனியங்கள், லிபியாவில் வந்த அனுபவத்தின்படி ஒன்று சேர்ந்து, நைஜீரியா, ஸீராலியோன், பிரிடனுக்குச் சொந்தமான இன்னும் தங்கம் விளையும் பிரதேசங்களை பிரான்ஸுக்கு வாங்கிக்கொடுக்கும் (அதாவது ஜெர்மனி வாங்கிக்கொள்ளும்!). இதற்குமுன் பிரான்ஸிலிருந்து நல்ல பிரதேசங்களை அடையவிரும்பின இதாலிக்கு அவைகளுக்குப் பதிலாக எகிப்து கொடுக்கப் படலாம். ஆகையால் ஜெர்மனி சொற்படியெல்லாம் பிரான்ஸ் நடந்துகொள்ள வேண்டும். (அல்ஸாஸ் லொரேயின் பிரதேசங்களை ஜெர்மனிக்கு முடிவாகக் கொடுத்த மாதிரிதான் ஆகிறது).

குறிப்பு.—இந்த ஏற்பாடெல்லாம் அமெரிக்காவுக்கும் பிரிடனுக்கும் தெரிந்தது தான். வாஷிங்டனில் விஷி பிரதிநிதி எம். ஹென்ரி ஹேயி மறுத்தபோதிலும் ரூஸ்வெல்ட்டும் சர்ச்சிலும் நடு அட்லாண்டிக்கடலில் சர்ச்சை செய்த விஷயங்களில் இது ஒன்று. ஜெர்மனியின் போக்குக்கெல்லாம் தகுந்த விதமாக பிரதி செய்யப்படும் என்பதில் சந்தேகமில்லை. ஆனல் 'பிரான்ஸின் கௌரவம்' எவ்வாறு ஆகும்.........? போய்விட்டது.

**சொன்னதை மறுமுறை அழுத்திச் சொல்லுகிறேன்.**

இதுவரை சொல்லப்பட்ட விஷயங்கள் புலப்படாமல் பொதுவாக இருந்தால் சில நிச்சயமான விவரம் கொடுக்கிறேம்.

பிடேனும் டார்லானும் அச்சு நாடுகளுடன் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிருர்கள். டார்லான் எல்லா அம்சங்களையும் உடனே கொடுக்கத் தயார், ஆனல் பிடேனும் வேகாண்டும் அமெரிக்காவுடன் விரோதம் ஏற்படுமென்று கொஞ்சம் பயப்படுகிருர்கள்.

பிஸர்ஷியாவுக்குள் ஜெர்மானியர் வருவதை மாத்திரம் பிடேன் அங்கீகரிக்கிருர். (இதனல் ஸிஸிலிக்கும் லிபியாவுக்கும் நடுவிலுள்ள ஒரு பாதியை வைத்துக் கொண்டு டூனிஸியாவை ஜெர்மனிக்கு விட்டுக்கொடுத்ததாகும்).

கஸாபிளாங்கா, டாக்கரில் பிரெஞ்சுக்காரர்கள் அதிகாரம் பெருவதை அமெரிக்கா (டாக்கரில் உள்ள தங்கம் உள்பட) கவனிக்கும். ஆகையால்தான் ஹிட்லருக்கு இவைகளைக் கொடுப்பதில் பிடேனும் வேகாண்டும் தயங்குகிருர்கள். ருஷ்ய யுத்தத்தின் முடிவையும் எதிர்பார்க்கிருர்கள். மாரி காலம்வரை ருஷ்யாவில் ஜெர்மானியர் நிறுத்தப்பட்டால் அவர்கள் விரும்பும் நீர்மூழ்கி தளங்களை கொடுக்க மறுத்துவிடலாம். அப்பொழுதுதான் பிரான்ஸின் கௌரவம் அமுங்கப் படாமல் தலைதூக்கி நிற்கும். இவை எப்படி நேரும் என்பதற்கு இக்குறிப்புகளின் முதல் பக்கத்தை கவனிக்கவும்.

# வார யுத்தச் செய்திகள்.

21—8—41-லிருந்து 29—8—41-வரை.

**இரானுக்குத்** தகுந்த விதமாகவே கிடைத்தது. நாஸிகளுடன் அதிக உறவு கொண்டாடினதற்கு இப்போது அவஸ்தைப்படுகிறது. சந்தோஷமாகவும், பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன் என்று இருந்துகொண்டு எல்லாரிடத்திலும் அற்ப சிநேகம் பாராட்டிக்கொண்டு இருப்பதற்கு இது காலமல்ல. இரான் நாஸிகளையும் உள்ளே அனுமதித்து நேசதேசத்தினர்களையும் சிநேகம் பாராட்டியது தவறாகும். ஏனென்றால் இராக், ஸிரியா முதலிய இடங்களில் உண்டான அனுபவத்திலிருந்து யுத்த சமயத்தில் அதிகம் தயவு காட்டுவது தவறென்று நேசதேசம், நேசதேசத்தார்கள் தெரிந்துகொண்டுவிட்டார்கள். ஆகையால் இரானின் புத்திஹீனத் தன்மையைப் பொருக்கமாட்டார்கள். இரான்போல் மந்தமாக இருக்கிறவர்களுக்கு உசித காலத்தில் நடவடிக்கை எடுத்துக்கொள்வது தான் சரியான சிகிச்சை. ஆகையால் பிரிடனும், ருஷ்யாவும் புது உடன்படிக்கைப் படி இரானில் யுத்த நடவடிக்கை எடுத்துக்கொண்டார்கள். அது பின்வருமாறு நேர்ந்தது :—

**சச்சரவுகளுக்கு மூலகாரணம்.** ஆகஸ்டு மாதம் 25-ம் தேதி இரானுக்கு அனுப்பிய ருஷ்யக் குறிப்பில் இது வியக்தமாகக் கண்டிருக்கிறது. நாஸி ரகசிய சூழ்ச்சிக்காரர்களும் சிப்பாய்களும் இரானை வியாபித்தது மட்டும் இல்லாமல் பக்கத்திலிருக்கும் ஸோவியத் ஜில்லாக்களான பாகுர், அஜர்பைஜன் என்ற இடங்களிலும் புகுந்தது பிசகு என்று அக்குறிப்பில் கண்டிருந்தது. அப்படி வந்த நாஸிகள், அவர்கள் சொல்லிக்கொள்ளும் விதமாய் யாத்ரீகர்களுமல்ல, வியாபாரிகளுமல்ல. ஆனால் சூழ்ச்சிகள் செய்து இரானை ஜெர்மன் ராணுவ தளமாகச் செய்யவே வந்தவர்கள். இராக்கில் முன்னிருந்த ஜெர்மன் விஷமிகளான கம்மாத், மேயர்ஸ் என்பவர்களும், கலகக்காரனான ரஷீத் ஆலியும், அரசாங்கத்தில் அதிருப்திகொண்ட ஜெருஸலத்தின் தலைவனும் ஒன்று சேர்ந்து டாஹ்ரனிலுள்ள ஜெர்மன் பிரதிநிதியுடன் கலகத்திற்குத் தயார் செய்துகொண்டிருந்தார்கள். இரான் ஸோவியத் எல்லையில் யுத்த தளவாடங்கள் சேகரிக்கப்பட்டு ஜெர்மானியர்கள் ராணுவப்பயிற்சியும் கொடுக்கப்பட்டார்கள்.

**மூன்று எச்சரிக்கைகள்.**—தற்பொழுது இங்கிலீஷ் ருஷ்ய நடவடிக்கை அவசரப்பட்டு எடுத்துக்கொள்ளப்படவில்லை. அங்கு இருக்கும் ஷாவும் எதிர்பாராதபடி தாக்கப்படவில்லை. ஜூன் 26, ஜூலை 19, ஆகஸ்டு 16 ஆக மூன்று தடவைகளில் எச்சரிக்கைகள் அனுப்பப்பட்டன.

**இரானின் பிதற்றல்.**—ஆனால் ஷா, நிலைமை கெட்டுவருவதைக் கவனிக்காமலோ கவனிக்கத் தெரியாமலோ இருந்திருக்கவேண்டும். அமெரிக்காவிலுள்ள இரான் மந்திரியோ இரானில் ஜெர்மன் கலகத்திற்கு ஏற்பாடு இல்லையென்று மறுத்து

விட்டான். ஷாவும் சைனியத்தை 'எவ்விதமான தியாகத்திற்கும் தயாரா யிருக்கும்படி' சொல்லி வைத்தான். இரானில் உள்ள பிரதம மந்திரி பொறுத்த மில்லா சில குறைகளைச் சொல்லி வந்தான். முதலாவதாக இரானில் அன்னியர் கள் பதிவு செய்யப்பட்டு கவனிக்கப்படுகிறார்கள் என்றும் ஜெர்மானியர்கள் ஏற் கனவே குறைவாக இருந்ததோடும் அவர்களின் எண்ணிக்கையை வரவரக் குறைப் பதற்கான ஏற்பாடுகளை பிரிடனின் அபிப்பிராயப்படி இரான கவர்ன்மெண்டார் எடுத்துக்கொண்டிருக்கிறார்களென்றும் சாதித்தான். ஆனால் உண்மை வேறு விதமாகயிருந்தது. உள்ளே வந்த ஜெர்மானியர்கள் 'கொஞ்சம்' அல்ல 1,000-க் கணக்கில் இருந்தனர். அவர்களை வெளியேற்றுவதற்கான ஏற்பாட்டைச் செய்த தாக இரான் பிரதம மந்திரி சொன்னது மற்றவர்களுடைய 'கண்ணைத் துடைப் பதற்கு'த்தான். அன்னியர்களைப் பதிவு செய்வதென்ற காரியத்தை நாஸிகள் அப்போதைக்கப்போது லஞ்சம் கொடுத்து மீறிச் சென்றார்கள். இவைகளில் எல்லாவற்றைக் காட்டிலும் அதிகக் கெடுதலானது மற்றொன்று. அங்கிருந்த ஷா வெளிதேசங்களுக்குச் செல்லாததாலும் தன் தேசத்திலும் மற்றவர்கள் நெருங்கிக் காணமுடியாதபடி இருந்ததாலும், பல தேசங்களை அழித்து உலகெங் கும் பரவும் நாஸியின் தொந்தரவை அறியவில்லை போலிருக்கிறது. 'சரியான நடுநிலை' என்று அவன் சொல்லிவந்தது சரியானதுமல்ல, நடுநிலையுமல்ல. 'நடுநிலையை' அனுமதிக்க இது தருணமல்ல. ஏனென்றால் அது வெறும் பித்தலாட்ட முள்ள வார்த்தையாய்த்தான் முடியும்.

**அபாயம்.**—இந்த அபாய நிலையை நேசதேசத்தார்கள் நிச்சயமாகப் பார்த் துக் கொண்டிருக்கமுடியாது. சூழ்ச்சிகளினால் ஜெர்மானியர் உலகத்தில் மூன்றாவதாகப் பெரிதான எண்ணெய்ச் சுரங்கங்களை அபகரிக்கத் தீர்மானித்த துடன் இரானையே பிடிக்க எண்ணம் கொண்டார்கள் அதற்காக, தபால், தந்தி முதலிய கேந்திர ஸ்தானங்களை பிடித்துவிட்டார்கள். அதோடு நில்லாமல் இரானைப் பிடித்த பிறகு சந்தர்ப்பம் வாய்த்தவுடன் இந்தியா, அராபியா, இராக் துருக்கி, எகிப்து, உண்மையில் மத்தியக்கிழக்கு நாடுகள், அராபிக் நாடுகள் பூரா வும் பிடிக்கச்செய்த யத்தனமாகும். யூக்ரேனில் காகேஸஸை நோக்கி நாஸிகள் முன்னேறுவதால் அவர்கள் தொந்தரவு அதிகமாகலாம். ஆகையால் இனி அலக்ஷியமாக இருக்க முடியாது.

**ஆங்கில-ஸோவியத் உறுதிமொழிகள்.**—பிரிடனும் ருஷ்யாவும் சேர்ந்து, அதிகச் சங்கடமானாலும், அவசியமானதால், இந்த நடவடிக்கை எடுத்துக் கொண்டார்கள். முஸ்லீம் நாடுகளுக்கு, விசேஷமாக துருக்கிக்கும் இரானுக்கும், இது இரானின் பேரில் புரியப்பட்ட சண்டையே அல்ல, ஆனால் ஜெர்மன் அபாயத் திற்குத் தகுந்த தற்காப்பு முறையே ஆகுமென்று வாக்குறுதி அனுப்பப்பட்டது. ஆகையால் இரானின் எல்லைகளுக்கோ, உள் நாட்டுப் பொருளாதார திட்டத் திற்கோ, ஸ்வதந்திரத்திற்கோ ஒருவித தடையும் ஏற்படாது. மேலும் ஜெர்மானி யர் அபகரித்ததினால் அவஸ்தைப்படும் இரானியருக்கு ஆகாரங்களை ஸப்ளை செய்ய வும், ஜெர்மன் இஞ்ஜினியர்களை அகற்றி இரான் தொழிற்சாலைகள் தடையில்லாமல் அபிவிருத்தியடையவும் தேவையான ஏற்பாடுகளை பிரிடன் உடனே செய்யும்.

**ஜெர்மனியுடன் யுத்தம் புரிய சாதகங்கள்.**—ருஷ்யாவும் பிரிட்டனும் சேர்ந்து இரானில் பிரவேசித்ததினுல் இவ்விருதேசங்களுக்குள் அதிக நட்பு உண்டாகி ஜெர்மனியை எதிர்க்கவும், ஆர்க்டிக் முதல் பெர்ஸின் குடாவரையில் நேச தேசச் சைனியம் ஒன்று சேர்ந்து போர் புரியவும் முடியும். செங்கடல் வழியாகவும், பெர்ஸியன் கல்ப் வழியாகவும், ஸிரியா, துருக்கி, காகேஸஸுக்கும், போக்கு வரவு சாதனம் ஏற்படும். இப்பாதை வழியாகவும் பாஸ்ரா, பூஷைர், பாண்டர்-இ-ஷாப்பூர், டாஹ்ரன், டப்ரீஜ், வழியாகவும் இந்தியா, ஆஸ்திரேலியா, அமெரிக்காக்களில் இருந்து சாமான்கள் அனுப்ப சௌகரியமாகும்.

**ராணுவ ஏற்பாடுகள்.**—இம்மாதம் 25-ம் தேதி பிரிடிஷ் ருஷ்யத் துருப்புகள் ஒரே சமயத்தில் இரானில் பிரவேசித்தன. ருஷ்யத் சைனியம் காகேஸஸ்ஸி லிருந்து டப்ரீஜ்ஜை நோக்கி வந்தது. (ஜெனரல் ஸர் ஆர்ச்பால்டு வேவலி)ன் கீழ் இந்தியச் சிப்பாய்கள் மூன்று முனைகளில் இரானில் புகுந்தனர். இவர் இங்கி லாந்தின் அரசாங்கத்தாரிடமிருந்து நேரே கட்டளைபெறுகிருர். அம்மூன்று முனைகளில் ஒன்று கனேஜின் என்ற முக்கியமான எண்ணெய்ச் சுரங்கம் உள்ள இடம், மற்ருென்று கொற்றம் ஷார் என்ற வியாபாரப்பாதையுள்ள இடம், மூன்ருவது அபடன் என்ற எண்ணெய் சுத்தி செய்யும் இடம். ஒரு சிறு சைனியப் பகுதி பாண்டார்-இ-ஷாப்பூரை வியாபித்திருக்கிறது. இங்கே துறைமுகத்தி லுள்ள ஜெர்மன் இதாலியக் கப்பல்கள் கைப்பற்றப்பட்டன. அதே சமயத்தில் பிரிடிஷ், இந்திய சிப்பாய்கள் அடங்கிய ஒரு சைனியம் இராக்கிலிருந்து வந்து நாப்தி-இ-ஷா,க்வாஸ்-இ-ஷிராம் என்ற இடங்களிலுள்ள எண்ணெய்ச் சுரங்கங் களைக் கைப்பற்றியது. இரானிலுள்ள எண்ணெய்ச் சுரங்கங்களில் வேலைபார்த்து வரும் பிரிடிஷ் மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்க விமானத்திலிருந்தும் சைனியம் இறங்கிற்று. இதுவரை பிரிடிஷ் ஏற்பாட்டிற்கு ஒருவித எதிர்ப்பும் இல்லை. விமானங்களிலிருந்து பத்திரிகைகளும் போடப்பட்டன. இரானை யுத்தகளமாகச் செய்வதற்கு அல்லாமல் ஜெர்மானியர்களை வெளியேற்றுவதற்குத் தான் இந்த முஸ்தீப்பு எடுத்துக்கொள்ளப்பட்டது என்று அங்கிருப்பவர்களுக்குத் தெரிவிக்க இம்மாதிரி செய்யப்பட்டது. அப்பத்திரிகைகளில் இம்மாதிரி அச்சிடப்பட்டி ருந்தது :—

'இரானிய மக்களே! ஆயிரக்கணக்கான ஜெர்மானியர் உங்கள் தேசத்தில் இருக்கிருர்கள். சரியான திட்டத்துடன் இங்கிருக்கும் தொழிற்சாலைகளில் அவர் கள் முக்கிய ஸ்தானங்களைப் பெற்றிருக்கிருர்கள். ஹிட்லர் உத்தரவு கொடுத்த வுடன் உங்களுடைய எல்லா முக்கிய சாதனங்களையும் கைப்பற்றிவிடுவார்கள். இங்கு வந்திருக்கும் ஒவ்வொரு ஜெர்மானியனும் ஜெர்மன் அரசாங்கத்தாரின் அதிகாரத்தைப்பெற்று, தனித்தனியாக அதை நிறைவேற்றவே வந்திருக்கிருன். அவர்கள் இராக்கில் கலகம் செய்தது உங்களுக்குத் தெரியும். இங்கேயும் அதே மாதிரி செய்யத் தயங்கமாட்டார்கள்.

'பல ஐரோப்பிய நாடுகளிலும், படையெடுப்பதற்கு முன்னுல் ஜெர்மனி இங்கு செய்கிற மாதிரிதான் சூழ்ச்சி செய்தது. இங்கிருக்கும் அரசாங்கத்தார்கள் பல தடவைகளில் நாங்கள் கொடுத்த எச்சரிக்கைகளை கவனிக்கவில்லை.........

'இங்கே வந்திருக்கும் ஜெர்மானியர் யாவரும் வெளியே போகவேண்டும். இரானியர் தாங்களாக அவர்களை அனுப்பாவிட்டால் ருஷ்யாவும் பிரிடனும் நிச்சயமாக வெளியேற்ற ஏற்பாடு செய்யும் எங்கள் சைனியத்தை எதிர்க்க முடியாது.

'இரானிய மக்களே! உங்களுடன் எங்களுக்கு ஒருவித சண்டையுமில்லை. உங்கள் தேசங்களையோ, சாமான்களையோ அபஹரிக்க விரும்பவில்லை. இந்த பாழும் ஜெர்மானியர்களை விரட்டவே விரும்புகிறோம்.

'இரானிய மக்களே! பிரிடனும் ருஷ்யாவும் உங்கள் நடுவிலிருக்கும் ஜெர்மானியர்கள் சண்டைக்குக் காரணமாகையால் அவர்களை வேளியேற்றப் பார்க்கிறார்கள். நீங்கள் விரும்புவதைப்போலவே நாங்களும் இரானில் அமைதி ஏற்பட விரும்புகிறோம். உங்களுக்காகத்தான் சமாதானத்தை நாங்கள் விரும்புகிறோம் ஆகையால் நீங்களும் விரும்பவேண்டும்.

'யுத்தம் என்றால் என்ன? நார்வே, ஹாலந்து, பெல்ஜியம், போலந்து, ருமேனியா, கிரீஸ் முதலிய இடங்களில் ஜெர்மன் ஏஜெண்டுகள் ஜெர்மன் சைனியத்திற்கு வழி உண்டுபண்ணினார்கள். உடனே யுத்தம் வந்தது. ஜெர்மானியர்கள் அத்தேசங்களைப் பிடித்துக்கொண்டார்கள். முன்பு செழிப்பும், பணமும் வாய்ந்த நாடுகளெல்லாம் பட்டினிகிடக்கின்றன.

'எதிர்ப்பு சுலபமான இடங்களில் வெட்டிக்கிளிகள்போல் பாய்கின்றன. ஜயத்தோடுவரும் ஜெர்மானியருக்கு விளைவுபொருள்கள் கிடைக்கின்றன. தோல்வியுற்ற நாடுகள் பட்டினி கிடக்கின்றன. எதிர்ப்பு ஏற்பட்டால், நாடு பாழாகும்.

'பிரிடிஷ் துருப்புகள் இரானுக்கு வருவதற்குமுன் இரானில் ஜெர்மானியருக்கு பிடிப்பு ஏற்பட்டிருந்தால் அவர்களை முன்னேறவிடாமல் இருப்புப்பாதைகளையும் ரோடுகளையும், ஏராளமான பொருள் செலவழித்து நீங்கள் கட்டிய பட்டிணங்களையும், கிராமங்களையும் அழித்துவிடுவார்கள். ஆடுமாடுகளைக்கொன்று பயிர்களை அழித்து இரானைப் பாலைவனப் பொட்டலாகச் செய்திருப்பார்கள்.

'இராக், ஸிரியாவைக் காப்பாற்றியதுபோல் அவ்விதமான ஆபத்தில்லாமல் உங்களைக் காப்பாற்றுவோம். உங்கள் உணவு எங்களுக்குத் தேவையில்லை. ஸிரியாவில் செய்ததுபோல் எங்கள் ஆகாரங்களைக் கொண்டுவருவோம். உங்கள் சாமான்கள் எங்களுக்கு வேண்டியதில்லை. ஆனால் இராக்கில் செய்ததுபோல் எல்லா உங்கள் துறைமுகங்களையும் வியாபாரத்திற்கு லாயக்காகச் செய்வோம். உங்கள் தோழர்களாக நாங்கள் வருகிறோம். ஆனால் பொது விரோதியை விரட்ட தற்காப்பு செய்துகொண்டிருக்கிறோம்.'

புதிதாக கிடைத்த செய்திகளிலிருந்து ஷா இரானிலுள்ள சபையை மாற்றிக்கொண்டு துருப்புகளை யுத்தம் செய்யவேண்டாம் என்று சொல்லிவிட்டான். ஜெர்மானியர்களை ஒரு வாரத்திற்குள் விரட்டிவிடுவதாக டாஹ்ரானிலுள்ள பிரிடிஷ் மந்திரிக்குச் சொல்லிவிட்டான். ஆனால் சில இஞ்ஜினியர்கள்

மாத்திரம் உடனே அனுப்ப முடியாததால் பின்னுல் அவர்களை அனுப்பவும் ஒத்துக் கொண்டான். அப்படி இருந்தாலும் அச்சுநாட்டு இடைஞ்சல் பூராத் தீரும்வரை ஆங்கில-ருஷ்ய ராணுவ முஸ்தீப்புகள் இருக்கத்தான் இருக்கும்.

**ருஷ்ய யுத்தம்,** ஆரம்பித்து இது பத்தாவது வாரம். முக்கியமாயுள்ள எல்லாப்போர் முனைகளிலும் பலமாக யுத்தம் நடைபெறுகிறது; ஆனுல் எதிரிகளின் மூன்றும் பிளிட்ஸ் மின்னல் படையெடுப்பு சில அற்ப வெற்றிகளை அடைந்த போதிலும், ஏற்கனவேயே தளர்ந்து விட்டதென்று தெரிகிறது. மேலும் வரும் மாரிகாலத்திற்குள் மறுபடி நாலாம் பிளிட்ஸ் மின்னல்படை போருக்குக் கிளம்புமா என்பது இன்னும் தெரியவில்லை. இதுவரை எதிரிகள் கிங்கிஸிப், நோவாகிராட், கோமல், நிபுரோபிடிரான்ஸக், ஆகிய நாடுகளைப் பிடித்திருக்கிறுர்கள். ஆனுல் அவர்களுக்கு ஏற்பட்ட நஷ்டமோ மிக அதிகம்! அவர்களுக்கு இருபது லக்ஷம் ஜனங்கள் நஷ்டம். அதில் சிலர் கொல்லப்பட்டனர், சிலர் காயமடைந்தனர், இன்னும் சிலர் கைதியாக்கப்பட்டனர். இத்துடன் 8,000 டாங்குகளும், 10,000 பீரங்கிகளும், 7,200 விமானங்களும் நஷ்டம். ஜெர்மானியர்கள் இன்னும் சிலவாரங்களுக்குள் யுத்தத்தை முடிக்கவேண்டிய முயற்சிகளை எடுத்துக் கொண்ட போதிலும், இந்த ருஷ்ய யுத்தம் இன்னும் நீண்டகாலமும், அதிக சிரமமாகவும் நடந்து அடுத்த வசந்த காலம்வரை நீடிக்குமென்று தெரிகிறது. ஜெர்மனியின் சேமித்து வைத்த சாதனங்கள் வரவர குறைந்து கொண்டு போகின்றதையும், ஆனுல் ருஷ்யாவிற்கு மேலும் மேலும் விருத்தியடைகின்றதையும் பார்த்தால், நாஸியில் அழிவு சீக்கிரத்தில் ஏற்பட்டுவிடலாமென்று தோன்றுகிறது. ஹிட்லர் ஜயமடைய முடியாது; அழியும் ஹிட்லர் கடாசியாக பலத்த தாக்குதல்களைச் செய்யலாம், என்ன இருந்தாலும் அவன் அழிந்து கொண்டிருப்பது நிச்சயம். நாஸிகள் ஆக்கிரமித்த பிரதேசங்கள் பாழும் பொட்டலாய் கிடக்கின்றன. அந்த தேசத்தினர் பூராவும் பழிக்குப் பழி வாங்கத் தயாராகயிருக்கிறுர்கள்.

ருஷ்ய போர்தலைவர் கோனியவ் பெரிய எதிர்ப்பில் 48 மணி தேசகாலத்தில் 9 கிராமங்களை ஜெர்மானியர் வசமிருந்து திரும்பப் பிடித்துவிட்டார். 161-வது ஜெர்மன் சைனியப் பகுதியை தவிடுபொடிசெய்து ஏராளமான மனிதர்களையும் சாமான்களையும் கைப்பற்றினுர். இவர் அடைந்த ஜயம் ஜெர்மானியருக்குப் பெரிய தோல்வியாகும். எதிரியை பலமாகத் தாக்கியதின் பயனுக இதர போர் முனைகளிலிருந்த சைனியங்கள் மாற்றப்பட்டு அவ்விடங்களில் ஜெர்மன் படைகள் பலஹீனப்பட்டுவிட்டது. வடக்கே விரோதிக்கு முக்கிய லக்ஷியமாக இருந்த லெனின்கிராட் இப்பொழுது பலமான தற்காப்புள்ள ஸ்தலமாக மாறிவிட்டது. சமீபத்தில் மழை அதிகமாகப் பெய்ததால் அதற்குவரும் பாதைகளெல்லாம் சேருள்ளதாயும், சதுப்புப்பிரதேசங்களாகவும், மாறிவிட்டன.

நீபர் நதியை நோக்கிவரும் ஜெர்மன் எதிர்ப்புகள் அதன் மேற்குக்கரையிலேயே தடைபட்டன. அதிலுள்ள பெரிய அணை குண்டுகளால் உடைக்கப்

பட்டது. இதனால் ஜெர்மானியர்கள் தடைபட்டதுமல்லாமல் விவசாயத்திற்கு லாயக்கில்லாமல் யூக்ரேன் பள்ளத்தாக்குப் பூராவும் வெள்ளம் பெருகிவிட்டது.

பெரிய டொப்ரூக்கைப்போலவே ஒடெஸ்ஸாவும் சிரமத்தைத் தருவதால் நாஸி திட்டங்களுக்குக் கொஞ்சம் தடையேற்படுகிறது.

இப்பொழுது ருஷ்யர்களுக்குத் தேவையானது அனுதாபமோ, பெருமை பாராட்டுவதோ அல்ல. ஆனால் தளவாட உதவிதான். அதை பிரிடனும் யுனை டெட் ஸ்டேட்ஸூம் ஸப்ளை செய்யவேண்டிய ஏற்பாடுகள் செய்துவருகிறார்கள். ஸான்பிரான்ஸிஸ்கோவிலிருந்து விமானங்களுக்குத் தேவையான எண்ணெய் ஏழு கப்பல்களில் புறப்பட்டுவிட்டது. இவ்விதம் உதவுவதில் மற்றவர்கள் தலையிடு வதை விரும்பாமல் வ்ளாடிவாஸ்டாக் மூலம் வரக்கூடிய சாமான்களுக்கு ஒருவித தடையும் செய்யக்கூடாது என்று ஜப்பானுக்கு ருஷ்யா எச்சரிக்கை செய்துவிட் டது. சண்டை நீடிக்கும் என்று திட்டம்போட்டு சல்லிசாக அனுப்பும்படி வசந்த காலத்திற்குத் தேவையான சாமான்களுக்கு இப்பொழுதே அமெரிக்கா விடம் ஆர்டரும் கொடுத்திருக்கிறது.

## புதியதிட்டம் வேலை செய்யும் விதம்.

**லிதுவேனியா.**—ஜெர்மனிக்கு இரையான தேசங்களில் ஒன்று. சில வாரங் களுக்கு முன் பொதுமக்கள் சேர்ந்த சபை மூலமாக ராஜ்ஜிய பரிபாலனம் செய்ய அனுமதி கொடுக்கப்பட்டது. இவ்விதமாக அதைத் திருப்திசெய்து, மேமல் நதியிலுள்ள பாலங்களை ருஷ்யர்கள் தடுக்காமல் பார்த்துக்கொள்ளச் செய்ய உத் தேசம். அதன் பிறகும் சில உதவி சரியான நாஸி முறையில் கொடுக்கப்பட்டது. அதன்படியே அங்குள்ள தலைவர்கள் கைதியாக்கப்பட்டு, ராஜசபை கலைக்கப்பட்டு, தேசமும் ஒரு கொடுங்கோல் தலைவன்கீழ் வந்து விட்டது.

**போலந்தில்,** ஸ்காலா என்ற கிராமம் எரிக்கப்பட்டு கிராம வாசிகளும் சுடப்பட்டார்கள். ஏனென்றால் கம்யூனிஸ்ட் கக்ஷியைச் சேர்ந்த ஒருவன் ஜெர் மன் ராணுவ மோட்டாரைப் பார்த்து சுட்டானாம்.

**அல்ஸாஸ்,** பிரெஞ்சு பாஷையைப் பேசினாலும், அயல் நாட்டு தந்தி யில்லா செய்திகளைக் கேட்டாலும் கொல்லப்படுவார்களாம். தான் (Thann in Alsace) என்ற இடத்தில் மரத்தினால் அழகிய ஞாபக ஸ்தம்பம் ஒன்று ஜெர்மானிய ரால் கட்டப்பட்டு ஒரு சட்டியை அதன் தலையில் கவிழ்த்து, 'இங்கிலாந்தை ஹிட்லர் படையெடுப்பதற்காகக் கொடுக்கப்பட்ட தொப்பி' என்று பரிகாசமாக எழுதப்பட்டிருந்தது.

**ஒரு ஆகாசவாணி,** சிற்சில சமயங்களில் நாஸி ரேடியோ குறிப்புகளை நாஸிக்குவிரோதமான பேச்சுக்களைப்பேசி அடிக்கடி தடைசெய்கிறது. ஆகஸ்டுமீ 23-ம் தேதி அந்த சப்தம் இவ்வாறு கேழ்க்கப்பட்டது. "உலகிலேயே பெரிய தொழிற்சாலை பலம் வாய்ந்த அமெரிக்கா ஹிட்லருக்கு எதிராக இருக்கிறது. கடல் ஆதிக்கம் வாய்ந்த பிரிடனும் பெரிய பலமுள்ள நிலப்படை வாய்ந்த ருஷ்யா வும் ஹிட்லருக்கு எதிரில் நிற்கின்றன. ஆகையால் ஹிட்லர் இந்த யுத்தத்தை

எவ்வாறு ஜயிக்க உத்தேசிக்கிருன் ? நான் சொல்லுவதைக் கேளுங்கள், ஹிட்லர் இருக்கும்வரை உங்களுக்கு கஷ்டம்தான்விளையும், அவனைக்கொன்று இந்த அநர்த்தமான யுத்தத்தை முடித்து விடுங்கள்.''

இதன் இறுதியில் 'வி' இயக்கத்திற்கு கர்னல் பிரிடன் ஒரு புதுக்கொள்கையை ஆரம்பித்திருக்கிருர். "களவாணித்தனம் செய்யுங்கள். நாஸிகளுக்காக ஏன் இவ்வளவு சிரமம். உங்கள் ஆத்மாவிற்கும் குடும்ப யோகக்ஷேமத்திற்கும், தேசத்தின் நலத்திற்கும் பாடுபடுங்கள். அப்படிச் செய்யாமல் நாஸிகளுக்கு உழைத்தால் உங்களுக்கு விபத்துதான். இம்முறைகளை எவ்வளவுக்கெவ்வளவு மெதுவாகக் கைப்பற்றுகிறீர்களோ அவ்வளவு சீக்கிரத்தில் வெற்றிபெறலாம். பிரிடனிலிருக்கும் நாங்கள் வெற்றிபெருவதற்கான முயற்சிகளைத் துரிதப்படுத்துகிரும். ஐரோப்பாவிலுள்ள நீங்கள் முடிந்தவரை தாமதித்து உதவினுல் போதும்.''

பிரான்ஸில் கம்யூனிஸ்ட் தொந்தரவு அதிகரித்துவிட்டது. சாம்ஸ் எல்ஸி என்ற பிரதேசத்தில் மாத்திரம் இந்த சந்தேகத்திஞல் 1,000 பேர்கள் கைதி செய்யப்பட்டனர்.

பிரான்ஸில் தேசாபிமானங்கொண்டு தேசத்தின் ஸ்வதந்திரத்திற்காகப் பாடுபடும் ஒவ்வொருவனையும், கம்யூனிஸ்டு என்று பட்டப்பெயர் கொடுப்பது ஜெர்மானியருக்கு வழக்கமாய்விட்டது. உண்மையில் சில ராஜீயத் தலைவர்களைத் தவிர அதிகமான ஜனங்கள் ஜெர்மனிக்கு விரோதமான எண்ணங்கொண்டவர்கள் என்று ஏராளமான பேர்கள் கைதிசெய்யப்படுவதாலும் ஜெர்மனிக்கு விரோதமாகக் கலகம் செய்ததாலும் ஜெர்மன் ஆபீஸரைக்கொன்று ரகசிய சூழ்ச்சிகள் செய்வதாலும், தனி நியாய ஸ்தலங்கள் ஏற்படுத்துவதாலும், கைதியானவர்களை முன் சொன்ன காரியங்களுக்காகச் சுடுவதாக நாஸிகள் பயமுறுத்துவதாலும் தெரியவரும். பிரான்ஸில் மிகவும் துரதிர்ஷ்டம் வாய்ந்த லவாலைச் சுட்டதிலிருந்து அமைதிக் குறைவு ஏற்பட்டிருக்கிறது தெரியவரும். மார்ஷல் டீட் என்பவர் வர்ஸேல்ஸுக்கு அருகில் பால்கோலட் என்பவரால் புதன்கிழமை மாலை சுடப்பட்டார்.

## கடல் யுத்தம்.

ஜுலை ஆகஸ்டு மாதங்களில் கடலில் பிரிடிஷாருக்கு நஷ்டம் அதிகக் குறைவு. இக்குறைவினுல், அட்லாண்டிக் யுத்தம் ஜயிக்கப்பட்டது என்று சொல்ல முடியாத போனுலும் தாத்காலிகமாக வெற்றியடைந்ததாக நிச்சயம் சொல்லலாம். நீண்ட கோடை நாட்களில் நீர்மூழ்கி எதிர்ப்புகள் ஏற்படுவது சகஜம். ஆனுல் அவ்விதம் ஏற்படவில்லை. மேலும் ஐஸ்லாந்தை யுனைடெட் ஸ்டேட்ஸ் கைப்பற்றிக்கொண்டு கடலில் அமெரிக்கக் கப்பல்கள் காவல்புரிவதால் விரோதி நீர்மூழ்கிகளின் நடமாட்டம் குறைந்துவிட்டது. அட்லாண்டிக்கிலிருந்த ஜெர்மன் 'யூ' படகுகளும் ருஷ்ய யுத்தம் ஆரம்பித்தது முதல் பால்டிக் பிரதேசத்திற்குச் சென்றிருக்கலாம். ஆனுல் இவைகளைக்கொண்டு திருப்தியடையக் கூடாது;

நீர்மூழ்கிச் சண்டை விட்டுவிட்டு நடக்கும். ஏனென்முல் அந்தந்த சமயங்களில் கிடைக்கும் 'யூ' படகுகளின் எண்ணிக்கையும் புதிய தற்காப்பு முறைகளேயும், விரோதி மறுகுவதையும் பொருத்துத்தான் இச்சண்டை இருக்கிறது.

மிஸ்டர் எ. வி. அலெக்ஸாண்டர் கப்பற்படை இலாகாத் தலைவர், ஆகஸ்டு 22-ம் தேதி ஒலிப்பரப்பும்பொழுது, கொடுத்த கணக்கு, பிரிடனுக்கு நேசதேசங்கள் செய்யும் உதவியைத் தெரிவிக்கிறது. பிரிடிஷ் கப்பல்கள் சேராமல் நேச தேசங்களுடைய கப்பல்கள் மாத்திரம் 190 சண்டைக் கப்பல்கள். அவைகளில் 1,200 உத்தியோகஸ்தர்களும் 13,000 தலைவர்களும் இருக்கிறுர்கள். இவைகளில் நாசகாரிகளும் நீர்மூழ்கிகளும், சிறு கப்பல்களும் சேர்க்கப்பட்டிருக்கிறது. பிரி-பிரெஞ்சுக்குச் சொந்தமான நாசகாரிகளும், நீர்மூழ்கிகளும், சிறிய கப்பல்களும் இவைகளில் அடங்கியவை.

| | | |
|---|---|---|
| நார்வீஜியன் கப்பல்கள் | ... | 59. |
| ராயல் நெதர்லண்டு கப்பல்கள் | ... | 50. |
| போலிஷ் கப்பல்கள் | ... | 12. |

கிரேக்கர்கள், மற்றுமுள்ளவர்களின் வியாபாரக் கப்பல்கள் :—

| | | | | | |
|---|---|---|---|---|---|
| டச்சு | ... | 480 | கப்பல்கள். | 22,50,000 | டன். |
| நார்வே | ... | 720 | ,, | 32,50,000 | ,, |
| பிரெஞ்சு | ... | 92 | ,, | 4,00,000 | ,, |
| பெல்ஜியம் | ... | 54 | ,, | 2,00,000 | ,, |
| கிரீஸ் | ... | 240 | ,, | 1,00,000 | ,, |
| போலிஷ் | ... | 32 | ,, | 1,00,000 | ,, |

பிரிடிஷ் துணைக்கப்பல்களில் 25 வியாபாரக் கப்பல்கள் விரோதி விமானங்களாலும், நீர்மூழ்கிகளாலும், ஜிப்ரால்டருக்குப் போகும் வழியில், கேடிஸுக்கருகில் வெள்ளிக்கிழமை யன்று தாக்கப்பட்டன. அவைகளில் தாகஸ் நதி முகத்துவாரத்திற்கு 15 பத்திரமாய் வந்தன. 10,000 டன் நிறை உள்ள 7 கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. கார்வெட்டி என்ற ஒரே சண்டைக் கப்பல்தான் தொலைந்தது. ஆனுல் ஜெர்மானியர்கள் 25 கப்பல்களேயும் ஒரு நாசகாரியையும் மற்றும் இரண்டு யுத்தக் கப்பல்களேயும் மூழ்கடித்ததாகச் சொல்லுகின்றனர். பதினுறு சதுரமைல் உள்ள கார்க்காட்டை கடல் மார்க்கமாய் தாக்கிய தகவல் கிடைத்திருக்கிறது. இது வட ஸார்டீனியாவில் உள்ளது. இதற்குத் தீ வைத்து இந்த சாம்பலே ஹிட்லரின் மீசையென்று பரிகாசமாக நாஸியிடம் வர்ணிக்கப்படுகிறதாம்.

ஆர்க் ராயல் என்ற பிரிடிஷ் கப்பல் மூழ்கடிக்கப்பட்டதாக ஜெர்மன் ரேடியோ சொன்னபோதிலும் வாலன்ஷியாவிற்கு அருகில் ஒருமணி நேரம் நிர்ப்பயமாக சஞ்சரித்தது. இதாலிய சண்டைக் கப்பல்கள் இதைப் பார்த்துக் கொண்டிருந்தும் நெருங்கமுடியவில்லை. கடைசியாக சென்ற சில நாட்களாக நடு சமுத்திரத்தில் விரோதி விமானங்கள் தீவிரமாக நடமாடும் பொழுதே

மூன்றுநாள் ரூஸ்வெல்டும் சர்ச்சிலும் சந்தித்துப் பேசியது கடலாதிக்கம் பிரிடனிடம் தான் இருக்கிறதென்பதை தெரியப்படுத்துகிறது. இது நாஸிகளை அவமானப்படுத்தியதாகும். சர்ச்சில், பிரிடனுக்குத் திரும்பிவரும்பொழுது பிரிடிஷ் துணைக்கப்பல்கள் ஆகாரம் ஆயுதங்களை ஏற்றிக்கொண்டு சாவகாசமாக, உல்லாசப் பிரயாணமாக வந்ததைப் பார்த்தார்.

## பிரிடிஷ் விமானப்படை.

ஜெர்மன் பேரிலும், ஜெர்மனி ஆக்கிரமித்த நாடுகளிலும் பிரிடிஷ் விமானங்களின் எதிர்ப்பு குறையாமல் இருந்துவருகிறது. கீவ், இஜ்முடினிலுள்ள இரும்பு, எஃகு சாலைகள் ஹாலந்து, டஸ்ஸல் டார்ப்தான் சென்ற வாரத்தில் முக்கிய லக்ஷியங்கள். அதிகாரிகள் ஜெர்மன் மக்களை தைரியமாக இருக்கச்சொல்லி, இரவு பூராவும் பூமிக்குள் போகச்சொல்லுகிறார்கள். எதிரிகள் படையெடுக்கமாட்டார்களென்ற தப்பு அபிப்பிராயங்களைக் கொள்ளக்கூடாதென்றும், இந்தத் தொந்தரவுகள் இன்னும் இருக்குமென்றும் சொல்லிவருகிறார்கள்.

## பெரும் ஒலிபரப்பு.

ஞாயற்றுக்கிழமை சர்ச்சில் செய்த ஒலிபரப்பு முன் போலவே சிலாகிக்கக் கூடியதாயும், பிரசங்கத்தில் மேலானதும் உத்ஸாகத்தை மூட்டுவதாயும் முக்கியமான தருணத்தில் யாவரையும் ஒன்று சேர்க்கிரதாயும், சமயத்திற்கேற்ற விஷய சோதனை கொண்டதாயும், வரும்காலத்தில் சமாதானமும் நல்ல எண்ணமும் உண்டாக்கக்கூடிய வழிகளைக் காண்பிக்கிறதாயும் இருந்தது. அவர் பேச்சிலிருந்து எடுக்கப்பட்ட சில பாகங்கள் :—

## முக்கியமான கூட்டம்.

"இதனால் இக்கூட்டம் முக்கியமானது. இக்கூட்டமானது உலகில் தற்சமயம் வெற்றிபெற்று ஐரோப்பா முழுவதையும் ஆசியாவில் பெரும் பகுதியையும் தனது மாயைக்குட்படுத்தியிருக்கும் கெட்ட சக்திக்கு விரோதமாக உலகின் நல்ல சக்தியை எல்லாம் திரட்டுவதற்கறிகுறியாகவே இக்கூட்டமிருந்தது. குழப்பமும் அபாயமும் மிகுந்த இச்சமயத்தில் எல்லாக் கண்டங்களிலுமுள்ள உழைப்பாளி மக்களைத் துன்பத்திலிருந்து மீட்டி, நீதி ஸ்வதந்தர வழியில் செல்லுமாறு செய்து நற்கதிக்கு வழி காட்டும் வேலையை நாம் சுயநலமின்றி நாம் ஆங்கிலம் பேசும் ஜாதியார் மேற்கொண்டிருப்பதை இக்கூட்டம் உலகிற்கு எப்பொழுதும் காட்டும்.

## புலிக்கு உதவும் குள்ள நரிகள்.

"நாஸிகளது மிருகத்தனமான கோபம் யந்திர சாதனங்கள் இவற்றினால் ஐரோப்பா முழுவதையும் குலைத்துக் காலால் மிதித்து நசுக்கி யிருக்கிறார்கள். மிகக் கொடுமையான யுத்தக் கருவிகள், பெரும் துரோகம், ஈவிரக்கமின்மை இவையாவும் சேர்ந்து பல புராதனமான மக்கள், தேசங்கள், இவற்றின் உரிமைகள் சம்பிரதாயங்கள் இவற்றை இதற்கு முன்பு எந்நாளும் கண்டிராதபடி வீழ்த்தி நாசப்படுத்தியிருக்கின்றன. இக்கொடிய நாஸிப் பேய் ஆஸ்திரியர்கள் ஸெக்கு

கள் போலிஷ் மக்கள் நார்வேக்காரர்கள், டென்மார்க் வாசிகள், பெல்ஜியர்கள், டச்சுக்காரர்கள், கிரேக்கர்கள், குரோஷியர்கள், செர்பியர்கள். இவர்களையும் பெரிய பிரெஞ்சு மக்களையும் பிரமிக்கச் செய்து காலால் அறைந்து எழுந்திருக்க முடியாதபடி அழுத்திக்கொண்டிருக்கிறது. புலிக்கு உதவிய குள்ள நரிகளைப் போல் இதாலி, ஹங்கேரி, பல்கேரியா, ருமேனியா ஆகிய தேசங்கள் இந்த வேலையை மேற்கொண்டிருக்கின்றன. ஆனால் அவற்றின் உண்மை நிலைமையும் தோல்வியுற்ற நாடுகளின் நிலையிலிருந்து மாறுபட்டதாக இருக்கவில்லை. சீக்கிரம் இவையும் தோற்ற நாடுகளின் கதியினின்று வித்தியாசங் கண்டுபிடிக்க முடியாத நிலையை அடையும். ஸ்வீடன், ஸ்பெயின், துருக்கி ஆகிய தேசங்கள் நடுங்கி நிற்கின்றன. அடுத்தபடியாக நாஸி பேய் தங்களில் எவரை அறைந்து வீழ்த்துமென்ற சிந்தனையுடனிருக்கின்றன.

## இந்தத் தடவை சுலபமல்ல.

"தற்பெருமை, ஆதிக்க ஆசை இவற்றின் காரணமாக இப்பேய் 20 அல்லது 30 லக்ஷம் பேர்களுக்கு மேற்பட்டவர்களைத் துரிதமாக மடியும்படி உத்தரவிடுகின்றது. "ருஷ்யாவை இருந்தவிடம் தெரியாமல் அழியுங்கள்! ராணுவங்களை முன்னேறிச் செல்ல உத்தரவிடுங்கள்" என்பதே அவரது உத்தரவுகளாகும். இதற்கிணங்க வட துருவ சமுத்திரம் முதல் கருங்கடல் வரையிலுள்ள பிரதேசத்தில் சுமார் 60 முதல் 70 லக்ஷம் சிப்பாய்கள் கடும் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கின்றனர். இம்முறை இவரது முயற்சி சுலபமாக முடியப் போவதில்லை. ருஷ்யக் குடியரசின் படைகளும் ராணுவமும் தமது தேசத்தையும் வீடு வாசல்களையும் பாதுகாக்கக் கூடியிருக்கின்றனர். முதன் முறையாக நாஸி ரத்தம் பெரும் பிரவாகமாக ஓடியிருக்கிறது. ருஷ்யாவின் பெரிய சமவெளிகளில் 15 லக்ஷம் முதல் 20 லக்ஷம் நாஸித்துருப்புகள்வரை ருஷ்ய பீரங்கிகளுக்கிரையாகி மண்ணைக் கவ்வியிருக்கின்றனர். 2,000 மைல் நீளமுள்ள போர்முனையில் கடும்போர் நடக்கிறது. ருஷ்யர்கள் மிக்க ஊக்கத்துடன் போராடுகின்றனர். ருஷ்யப்போர் முனையைப் பார்வையிட்ட நமது ஜெனரல்கள் ருஷ்ய ராணுவத்தின் திறமையான ஏற்பாடுகளையும் அவர்களது யந்திர சாதனங்களின் மேன்மையையும்பற்றி ரிப்போர்ட் செய்திருக்கின்றனர். படையெடுப்பவர் ஆச்சரியமும் திகைப்புமடைந்திருக்கிறார். பெருவாரியான கொலைகள் லாபகரமாக இல்லை என்பதை முதன் முதலாக ஹிட்லர் இங்கேயே உணர்ந்திருக்கிறார். இதனால் அவர் மிக்க பயங்கரமான குரூரங்களை இழைத்துப் பதிலுக்குப் பதில் செய்கிறார்.

## தூரக்கிழக்கு ஆக்கிரமணம்.

"சென்ற ஐந்து வருஷங்களாக ஜப்பானிய ராணுவக் கோஷ்டிகள் ஹிட்லர் முஸோலினி முறைகளைப் பின்பற்றிச் சைனாவின் 50 கோடி மக்களை வீணாகத் துன்புறுத்தி வருகின்றனர். அதனைச் சைன சம்பவமெனக் கூறுகின்றனர். சைனாவின் தென்கடலில் ஜப்பானியர் கையை நீட்டிக்கேவலமான விஷி பிரான்ஸிடமிருந்து இந்தோ-சைனாவைக் கைப்பற்றினர். தங்கள் நடமாட்டத்தினால் ஸயாமிற்கும் சிங்கப்பூருக்கும் யுனைடெட் ஸ்டேட்ஸின் பாதுகாப்பிற்குட்பட்ட

பிலிப்பையின் தீவுகளுக்கும் சண்டை நடக்கிறது. இம்முயற்சி நிற்கவேண்டுவது நிச்சயம். இதனைச் சமாதானமான வழியில் தீர்த்துக்கொள்ளச் சகல முயற்சியும் செய்யப்படும். யுனைடெட் ஸ்டேட்ஸ் அளவிலாப் பொறுமையுடன் நியாயமும் சமரஸமும் வாய்ந்ததொரு ராஜியைச் செய்ய முயற்சி செய்கிறது. இந்தச் சமாதான ஏற்பாடு ஜப்பானின் நியாயமான நலங்களைப் பாதுகாக்க எவ்வளவு உறுதி மொழியளிக்க முடியுமோ அவ்வளவு உறுதி மொழியும் அளிக்கும். இந்த ராஜிப் பேச்சு வெற்றிபெறுமென நாங்கள் நம்புகிறோம். ஆனால், இவை வெற்றிபெறு விட்டால், நாம் யுனைடெட் ஸ்டேட்ஸுடன் தயக்கமின்றிச் சேர்ந்து கொள்ளுவோம்.

## லக்ஷியம்.

“சென்ற மஹா யுத்தத்தில் பிற்பகுதியில் நேச தேசத்தினர் கொண்ட மனோ பாவத்திற்கும் தற்போது அமெரிக்காவும் பிரிடனும் கொண்ட மனோபாவத்திற்கு மிடையில் 2 முக்கியமான வித்தியாசங்களிருக்கின்றன.

அவையாவன:—(1) தற்போது 2 தேசங்களும் இனி யுத்தமே ஏற்படா தென்று அனுமானிக்கவில்லை.

குற்றமுள்ள தேசத்தார்களைப் பலனுற நிராயுதபாணியாக்கி மற்றவர்களைத் தக்கபடி பாதுகாக்கவும் இதன்மூலம் எக்காலத்திலும் போர் ஏற்படாமல் போதிய படி முன் எச்சரிக்கை ஏற்பாடுகளைச் செய்யவும் உத்தேசித்திருக்கிறோம்.

(2) 1917-ம் வருஷத்தில் செய்ததுபோல அதிகப்படி வியாபார நிர்பந்தங் களினாலும், தடைகளினாலும் ஜெர்மன் வியாபாரத்தை அழிக்க முயற்சி செய்ய மாட்டோம். உலகினுடையவும் பிரிடன், யுனைடெட் ஸ்டேட்ஸினுடையவும் நலத் தையும் உத்தேசித்து எந்த தேசமும் செழிப்பற்ற நிலையிலிருக்கக் கூடாதென்றும் கண்ணியமான வாழ்க்கையை நடத்தும் உரிமை, எந்தப் பெரிய தேசத்திற்கும் அதன் மக்களுக்கும் இல்லாமல் செய்யக்கூடாதென்றும் நாங்கள் திட்டமாக அபிப்பிராயப்படுகிறோம். இவை தத்துவத்தில் பெரும் மாறுதல்களைச் செய் கின்றன. இதுபற்றி எல்லா தேசங்களும் ஆலோசிக்கவேண்டும்.

## புதிய ஐரோப்பிய நாடு.

“ஹிட்லர் ஏற்படுத்த விரும்பும் புதிய ஐரோப்பிய ஏற்பாடு என்ன? ஜன நாயக ஆட்சிமுறை பார்லிமெண்டுகள் மூலாதார ஸ்வதந்திரங்கள், ஸ்திரீ புருஷர் கள் கண்ணியமாக வாழப்பெற்றிருக்கும் உரிமை, தேசங்களின் சரித்திர பூர்வமான உரிமைகள் இவற்றிற்குப் பதில் பிரஷ்யாவின் கொடிய அடக்குமுறை ஆட்சியை ஏற்படுத்தி, 12 நாடுகளில் செய்வதுபோல ராஜீயப் போலீஸாரையும் சுடும் கோஷ்டியினரையும பந்தோபஸ்து முகாம்களையும் பின்னால்வைத்து தொழி லாளரை ஒரே மாதிரியான கட்டுப்பாட்டுக்குட்பட்டிருக்கும்படி செய்வதுதான் அதன் நோக்கம்.

## ஒடுக்கப்பட்டவர்களுக்கு சர்ச்சில் உறுதிமொழி.

"தீரமுள்ள நார்வேக்காரர்களே! மனச்சோர்வுறுதீர்கள். உங்கள் நாட்டிலிருந்து விரோதிகள் மட்டுமின்றி அவர்களது கையாட்களான அசுத்தமுள்ள துரோகிகளுமில்லாதபடி செய்யப்படுவார்கள். ஸெக்குகளே! உங்களது ஸ்வதந்தரம் உங்களுக்குத் திரும்பக் கிடைக்குமாறு செய்யப்படும்.

"போலிஷ்காரர்களே! உங்களது மக்கள் குரூரமானவர்களது துன்புறுத்தலை தீரமாக எதிர்த்து நிற்பதையும் உங்களது சிப்பாய்கள், மாலுமிகள், விமானிகள் இவர்களது தீரமும் மறக்கப்படமாட்டாது. உங்களது தேசம் மீண்டும் உயிர் பெற்று ஐரோப்பாவின் புதிய ஏற்பாட்டில் தனக்குரிய பதவியை வகிக்கும்.

"தீரமுள்ள பிரெஞ்சு மக்களே! நீங்கள் உங்கள் தலையைத் தூக்குங்கள், நீங்கள் உங்களது பிறப்புரிமையைத் திரும்பப் பெறுவதற்கு டார்லானும், லவாலும் இழைக்கும் அவமானச் செயல்கள் தடையாக இருக்க முடியாது. உறுதிவாய்ந்த டச்சு, பெல்ஜிய, லக்ஸம்பர்க் வாசிகளே! துன்புறுத்தப்பட்டு உதாசீனம் செய்யப்பட்ட யூகோஸ்லாவிய மக்களே! இதாலிய பிலிக்கர்களது ஆளுகைக்குட் படுத்தப்பட்டு அவமானப்படுத்தப்பட்டிருக்கும் கீர்த்திவாய்ந்த கிரேக்கர்களே! ஒரு அங்குலம்கூட (எதிரிக்கு) விட்டுக்கொடாதீர்கள்.

## ஒவ்வொருவராக நாசமாகிறார்கள்.

"அமெரிக்கா யுத்தத்திற்கு எவ்வளவு சமீபத்திலிருக்கிறதென்று கேள்வி கேட்கப்படுகிறது. அதற்கு ஹிட்லர் தான் பதிலளிக்கக்கூடும். அவர் யுனைடெட் ஸ்டேட்ஸ் மீது போர் துவங்காதிருப்பதற்கு அமெரிக்க ஸ்தாபனங்களின் மீதுள்ள அன்போ அன்றி சாக்கு போக்கு கண்டுபிடிக்க முடியாததோ காரணமில்லை. அமெரிக்காவைப் போருக்கிழுத்தால் தனக்கு விரோதமான முயற்சி இரட்டிக்கப் படுமென்ற அச்சம் அவரைத் தடுத்துவருகிறது. ஆனால் ஒன்றன்பின் ஒன்றாக ஒழிப்பதென்ற முறையை அவர் கையாளுவதுதான் இவ்வாறு செய்யாதிருப்பதன் முக்கிய காரணமாகும். இந்த தந்திரத்தினால் அடிமைப்படுத்தியிருக்கிறார்."

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேச தேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 18—8—41. (திங்கட்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | பகலில்.—3 காவல் புரியும் ஜெர்மன் கப்பல்கள்.—டச்சு (Dutch)க் கடற்கரைக் கப்பால். | ...... | 3 கப்பல்களும் மூழ்கடிக்கப்பட்டன. |
| | தொழிற்சாலை.—லிலி (Lille) ... | ...... | 3 பகல் பைடர் விமானங்கள். |
| | விமான எதிர்ப்புகள்.—பிரட்டானி (Brittany)யின் வடகரை. | ...... | ...... |
| | ஒரு விமான நிலயம், விரோதி சைனியம்.—வட பிரான்ஸ் (France). | 3 பகல் பைடர்கள். | சேதமாயின. |
| | இரவில்.—தொழிற்சாலைகள்-கொலோன் (Cologne), டுயிஸ்பர்க்கு (Duisberg). | ...... | பெருந்தீக்கள் மூட்டப்பட்டன. |
| | கப்பல் துறைகள்.—டங்கர்க் (Dunkirk). | ...... | ...... |
| | விரோதி விமான தளங்கள்.—விரோதி ஆக்கிரமித்த பிரதேசம். | 8 விமானங்கள். | ...... |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | துறைமுகம்.—ட்ரிபோலி (Tripoli) ... | ...... | தீக்கள் மூட்டப்பட்டன; எரிந்தது. |
| | 9,000 டன் நிறையுள்ள கப்பல்.—லாம்பெடுசா (Lampedusa) கடல் ஓரம். | ...... | ...... |
| | விரோதி ஸ்தானங்கள்.—கோண்டார் (Gondar) பிரதேசம். | ...... | ...... |
| | விமானம் கட்டும் யந்திரங்களும் கிட்டங்கிகளும்.—கோண்டார் (Gondar). | ...... | ...... |
| | கோட்டை.—டெபரெக் (Debarech) ... | நஷ்டமில்லை. | ...... |
| | **ருஷ்ய விமானங்களால்.** | | |
| | **கிழக்குப் போர்முனை.** | | |
| | விரோதி சைனியம்.—யுத்த ரங்கம் பூராவும். | ...... | ...... |
| | விமான எதிர்ப்புகள்.—போர்முனையில். | 12 விமானங்கள். | 38 விமானங்கள். |
| | **கருங்கடல் (Black Sea).** | | |
| | இரண்டு விரோதி சாமான் கப்பல்கள்.— | ...... | மூழ்கடிக்கப்பட்டன. |
| | **ஜெர்மனி (Germany).** | | |
| | ராணுவ லக்ஷியங்களும், தொழிற்சாலைகளும்.—பெர்லின் (Berlin). | ...... | ...... |

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; விமான படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|

**19—8—41.** (செவ்வாய்க்கிழமை).

## ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| லக்ஷியங்கள் | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம் | எதிரிகளின் விமான நஷ்டமும்; விளைந்த சேதமும் |
|---|---|---|
| காலையில்.—விமான எதிர்ப்பு—வட பிரான்ஸ் (France). | ...... | ...... |
| கரை ஓரத்திலிருக்கும் கப்பல்கள்.—ஆஸ்டெண்டு (Ostend). | ...... | அநேக கப்பல்கள் தாக்கப்பட்டு மூழ் கடிக்கப்பட்டன. |
| பகலில்.—ரயில் வண்டிகள் நிற்குமிடம்.—ஹேஸ்புருக் (Hazebrouck). | 3 பாம்பர் விமானங்களும், 12 பைடர் விமானங்களும். | 14 பகல் பைடர் விமானங்கள். |
| விரோதி கப்பல்கள்.—டச்சு (Dutch)க் கடற்கரைக்கு அப்பால். | ...... | ...... |
| இரவில் கப்பல் தளம்.—கீல் (Kiel). | ... (2 இரவு பாம்பர் விமானங்கள்.) | ...... |
| இதர ராணுவ லக்ஷியங்கள்.—மேற்கு ஜெர்மனி (Germany). | 2 இரவு பாம்பர் விமானங்கள். | ...... |
| விமான நிலயங்கள்.—ஆக்கிரமித்த பிரதேசம். | ... (2 இரவு பாம்பர் விமானங்கள்.) | ...... |

## இதாலிய ஆபிரிக்கா (Africa).

| லக்ஷியங்கள் | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம் | எதிரிகளின் விமான நஷ்டமும்; விளைந்த சேதமும் |
|---|---|---|
| விரோதி தங்குமிடமும், போக்குவரத்தும்.—ராஸல் மில்ஹ் (Rasel Milh). | ...... | ...... |

## ருஷ்ய விமானங்களால்.

### கிழக்குப் போர்முனை.

| லக்ஷியங்கள் | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம் | எதிரிகளின் விமான நஷ்டமும்; விளைந்த சேதமும் |
|---|---|---|
| யந்திரப்படை, காலாட்படை, பீரங்கிப் படை, தரையிலிருக்கும் விமானங்கள், போர் அரங்கம் பூராவும், சண்டையில் ஈடுபட்ட விமானங்கள். | 8 விமானங்கள். | 27 விமானங்கள். |

**20—8—41.** (புதன்கிழமை).

## ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| லக்ஷியங்கள் | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம் | எதிரிகளின் விமான நஷ்டமும்; விளைந்த சேதமும் |
|---|---|---|
| பகலில்.—விரோதி விமான நிலயம்—ஆக்நாரு (Aknar)க் கருகாமையில், ஹாலந்து (Holland). | ...... | ஒரு விமானம் நேரே தாக்குண்டது. |
| காவல்புரியும் கப்பல்கள்.—பிரிஸியன் (Frisian) தீவுகளுக்கருகில். | 2 பகல் பைடர் விமானங்கள்; ஆனால் 1 விமானி தப்பினார். | ...... |
| விமான எதிர்ப்புகள்.—இங்கிலீஷ் கால்வாய் (English Channel), வட பிரான்ஸ் (France). | (2 பகல் பைடர் விமானங்கள்; ஆனால் 1 விமானி தப்பினார்.) | 3 பகல் பைடர்கள். |
| இரவில்.—சாமான் ஸப்ளை கப்பல்—நார்வே (Norway)க் கடற்கரைக்கப்பால். | ...... | நேராகத் தாக்கப்பட்டது. |

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **20—8—41.** (புதன்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | **துறைமுகம், ரயில்வண்டிகள் நிற்குமிடம்.**—*பெங்காஸி* (Benghazi). | ...... | ...... |
| | **விரோதி 'டாங்கி' கள் சேமித்த இடம்.**—*மெர்ஸாலக்* (Mersaluck)*குக் கருகில்.* | ...... | *அநேக டாங்கிகள் நாசமடைந்தன.* |
| | **ஸிஸிலி (Sicily).** | | |
| | **விரோதிக் கப்பல்.**—*ஸிஸிலி* (Sicily)*க் கப்பால்.* | ...... | *சேதமடைந்தது.* |
| | **எண்ணெய் கப்பல்கள், கடல் விமானங்கள், பலூன்கள்.**—*ஸிராக்கூஸ்* (Syracuse) *துறைமுகத்தில்.* | 3 *விமானங்கள்;* 1 *விமானத்தில் உள்ள சிப்பந்திகள் தப்பினார்கள்.* | ...... |
| | **ருஷ்ய விமானங்களால்.** கிழக்குப் போர்முனை. | | |
| | **டாங்கிகள், துருப்புகள், ஆகாயச் சண்டைகள்.**—*போர் அரங்கம் பூராவும்.* | 12 *விமானங்கள்.* | 21 *விமானங்கள்.* |
| | **ஜெர்மனி (Germany).** | | |
| | **ராணுவ லக்ஷியங்கள்.**—*பெர்லின்* (Berlin). | *நஷ்டமில்லை.* | *பெருத்த சேதம்.* |
| **21—8—41.** (வியாழக்கிழமை). | | | |
| | **ஜேர்மனியும், ஜேர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | **காலையில்.—எஃகு, இரும்பு தொழிற்சாலைகள்.**—*ஹாலந்தி* (Holland) *லுள்ள,* இஜ்முடின் (Ijmuiden). | ...... | *வேலை செய்துகொண்டிருந்த யந்திரங்கள், தொழிற்சாலையிலுள்ள இதர இடங்கள் நேராகத் தாக்கப்பட்டன.* |
| | **பகலில்.—கைத்தொழில் லக்ஷியங்கள் ரயில் போக்குவரத்துகள்**—*ஸெயிண்ட் ஓமர்* (St. Omer), *பெத்தூன்* (Bethune) *பிரதேசங்கள்.* | ...... | *தீ மூட்டப்பட்டது, தகர்க்கப்பட்டது.* |
| | **விமான எதிர்ப்புகள்.**—*வட பிரான்ஸ்* (France). | ...... | ...... |
| | **இ. படகுகள்.**—இங்கிலீஷ் *கால்வாய்* (English Channel). | ...... | *அநேகம் சேதமாயின.* |
| | **ஆகாயச் சண்டைகள்.**—*வட பிரான்ஸ்* (France). | 14 *பைடர் விமானங்கள்.* | 1 *பைடர் விமானம்.* |
| | **விரோதிக் கப்பல்கள்.**—*பிரெஞ்சு* (French)*க் கடற்கரைக்கப்பால்.* | *நஷ்டமில்லை.* | ...... |

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **21—8—41.** | (வியாழக்கிழமை)—தொடர்ச்சி. | | |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | துறைமுகம், கப்பல்கள், பழுதுபார்க்குமிடங்கள்.—*ட்ரிபோலி* (Tripoli). | ...... | *பலத்த சேதம்.* |
| | விமானமிறங்கும் தளங்கள்.—*காம்பூத்* (Gambut), *மொனஸ்டீர்* (Monastir). | ...... | ...... |
| | விமான நிலயங்களிலுள்ள கட்டடங்கள், யந்திரங்கள்.—*அஸோஸா* (Asosa). | ...... | *கட்டடங்கள் தாக்கப்பட்டன.* |
| | மோட்டார் போக்குவரத்து—*அஸோஸா* (Asosa)*க்கருகில்.* | *நஷ்டமில்லை.* | ...... |
| | **ருஷ்ய விமானங்களால்.** | | |
| | **கிழக்குப் போர்முனை.** | | |
| | துருப்புகள், ஆகாயச் சண்டைகள்.—*போர் அரங்கம் பூராவும்.* | ...... | ...... |
| **22—8—41.** | (வெள்ளிக்கிழமை). | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | பகலில்.—விரோதிக் கப்பல்கள், காவல் புரியும் கப்பல்கள்—*இங்கிலீஷ் கால்வாய்* (English Channel.) | ...... | ...... |
| | ஹாங்கர்கள், தரையிலிருக்கும் விமானங்கள்.—*விரோதியின் விமான நிலயத்தில்.* | ...... | ...... |
| | விமான எதிர்ப்புகள்.—*இங்கிலீஷ் கால்வாய்* (English Channel), *வட பிரான்ஸ்* (France). | *நஷ்டமில்லை.* | 2 *பைடர் விமானங்கள்.* |
| | இரவில்.—தொழிற்சாலையுள்ள பட்டணம்—*மான்ஹீம்* (Manheim). | ...... | *தீக்கள் மூட்டப்பட்டன.* |
| | துறைமுகம்.—*லஹாவர்* (Lehavre). | ...... | ...... |
| | கப்பல் துறைகள்.—*ஆஸ்டெண்டு* (Ostend), *டங்கர்க்* (Dunkirk). | ...... | *சேதமாயின.* |
| | விமான நிலயங்கள்.—*ஆக்கிரமித்த பிரதேசம்.* | 1 *விமானம்.* | ...... |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | கடற்கரை ஓரம் மோட்டார் போக்குவரத்து.—*ட்ரிபோலி* (Tripoli)*க்கும், பெங்காஸி* (Benghazi)*க்கும் இடையிலுள்ள ரஸ்தா.* | ...... | *அநேக வண்டிகள் நாசமாக்கப்பட்டன.* |
| | துறைமுகம்.—*ட்ரிபோலி* (Tripoli). | ...... | ...... |

| தேதி. லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| **22—8—41.** (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி. | | |
| **ருஷ்ய விமானங்களால். கிழக்குப் போர்முனை.** | | |
| விரோதி வண்டிகள், பீரங்கி தளங்கள் காலாட்படை, தரையிலுள்ள விமானங்கள், ஆகாயச் சண்டைகள்.—*போர் அரங்கம் பூராவும்.* | ...... | ...... |
| **23—8—41.** (சனிக்கிழமை). | | |
| **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| துறைமுகங்கள், ஸப்ளைக் கப்பல்கள், பெட்ரோல் எண்ணெய்க் கிடங்குகள்.—*ட்ரிபோலி* (Tripoli). | ...... | *தீ மூட்டப்பட்டது.* |
| விமான நிலயம்.—*மெல்லாஹா* (Mellaha). | ...... | *சேதமாயிற்று.* |
| விரோதி தங்குமிடம்.—*ஸோலும்* (Sollam), *பார்டியா* (Bardia), *காம்பூத்* (Gambut) *பிரதேசங்கள்.* | ...... | ...... |
| இரண்டு விரோதி சிறு கப்பல்களும், ஒரு துணைக் கப்பலும்.—*ஸிட்ரா* (Sidra) *குடா.* | ...... | *ஒரு சிறு கப்பலும், துணைக் கப்பலும் மூழ்கடிக்கப்பட்டன. மற்றொன்று சேதமாயிற்று.* |
| **ருஷ்ய விமானங்களால். கிழக்குப் போர்முனை.** | | |
| விமான யுத்தம், விரோதி யந்திரப்படை, காலாட்படை, பீரங்கிப்படை.—*போர் அரங்கம் முழுதும்.* | *ஆகஸ்டு* 22, 23 39 *விமானங்கள்.* | *ஆகஸ்டு* 22, 23 52 *விமானங்கள்.* |
| **24—8—41.** (ஞாயிற்றுக்கிழமை). | | |
| **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| பகலில்.—எதிர்ப்புகள்—*வட பிரான்ஸ்* (France). | ...... | ...... |
| ஹாங்கர்கள், துருப்புகள் வாசஸ்தலம், துருப்புகள், பீரங்கிகள் இருக்கும் இடம்.—*வட பிரான்ஸ்* (France). | *நஷ்டமில்லை.* | *அதிகச் சேதம்.* |
| காவல் விமானம்.—*வட கடலில்* | ... ஒரு *விமானம்.* | ...... |
| இரவில்.—தொழிற்சாலை லக்ஷியங்கள்—*டஸ்ஸல்டார்ப்* (Dussel Dorf). | 3 *பாம்பர் விமானங்கள்.* | *அதிகச் சேதம்.* |

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **24—8—41.** | (ஞாயிற்றுக்கிழமை)—தொடர்ச்சி. | | |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | **விரோதி இடங்களும், துருப்புகளும்.**— டெபரெக் (Debarech) பிரதேசம். | ...... | பீரங்கியினால் தாக்கப் பட்டது. துருப்புக் களுக்கு அதிகச் சேதம். |
| | **ருஷ்ய விமானங்களால்.** | | |
| | கிழக்குப் போர்முனை. | | |
| | ஆகாயச் சண்டை, விரோதித் துருப்புகள்.– போரரங்கம் பூராவும். | 6 விமானங்கள். | 46 விமானங்கள். |

---

## *விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.*

| தேதி. | லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **19—8—41.** | (செவ்வாய்க்கிழமை). | | |
| | பிரிடன் **(Britain).** | | |
| | இரவில்.—ஒரு பட்டணம்—இங்கிலாந் (England)தின் தென்கிழக்குக்கரை. | ...... | 2 பேர் கொல்லப் பட்டனர்; சேதமில்லை. |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean). | | |
| | மால்டா (Malta). | 3 விமானங்கள். | சேதமில்லை. |
| **20—8—41.** | (புதன்கிழமை). | | |
| | பிரிடன் **(Britain).** | | |
| | இரவில்.—ஒரு பட்டிணம்—கிழக்கு ஆங்கிலியா (East Anglia). | ...... | ஒருவருக்கும் சேதமில்லை. |
| | ருஷ்யா **(Russia).** | | |
| | மாஸ்கோவிற்கு அடுத்தாற்போல். | 2 விமானங்கள். | சேதமில்லை. |
| | எகிப்து **(Egypt).** | | |
| | ஸூயஸ் (Suez) கால்வாய் பிரதேசம். | ...... | 2 பேர் கொல்லப் பட்டனர்; 28 பேர் காயமடைந்தனர். |
| **21—8—41.** | (வியாழக்கிழமை). | | |
| | பிரிடன் **(Britain).** | | |
| | இரவில்.—இங்கிலாந் (England)தின் கிழக்குக்கரை. | 1 விமானம். | முற்றிலும் சேதமில்லை. |
| | மால்டா **(Malta).** | | |
| | பாமாகுஸ்டா (Famagusta). | ...... | 1 கொல்லப்பட்டார்; 6 பேருக்குக்காயம். |

| தேதி. | லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **21—8—41.** (வியாழக்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | பிரிடிஷ் கப்பல்கள்.—எகிப்தி (Egyptian)ன் கடற்கரைக்கப்பால். | 2 பைடர் விமானங்கள்; மற்றவை சேதமாயின. | 4 பைடர் விமானங்கள்; 1 விமானி தப்பினார். |
| **22—8—41.** (வெள்ளிக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—கிழக்குக்கரை—இங்கிலாந்து (England). | 1 விமானம். | ...... |
| | இரவில்.—கிழக்குக்கரை—இங்கிலாந்து (England). | ...... | சேதமில்லை. ஒருவருக்கும் காயமில்லை. |
| | **ஹாலந்து (Holland).** | | |
| | ஆகாயச் சண்டை.—டச்சு (Dutch)க் கடற்கரைக்கப்பால். | 1 விமானம். | நஷ்டமில்லை. |
| **23—8—41.** (சனிக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—விமான நடமாட்டமேயில்லை... | ...... | ...... |
| **24—8—41.** (ஞாயிற்றுக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—இரண்டு இடங்கள்—கிழக்கு ஆங்கிலியா (East Anglia). | ...... | சொற்பச்சேதம். ஒருவருக்கும் காயமில்லை. |
| | இரவில்.—இங்கிலாந் (England)தின் கிழக்கு, வட கிழக்கு, தென் கிழக்கு பாகங்கள். | ...... | ரொம்ப சொற்பச் சேதம். |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | பிரிடிஷ் கப்பல்கள்.—மத்தியதரைக்கடல் (Mediterranean). | 1 விமானம். | சேதமில்லை. |
| **25—8—41.** (திங்கட்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—இரண்டு இடங்கள்—தெற்கு வேல் (Wales)ஸின் கரையில். ஓரிடம்.—இங்கிலாந் (England)தில் தென் மேற்குப் பிரதேசம். | ... | சேதமில்லை; கொஞ்சம்பேருக்குத்தான் காயம். |
| | **ஆபிரிக்கா (Africa)** | | |
| | டொப்ருக் (Tobruk) ... ... | ...... | சொற்பச்சேதம். |
| | **எகிப்து (Egypt).** | | |
| | அலக்ஸாண்டிரியா (Alexandria) ... | ...... | 3 பேருக்குக்காயம், சிறிது சேதம்தான். |

## துருக்கியை ஜெர்மனி பயமுறுத்தல்.

## பல்கேரியா ஜெர்மனிக்காக உபயோகப்படுத்தக்கூடும்.

## டார்டினல்ஸை தாக்குவதைப்பற்றிய பிரச்னே.

ஜூலை மாதம் 14-ம் தேதி இஸ்தான்புல்லிலிருந்து டெய்லி எக்ஸ்பிரஸின் விசேஷ நிருபர் எழுதியது :—

ஜெர்மனி பல்கேரியாவை உபயோகப்படுத்திக்கொண்டு துருக்கியின் பேரில் சண்டை துவக்கப்போவதற்கான சூசனங்கள் இருக்கின்றன. சில சூசனேயுள்ள துருக்கியர்கள் ஸ்டெரியிட்ஸுக்கும் இதனுல் அபாயம் ஏற்படுமென்று கூறுகிருர்கள்.

ராணுவ சமாசாரத்தை வெளியிட்டதற்காக, ஆறு இஸ்தான்புல் பத்திரிகைகள் நிறுத்தப்பட்டுவிட்டன. அவைகள் போக பாக்கியுள்ள பத்திரிகைகளில் துருக்கி எல்லேப்புறத்தில், பல்கேரியாவின் படைகள் திரட்டப்பட்டிருப்பதாகவும், ராணுவ முஸ்தீப்புகள் செய்யப்பட்டிருப்பதாகவும், மாஸ்கோவிலிருந்து 'டாஸ்' ஏஜென்ஸி மூலம் வந்த செய்தி, விமர்சனம் இல்லாமல் இவைகளில் பிரசுரமாகி இருந்தது.

ஜெர்மனியுடன் துருக்கி ஒப்பந்தம் செய்துகொண்டது முதல் துருக்கி ஜனங்கள் நிர்ப்பயமாயிருக்கிருர்கள். அதன் மந்திரிகளும், பிரதிநிதிகளும் கோடைகால வாஸஸ்தலங்களுக்குப் போய்விட்டார்கள். ஆதலால் இதைக் குறித்து உத்தியோகஸ்தர்களுடைய அபிப்பிராயம் தெரியவில்லே.

மாஸ்கோவிலிருந்து சில வாரங்களுக்கு முன் இந்த சமாசாரம் வந்து இருந்தால், துருக்கியில் பரபரப்பும் ஆக்ரோஷமும் உண்டாகியிருக்கும். ஆனுல் இப்பொழுது இந்த சமாசாரம் ரொம்பவும் அமைதியாகப் பாராட்டப்படுகிறது.

15, 16 சைனிய வகுப்புகளே பல்கேரியர்கள் இப்போது திரட்டியிருப்பதாக இஸ்தான்புல்லுக்கு செய்தி எட்டியிருக்கிறது. பலமான ஜெர்மானியர்களின் மோட்டார்படையும் யந்திரப்படையும் சேர்ந்து அங்கு இருக்கின்றன. இருந்த போதிலும், ஸ்டெரியிட்ஸைத் தாக்க இவை போதாது.

ஆனுல், ஜெர்மானியர்கள் இப்பொழுது ருஷ்யாவைத் தாக்கிக்கொண்டிருப்பதால், ஸ்டெரியிட்ஸ் ஜலசந்தியில் புதிதாக ஓர் போர்முனேயை உண்டாக்கிக் கொள்ளமாட்டார்களென்று, அவர்களுக்குத் தெரியும். ஸ்டெரியிட்ஸைத் தாக்கினுல் ஜெர்மானியர்களுக்குத் துருக்கியுடன் விரோதம் ஏற்படும்.

ருஷ்யாவின் தெற்குக் கரையில், ஜெர்மனி தன்னுடைய கப்பற்படையை கருங்கடல் மார்க்கமாய்க்கொண்டுபோய்வைக்கவும், காகேஸஸைப் பக்கத்தில் இருந்து தாக்கவும், ஸ்டெரியிட்ஸை தாராளமாக உபயோகிக்க ஜெர்மனிக்கு ஆசையுண்டு. ஆனுல் துருக்கியை சண்டைக்கிழுத்து, ஸ்டெரியிட்ஸைக் கைப்பற்றுமா, என்பது சந்தேகம்.

## ‘ஜெர்மன் ஆகாய விமானிகளின் நஷ்டம்.’

## ‘விமானிகளை கூட்டம் கூட்டமாக ஒரே சமயத்தில் பழக்குவது அனுபவ சாத்தியமானதல்ல.’

பிரிடிஷார்களால் குறைந்தது 6,000 விமானங்களும், நேசதேசத்தார்களால் 1,500 விமானங்களும், ஜெர்மனிக்கு நஷ்டமென்று “டைம்ஸ்” ஆகாய யுத்த நிருபர் மதிக்கிறர். இந்த எண்ணிக்கையில் சண்டைகளில் சேதமடைந்தவைகளும், எதிர்க்கப் புறப்படும்பொழுதும், திரும்பி வரும்பொழுதும் முறிந்தவைகளும், பழக்கும்பொழுது விபத்துகள் ஏற்பட்டவைகளும், சேர்ந்தவைகளல்ல. இவைகளினுல் ஜெர்மனிக்கு 18,750 விமான சிப்பந்திகள் நாசமடைந்திருக்க வேண்டுமென்று தீர்மானிக்கலாம்.

அநேகமாக ஜெர்மன் ஆகாய விமானங்கள் குவியல் குவியலாகச் செய்யப்பட்டவை. 7,000 அல்லது 8,000 விமானங்கள் சேதமடைந்தால்கூட, கைத்தொழில் மேம்பாடான முறையில் திட்டம் செய்திருந்தாலும், அதற்கு வேண்டிய தளவாடங்கள் போதுமான அளவு இருந்தாலும்தான், மாதத்தில் ஆயிரக்கணக்கான புதிய விமானங்கள் செய்யக்கூடும். ஆனுல் சென்ற ஒரு வருஷத்திற்கு மேற்பட்டு பிரிடிஷ் விமானப்படை, எதிரியின் தொழிற்சாலைகளை எதிர்த்து வெடிகுண்டுகளினுல் தாக்கியும் அவைகளுக்கு சாமான்கள் போய்ச் சேராமல் போக்குவரத்துகளை தடுத்து வந்திருப்பதை நாம் ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டும்.

விமானங்கள் கூட்டம் கூட்டமாக செய்யப்பட்ட போதிலும் ஜெர்மானியர்களுக்காவது வேறு யாருக்காவது விமானங்களை செலுத்தவோ, வெடிகுண்டுகளைப் போடவோ, பீரங்கிகளைப் பிரயோகிக்கவோ, ரேடியோ ஒலிபரப்பு மூலம் பேசவோ, அநேக மனிதர்களை ஏககாலத்தில் பழக்கிக்கொடுக்க உபாயம் கண்டு பிடிக்க முடியாது. இதில் பிரிடிஷார் நிகரற்றவர்கள். சுமாராகப் பழக்கிக்கொள்ளும் காலத்தை என்ன சுருக்கினுலும், குறைந்தபக்ஷம் விமானப்படைக்கு ஆறு மாதத்திய பயிற்சி வேண்டும். அதற்குப் பிறகும் அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டிய விஷயங்கள் அநேகம் இருக்கின்றன. ஜெர்மனிக்கு வருஷம் பூராவும் விமானப் பயிற்சி அளிப்பதற்கு ஹேதுகரமான இடம் கிடையாது. ஆனுல் கனடாவில் வருஷம் பூராவாக விமானப் பயிற்சி பெறலாம். அங்கு சீதோஷ்ண ஸ்திதிக்கு தக்கவாறுதான் பயிற்சியடையலாம். ஏனென்றுல் மாரிகாலத்தில் விமானப் பயிற்சி பெறக்கூடிய காலம் மிகவும் சொற்பம். ஆனதால் பன்னிரண்டு மாதங்களும் பயிற்சியடையவேண்டிய ஏற்பாட்டை, பிரிடன் செய்ததற்கு இது ஒரு முக்கியகாரணம்.

ருஷ்யாவைத் தாக்க ஆரம்பித்ததுமுதல் வடக்கு பிரான்ஸ், ஹாலந்து, பெல்ஜியம், நார்வே, இந்த இடங்களிலிருந்த விமானங்களை ஜெர்மனி குறைத்துவிட்டது. சமீபத்தில் இராக்காலங்களில் நடக்கும் விமானப்போரில் பிடிபட்டிருக்கும் ஜெர்மன் விமானப்படையில் பயிற்சிசாலையிலிருந்துவந்த சிறுவர்

களாகவே இருக்கிறார்கள். அவர்களுக்கு அனுபவம் போராது. சென்ற சில வாரங்களாக பகல் காலத்தில் ஜெர்மனி ஆக்கிரமித்த பிரதேசத்திலும், ஜெர்மனியிலும், நாம் செய்த விமானப்போரில், எங்களை எதிர்க்க வந்த "பைடர்" விமானிகள் சிலநாட்களுக்கு முன்வரை பள்ளிச் சிறுவர்களாகவே இருந்தார்கள். அவர்கள் தங்களுக்குப் பயிற்சி இல்லை என்று நிரூபித்துக் காட்டினார்கள். நம்முடைய பலமான தாக்குதலை அச்சிறுவர்களால் எதிர்க்கமுடியாததால் கோயரிங் தன் இஷ்டத்திற்கு விரோதமாக கிழக்குமுனையில் சண்டையிட்டுக்கொண்டிருக்கும் பயிற்சி வாய்ந்தவர்களை இங்கு வரவழைக்கும்படி நேரிட்டிருக்கிறது.

இக் காரணங்களினால் பயிற்சியடைந்த ஜெர்மன் விமானிகளுக்கு அதிக நஷ்டம் ஏற்பட்டிருக்கும். ருஷ்யாவில் நடக்கும் போரில் ஜெர்மனிக்கு அதிக சேதம் உண்டாகி இருக்கவேண்டும். சரியானபடி எண்ணிக்கையில் இவ்வளவென்று சொல்ல முடியாமல் போனாலும், விமானிகளிலும், விமானங்களிலும் ஜெர்மனிக்கு இந்த முன்னேற்றத்தில் ஏராளமான நஷ்டம் ஏற்பட்டிருக்கிறதென்பதற்குப் போதுமான அத்தாக்ஷி இருக்கிறது.

---

## மத்தியதரைக்கடலில் யுத்தம்.

## ஒரு துருக்கியர் சுருக்கமாக எழுதியது.

## ஜெர்மனியின் கடைசிபலம்.

1—6—41உயுள்ள இஸ்தான்புல் பத்திரிகை "ஸன் டெலிகிராப்பில்" இ. ஜ. பெனிட்ஜி எழுதியது.

மத்தியதரைக்கடலிலிருந்து பிரிடிஷ்காரரைத் தோற்கடித்து வெளியிலனுப்புவதென்றால் அவர்களை, ஆபிரிக்கா, அராபியா, ஆசியாமைனர் இந்த ஊர்களிலிருந்தும் வெளிக்கடத்தினதாகும். அதன் முடிவு தூரக் கீழ்திசையிலும், இந்தியாவிலும், மத்திய ஆசியாவிலும், பிரிடிஷாரின் கௌரவம் அழிந்ததாகும். ஜப்பானையும் ருஷ்யாவையும் சண்டையிடும்படி தூண்டிவிட்டதாகவும் ஆகும். பிற்பட்டு இங்கிலாந்தும் அமெரிக்காவும், சண்டையிட அட்லாண்டிக்கிலும் பிரிடிஷ் தீவுகளிலும்தான் சேரமுடியும். உலக ஆதிக்கத்தை விரும்பும் அச்சு நாடுகளின் திட்டமும் பூர்த்தியானதாகும். சண்டையும், வெகு வருஷங்கள் நடக்கும். நமது தரப்பில் எதிரியைச் சோர்வடையும்படி செய்யும் தந்திரங்களையும் மாற்ற, ஜெர்மனி ஒருவழி கண்டுபிடிக்கும்.,

ஆனபோதிலும் ஜெர்மனி தன் எண்ணத்தைப் பூர்த்திசெய்யக்கூடிய மார்க்கத்தில் இருப்பதாகக்கூட நம்ப தற்கால நிலைமையில் யாதொரு காரணமும் புலப்படவில்லை. ஜெர்மனி ஆரம்பித்து நடத்திவரும் இந்தப்போர், கஷ்டமான நிலைமைக்கு வந்திருக்கிறது. ஐரோப்பா பூராவும் ஜெர்மனியின் ஆதிக்கத்தில் இருக்கிறது. இப்பொழுது ஆயிரக்கணக்கான கஷ்டங்களிலும், இடையூறுகளிலும் ஜெர்மனி அகப்பட்டுக்கொண்டு தவிக்கிறது. அநேக வருஷங்களாக முஸ்தீப்பு செய்து ஜெர்மனி திடீரென்று ஐரோப்பாவைத் தாக்கி சுலபமாக

ழயித்துவிட்டது. ஆனால் சண்டை சமுத்திரத்தைத் தாண்டி அப்பால் நடக்கிறது. ஓதிலிருந்து புதிய கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. எல்லாக் கண்டங்களையும் ஆளவேண்டுமானால் முதல் முதலாகச்சுற்றிலுமுள்ள கடலின் ஆதிக்கம் வேண்டும். ஜெர்மனி அதன் குடைப்படைகளையும், விமானங்களையும், நாசகாரிகளையும் நம்பியிருக்கின்றது. இதர கண்டங்களை அடிமையாக்க நூற்றுக்கணக்கான மைலுக்கப்பால் சைனியங்களை மேற்சொன்ன சாதனங்களைக்கொண்டுமட்டும் எடுத்துச் செல்லமுடியாது.

ஜெர்மனி பிடிவாதமாகவும், தனக்கு சம்பவித்த மிகுந்த நஷ்டத்தையும், கவனியாது, தன் எண்ணத்தைப் பூர்த்திசெய்ய இன்னும் பிரயத்தனப்படுகிறது. முடிவில் ஜெர்மனிக்கு சாதகமேற்படுமென்று நினைப்பதற்கிடமில்லை.

தன்னுடைய படைகள் பூராவையும் திரட்டி மத்தியதரைக்கடலிலிருந்து பிரிடிஷ் கப்பற்படையைத் துரத்த, ஜெர்மனி பிரயத்தனப்படுகிறது. அது தன்னுடைய மூல பலத்தை எல்லாம் சண்டைக்கனுப்பி, சரத் காலத்திற்குள் ஜயிக்க யத்தனப்படுகிறது.

ஆனால் பிரிடன் மத்தியதரைக்கடலில் தன் ஆதிக்கத்தை நிலை நிறுத்தப் பிரயத்தனப்படுகிறது. இது கஷ்டமாக இருந்தபோதிலும் பிரிடிஷார் சரத் காலம் வரை சமாளித்துக்கொள்வார்களென்பதற்கு சூசகம் இருக்கிறது. அவர்கள் அம்மாதிரி சமாளித்துக்கொண்டால் மாரிகாலத்தில் போராடலாமென்று பிரிடன் நம்பியிருக்கிறது.

மாரிகாலத்தில் பிரிடிஷாரின் பலம் அதிகமடையும். அவர்கள் போக்கு வரத்து தாராளமாகவும் அதிகமாகவும் இருக்கும். ஏனெனில் அதற்குள் அமெரிக்காவிலிருந்து பூர்ண உதவி அவர்களுக்கு வந்துவிடும்.

இம்மாதிரி செய்ய, இப்பொழுதுள்ள நிலைமையை பிரிடன் எப்பாடுபட்டும் பாதுகாத்துக்கொள்ளவேண்டும். அடுத்த மாரிகாலத்தில் ஜெர்மனி தன்னுடைய எண்ணத்தைப் பூர்த்தி செய்யாவிடில் ஜெர்மனியின் நிலைமை ஆபத்துத்தான்.

---

# அச்சுநாட்டு ஒலிபரப்புப் பொய்களும் அவைகளுக்கு மறுமொழிகளும்.

## இந்தியாவுக்கும், சமீபக்கிழக்கு நாடுகளுக்கும் செய்யும் ஒலிபரப்பின் வியாக்கியானம். ஆகஸ்டு 11—17, 1941.

### ஆழ்ந்து கவனிக்கவேண்டியது.

“இந்தியர்களின் பொருளாதார நிலை நாளுக்குநாள் கெடுதலை அடைந்து வருகிறது”
(ஹிந்துஸ்தானியில் ஜெர்மன் செய்தி, ஆகஸ்டு 12)

ஒருவருஷத்தில் மாத்திரம் இந்தியாவில் பூரா செய்யப்பட்டதும், ஒரு பாகம் செய்யப்பட்டதுமான சாமான்களின் ஏற்றுமதி 33-கோடி, 63லக்ஷ ரூபாய்க்கு அதிகரித்தது. ரப்பர் சாமான்கள் 11-மடங்கு அதிகமாகயும், பஞ்சுநூல் இரண்டு மடங்கும், சணல், இரும்பு, எஃகு, மருந்து தோல் சாமான்கள் விசேஷமாக அதிகமாயும் ஏற்றுமதி செய்யப்பட்டன.

“இன்று இந்திய அரசாங்கத்தார் பயமுறுத்தி இந்திய உணவுப் பொருள்களைக் கொள்ளையடித்து இங்கிலாந்து, எகிப்து, மலேயா நாடுகளுக்குக் கப்பல்களில் அனுப்புகிறார்கள். அதனால் ஸிந்து, பம்பாய் மகாணங்களில் பஞ்சம் வந்திருக்கிறது”
(ஹிந்துஸ்தானியில் ஜெர்மன் செய்தி, ஆகஸ்டு 12.)

வெளிநாடுகளிலுள்ள இந்தியத் துருப்புகளுக்கு உணவுக்காகத்தான் இவ்விதம் செய்யப்படுகிறது. இதன் கிரயத்தை இந்திய மக்கள் பொருத்துக் கொள்ளவில்லை. யுத்தரங்கங்களுக்கு அனுப்பப்படும் உணவு எல்லாம் இங்கிலாந்தின் செலவில் அனுப்பப்படுகிறது. இந்தியாவில் இந்தியத் துருப்புகள் இருக்கும்பொழுது சாப்பிடக்கூடிய அளவுதான் வெளியே அவர்களுக்கு அனுப்பப்படுவதால் இதனால் இந்தியாவில் பஞ்சம் வந்துவிடாது.

### அஜாக்கிருதையான உபமானம்.

“பிரிடனுக்கு டங்கர்க் சண்டை முடிந்ததுபோலவே ருஷ்யர்களுக்குப் பாதகமாக ஸ்மாலென்ஸ்க் சண்டை முடிந்தது”.
(இங்கிலீஷில் ஜெர்மன் செய்தி, ஆகஸ்டு 13.)

கோயபல்ஸ் செய்யும் பிரசாரத்திற்குத்தான் பாதகம். டங்கர்க் யுத்த சமயத்தில் (மே 28.)
“இப்பொழுது பிரிடன் தன் துருப்புகளை வெளியேற்ற முடியாது” என்று சொன்னான். அது பிசகானதுபோல இப்போது சொல்லுவதும் பிசகுதான். டங்கர்க்குப்பிறகு ஒரு வருஷமாகியும் நாம் தரியமாக இருப்பதுபோல் ருஷ்யாவுக்கும் அந்த நிலையேற்பட்டால் சந்தோஷம்தான்.

## துருக்கி, எகிப்துபேரில் அவதூறு.

" துருக்கிக்கு யுத்தம் வந்தால் உதவுவதாக பிரிடிஷ்காரர்களும் ருஷ்யர்களும் அனுப்பித்த தகவலை அதிகார வர்க்கத்தார் அங்கீகரிக்கவில்லை... பிரிடிஷ் உதவியை துருக்கி மறுத்துவிட்டது... துருக்கியை இனி ஏமாற்ற முடியாது,

(பெர்ஸியன் அராபிய பாஷைகளில் ஜெர்மன் செய்தி, ஆகஸ்டு 15.)

இதற்கு அரைமணி முந்திதான் உருது பாஷையில் உள்ள அங்காரா ஒலிபரப்பிலும், பெர்ஸியன், அராபிக் 'யால்ச்சின்' தலையங்கத்திலும் இவ்விதம் இருந்தது. " இந்தக் குறிப்புகள் எல்லாவிதமான தப்பு அபிப்பிராயங்களை மாற்றுகின்றன. இவ்விதமாக நம் சிநேகிதர்கள் உதவுவதாகச் சொன்னது உண்மையான சந்தோஷத்தை அளிக்கிறது.........நம் நேயநாடுகள் ஆறுதல் அளிக்கும் வார்த்தைகள் திருப்தி செய்கின்றன.

# புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

## பிரஸங்கம் 59—(2-வது பிரிவு).

1941—

| | | | | | மணி. |
|---|---|---|---|---|---|
| ஆகஸ்டு | ...30, சனிக்கிழமை ... | டவுன் ஹால் | ... | மாலை | 6.30 |
| | 31, ஞாயிற்றுக்கிழமை. | காலேஜ் (A) ஆங்கிலம் | ... | காலை | 10.15 |
| | | வயலோகம் | ... | மாலை | 6.00 |
| | | குடுமியாமலை | ... | ,, | 6.30 |
| செப்டம்பர் | ...1, திங்கட்கிழமை ... | நச்சாந்துபட்டி | ... | ,, | 6.00 |
| | | விராச்சிலை | ... | ,, | 6.30 |
| | 2, செவ்வாய்க்கிழமை | நல்லூர் | ... | ,, | 6.00 |
| | | மண்டையூர் | ... | ,, | 6.30 |
| | 3, புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம் | ... | காலை | 10.00 |
| | | காலேஜ் (B) தமிழ் | ... | ,, | 10.15 |
| | | ராணி பெண்பாடசாலை | ... | ,, | 10.15 |
| | | திருமயம் | ... | மாலை | 6.00 |
| | | கோனபட்டு | ... | ,, | 6.30 |
| | 4, வியாழக்கிழமை. | பனையப்பட்டி | ... | ,, | 6.00 |
| | | ராங்கியம் | ... | ,, | 6.30 |
| | 5, வெள்ளிக்கிழமை... | ராஜகிரி | ... | ,, | 6.00 |
| | | விராலிமலை | ... | ,, | 6.30 |

## பிரஸங்கம் 60—(3-வது பிரிவு).

| | | | | |
|---|---|---|---|---|
| 6, சனிக்கிழமை ... | டவுன் ஹால் | ... | மாலை | 6.30 |
| 7, ஞாயிற்றுக்கிழமை. | ஆலங்குடி | ... | ,, | 6.00 |
| | ராசியமங்கலம் | ... | ,, | 6.30 |
| 8, திங்கட்கிழமை ... | காலேஜ் (A) ஆங்கிலம் | ... | காலை | 10.15 |
| | திருவப்பூர் | ... | மாலை | 5.30 |
| | குழிபிரை | ... | ,, | 6.00 |
| | செவலூர் | ... | ,, | 6.30 |
| 9, செவ்வாய்க்கிழமை. | கோட்டைக்காடு | ... | ,, | 6.00 |
| | கரம்பக்குடி | ... | ,, | 6.30 |
| 10, புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம் | ... | காலை | 10.00 |
| | காலேஜ் (B) தமிழ் | ... | ,, | 10.15 |
| | ராணி பெண்பாடசாலை | ... | ,, | 10.15 |
| | ராமச்சந்திரபுரம் | ... | மாலை | 6.00 |
| | ராயவரம் | ... | ,, | 6.30 |
| 11, வியாழக்கிழமை ... | அன்னவாசல் | ... | ,, | 6.00 |
| | கீழக்குறிச்சி | ... | ,, | 6.30 |
| 12, வெள்ளிக்கிழமை... | வாளரமாணிக்கம் | ... | ,, | 6.00 |
| | ஏம்பல் | ... | ,, | 6.30 |

Sri Brihadamba State Press, Pudukkottai, 3,000—30-8-41.